# தமிழ் நிகண்டுகள் உள்ளடக்கமும் வரலாறும்

பதிப்பாசிரியர்கள்
அ. சித்திரபுத்திரன்
இரா. திருநாவுக்கரசு
மா. பார்வதியம்மாள்

பஎ 7200

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# தமிழ் நிகண்டுகள்

# உள்ளடக்கமும் வரலாறும்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ. சித்திரபுத்திரன்
முனைவர் இரா. திருநாவுக்கரசு
முனைவர் மா. பார்வதியம்மாள்

அகராதியியல் துறை

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர்**

ISBN : 978-81-7090-414-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 371

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழ் நிகண்டுகள் உள்ளடக்கமும் வரலாறும் |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் அ. சித்திரபுத்திரன்<br>முனைவர் இரா. திருநாவுக்கரசு<br>முனைவர் மா. பார்வதியம்மாள் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | நிகண்டு |
| பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2041, ஆனி<br>முதற்பதிப்பு - சூன் - 2010 |
| பக்கம் | : | 166+6 |
| தாள் | : | 70 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதா அட்டை |
| விலை | : | ரூ.70/- |
| படிகள் | : | 1200 |
| அச்சு | : | டுடே கிராபிக்ஸ்<br>192, பெல்ஸ் சாலை<br>எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ்<br>சேப்பாக்கம்<br>சென்னை 600 005 |

முனைவர் ம. இராசேந்திரன் தமிழ்ப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் தஞ்சாவூர் - 613 010

நாள் 03-06-2010

## அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய பதிப்பாசிரியர்கள் முனைவர் அ. சித்திரபுத்திரன், முனைவர் இரா. திருநாவுக்கரசு, முனைவர் மா.பார்வதியம்மாள், பதிவாளர் முனைவர் சா.பி.சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

# தமிழ் உரிச் சொற்பனுவல் - உள்ளமைப்பு

அ. ஜெயலெட்சுமி
சென்னை

தமிழ் மொழியில் சொற்களுக்குப் பொருள் கூறும் பணி தொல்காப்பியக் காலம் முதலே நடைபெற்று வந்துள்ளது. தமிழ் மொழிச் சொல்வளத்தைக் காட்டவும் பெருக்கவும் இது உறுதுணையாக இருந்து வருகின்றது. தமிழ் நிகண்டு மரபு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் தோன்றிய திவாகர நிகண்டில் தொடங்கி கி.பி. இருபதாம் நூற்றாண்டில் இயற்றி வெளியிடப்பட்ட தமிழ் உரிச் சொற் பனுவல் வரைத் தொடர்ந்து வந்துள்ள நீண்ட மரபினைக் கொண்டதாகத் திகழ்கிறது. இம்மரபு வழிவந்த நிகண்டுகள் முதலில் உரிச்சொற்பனுவல்கள் என்றே அழைக்கப்பட்டன. இந்நிகண்டுகளுள் நிகண்டு விளக்கம், உரிச்சொற் பனுவல் பெயர்க்காரணம், காலமும் பதிப்பும், தமிழ் உரிச்சொற்பனுவல் உள்ளமைப்பு, சிறப்பு போன்றவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

## நிகண்டு விளக்கம்

தமிழ் நிகண்டு என்ற சொல்லாட்சி இறையனாரகப் பொருள் உரையில் தான் முதலில் கையாளப்பெற்றுள்ளது. நன்னூலுக்கு விருத்தியுரை செய்த சிவஞான முனிவரும் இடுகுறியால் பெயர் பெற்ற நூல்களுக்கு எடுத்துக்காட்டு கூறும் இடத்தில் இடுகுறியால் பெயர் பெற்ற நிகண்டு கலைக்கோட்டுத்தண்டு முதலாயின என்று கூறுவார்.

"*முதனூல் கருத்தன் அளவு மிகுதி*
*பொருள் செய் வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்*
*இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே*"[1]

நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது

பொருள் "சொற்கள் தொகுதியாக - கூட்டமாக- அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டிருத்தலால் நிகண்டு என்று பெயர் பெற்றது."[2] நிகண்டு என்பதனைத் தமிழ்ச் சொல் எனக் கொள்வோரும் உள்ளனர். நிகண்டு என்னும் சொல்லின் பொருள் உண்மை. இன்ன சொல்லுக்கு இன்ன பொருள் இன்ன பொருளுக்கு இன்ன பெயர் எனக் கண்டு அவ்வுண்மையை வரைந்த நூல்தான் நிகண்டு எனப் பெயர் பெற்றது.

**பெயர்க்காரணம்**

தமிழ் நிகண்டு என்னும் சொல்லிற்கு இணையாக உரிச்சொல் உரிச்சொற்பனுவல் எனும் சொற்களும் வழக்கிலிருந்துள்ளன. பிற்காலத்து எழுந்த சொற்பொருள் விளக்கும் நூல்கள் உரிச்சொற்களுக்கு மட்டுமின்றி எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறியிருப்பினும் அவை உரிச்சொற் பனுவல் என்றே வழங்கப்பட்டன. "வைதிகச் சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் முதலில் நிகண்டு என வழங்கப்பட்டது. உரிச்சொற்களுக்கு மட்டுமின்றிப் பிற சொற்களுக்கும் பொருள் கூறும் நூலும் உரிச்சொல் அல்லது உரிச்சொற்பனுவல்"[3] என வழங்கப்பட்டது.

**காலமும் பதிப்பும்**

தமிழ் உரிச்சொற் பனுவல் தமிழ் மொழியில் இதுவரை வெளிவந்துள்ள நிகண்டுகளில் இறுதி நிகண்டாகும். கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலைச் சார்ந்த கவிராஜ பண்டிதர் இராமசுப்பிரமணிய நாவலர் என்பவர் இந்நூலை இயற்றியுள்ளார். இவருக்குப் பின் இவரது மகன் திரு.ஆர்.எஸ். மோகனராஜன் அவர்கள் இந்நிகண்டு நூலினை இயற்றினார். கி.பி. 1984-ஆம் ஆண்டில் நாகர்கோவில் 'செந்தமிழ் நிலையம்' வாயிலாக இந்நிகண்டினை வெளியிட்டுள்ளார். இதனைத் தவிர்த்து வேறு எந்தப் பதிப்பையும் இந்நூல் பெறவில்லை. இதன் காலம் 20 ஆம் நூற்றாண்டு ஆகும்.

**உரிச்சொற்பனுவல்- உள்ளமைப்பு**

இந்நிகண்டின் தொகுதிப் பெயர்களில் பெரிதும் ஒத்த நிலையில் காணப்படுவது திவாகர நிகண்டு ஆகும். பொது அமைப்பில் பிங்கல நிகண்டைப் பின்பற்றிய நிலையில் தமிழ் உரிச்சொற் பனுவல் அமைந்திருக்கின்றது. இந்நிகண்டில் மொத்தம் 7532 நூற்பாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிகண்டின் பத்து தொகுதிகள் கீழ்வருமாறு.

1. கடவுட் பெயர்த் தொகுதி
2. மக்கட் பெயர்த் தொகுதி
3. விலங்கின் பெயர்த் தொகுதி
4. மரப்பெயர்த் தொகுதி
5. பல்பொருட் பெயர்த் தொகுதி
6. இடப்பெயர்த் தொகுதி
7. பண்புப் பெயர்த் தொகுதி
8. தொழில் பெயர்த் தொகுதி
9. ஒலிப்பெயர்த் தொகுதி
10. ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி

தமிழ் உரிச்சொற் பனுவலில் முதலாவதாகப் பாயிரம் அமைந்துள்ளது. இந்நூலை ஆசிரியரே இயற்றியுள்ளார். இதில் கடவுள் வணக்கம், அடக்கியல், ஆக்கியோன் உள்ளிட்ட தலைப்புக்களில் நூற்பாக்களும் பொது என்னும் தலைப்பின் கீழ் 25 நூற்பாக்களும் இடம்பெற்றுள்ளன. இப்பாயிரப்பகுதியில் தமிழ்ச் சொற்களின் இயல்புகள் பற்றி ஆசிரியர் வரையறுத்துள்ளார்.

*‘பயன்மிகு முரிச்சொல் பகர்நூல் பலவு*
*நயமுறத் தேர்ந்து நல்வகை நாடிப்*
*பிறமொழிச் சொற்களை நெறிப்பட நீக்கித்*
*தமிழுரிச் சொற்களின் தகுபொருள் விளங்கப்*
*பைந்தமிழுரிச் சொற் பனுவல் தந்தனன்*
*முதிர்புல மொளிர்மான் முருக நாவலனே.’*

என்னும் பாயிரப் பாடலில் தமிழ்ச் சொற்கள் மட்டுமே தரப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

'வேதியின் சொற்ற உரிச்சொற் பனுவலு மேம் படுமே' என்று உரிச்சொற்பனுவல் என்னும் வழக்காறு குறிக்கப்பட்டுள்ளது.

**உரிச்சொற் பனுவலின் 10 தொகுதிகள் விளக்கங்கள்**

☆ முதலாவது தொகுதியில் இறையோன் (சிவன்) முதல் மூத்தாள் முடிய 26 கடவுளர்களின் பெயர்களும் சிவபெருமானுக்கென அமைந்த நூற்பாவில் 119 பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவே இத்தொகுதியிலும், இந்நிகண்டிலும் அதிக அளவிலான பெயர்களைத் தொடுத்த நூற்பாவாகும். இதில் முருகனுக்கென அமைந்த நூற்பாவில் 55 பெயர்களும் திருமால் பெயர்கள் 64-ம் திருமகள் பெயர்கள் 23-ம் கொடுக்கப்பட்டுள்ளன. இப்படித் தெய்வப் பெயர்களைத் தொகுத்த அதிக அளவினைக் கொண்ட நூற்பாவாகும். இத்தொகுதியில் மொத்தம் 260 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

சிவன் பெயராக

(எ.கா.) முதல்வன், அளவிலி, முன்னவன், முக்கணன்
கரியோன், மங்கைப் பங்கன்

இவ்வாறு பெயர்கள் தொடுக்கப்பட்டுள்ளன.

☆ இரண்டாவது தொகுதி மக்கள் பெயர்த் தொகுதி ஆகும். மக்களுக்கான பொதுப்பெயர்கள், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், அரசன், பேடு, போர் வளவன், வீரர், படை வகையின் பெயர்கள், ஐந்திணையில் வாழும் மக்களின் பெயர்கள், மருத்துவர், உறவுமுறை போன்றவற்றின் பெயர்கள் மக்கள் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் மொத்தம் 977 நூற்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

☆ மூன்றாவது விலங்கின் பெயர்த் தொகுதி இத்தொகுதியில் விலங்கின் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஆண், பெண் என்பனவற்றிற்குத் தனிப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொதுப் பெயர்கள், இளமைப் பெயர்கள், இளமைப்பருவ பெயர்கள், பறவையினங்கள், ஊர்வன, நீர்வாழ்வன போன்றவை

விலங்கினப் பெயராக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 363 நூற்பாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

நீர்வாழ் உயிர்கள் பெயர் அதாவது மீனின் பொதுப்பெயர்களாக

"*வாளை யுழுவை சாளை நெய்ம்மீன்*
*.... ...... கசலி கொழுவை*
*மதிப்பு வராஅல் குதிப்பு .... .......*
*...... ....... ....... வருவன பலவே*"[4] (நூற்பா. 1577)

இவ்வாறு ஒவ்வொரு விலங்கின் பெயர்களும் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

☆நான்காவது மரப்பெயர்த் தொகுதியில் மரவகைப் பெயர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. செடிகள், கொடிகள், மரங்கள் மரத்தின் உறுப்புக்கான வேர், கிளை, இலை, பூ உள்ளிட்டவைகளின் பெயர்கள் மருந்தாகப் பயன்படும் தாவரம் போன்ற பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 608 நூற்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மருந்தாகப் பயன்படும் தாவரங்களின் நால்வகை மருந்து பெயர்களில்

"*பெருமயல் நீக்கி உயிர் தருவதுமே*
*...... ........ கனாகும்*"[5]

☆ ஐந்தாவது தொகுதி பல்பொருட் பெயர் தொகுதி இதில் உணவு வகைகள், வணிகப் பொருட்கள், கலன்கள், சிறுகருவிகள், அளவுக் கருவிகள், சூதாடு கருவி, இயற்கைப் பொருட்கள், மணிவகைகள், உலோகங்கள், ஆடை வகைகள், இருக்கை முதலிய பொருட்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 863 நூற்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

"*வாளி கம்பி வளையங் குதம்பை*
*........ ...... காதணி வகையே*"[6]

இவை அனைத்தும் காதணிப் பெயரைக் குறிப்பிடுகின்றன.

☆ஆறாவது இடப் பெயர்த் தொகுதி. இத்தொகுதியில் மூவுலகு, சிறப்பாகப் பூவுலகு, கடல், வெளி, திசைகள் பலவகை நிலங்கள்

பல்வேறு நாடுகள், குறிப்பிட்ட சில ஊர்கள் முதலிய இடங்களும் வழி, வீடு, கூரை, மதில், கோட்டை, கோயில், சோலை, மலை ஐந்நிலங்கள் போன்றவையும் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 565 நூற்பாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

☆ ஏழாவதுப் பண்புப் பெயர் தொகுதி. இத்தொகுதியில் மொத்தம் 963 நூற்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் எண்கள், அளவைகள். வடிவங்கள், உருவங்கள், நிறங்கள், புலனுர்வு, அறிவுநிலை, குணநலன், தோற்றம், வளைத்தல், செயல், ஊடல், கூடல், வட்டக்குறி முதலியன உள்ளிட்ட பெயர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வறுமை முதலிய நிலைகள், மயக்கம் போன்றவற்றின் பெயர்களும் பண்புப் பெயராகக் தரப்பட்டுள்ளன.

☆ எட்டாவது தொகுதியாக தொழிற் பெயர்த்தொகுதி அமைந்துள்ளது. இத்தொகுதியில் செய்தலின் பெயர், முயற்சி, உழைப்பு, விளையாட்டு, ஆடல், கூத்தாடல், மாயோன் ஆடல், முருகன், கொற்றவை, திருமகள், நடத்தல், அசைதல், நிற்றல், இருத்தல் போன்றவை அடங்கியுள்ளன. இத்தொகுதியில் 511 நூற்பாக்கள் இடம்பெற்றுளள்ளன.

☆ ஒன்பதாவது தொகுதி ஒலிப்பெயர்த் தொகுதி. இதில் பலவகைப்பட்ட ஓசையின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. மூச்சோசை, கொட்டாவி, பெருமூச்செறிதல் முதலான மனிதர் ஓசைகள், விலங்கு, பறவைகளின் ஓசைகள், எழுத்தோசைகள், ஓசைச் சொற்கள், இடைச் சொற்கள், பாவின் ஓசைகள் போன்ற பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் 356 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

☆ பத்தாவது தொகுதி ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி. இத்தொகுதியில் பல பொருட் சொற்கள் அகரவரிசையில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் 2066 நூற்பாக்கள் காணப்படுகின்றன.

திவாகரத்தின் 11 ஆம் தொகுதியான பல பொருள் ஒரு சொல் பெயர்தொகுதி இங்கு 10 ஆம் தொகுதியாக்கப்பட்டுள்ளது. தமிழ் உரிச்சொற்பனுவல் முதல் 9 தொகுதிகள் ஒரு பொருட் பன்மொழி என்னும் அமைப்பிலும், 10வது தொகுதி பல பொருள் ஒரு சொல் அமைப்பிலும் அமைந்துள்ளது. முதல் 4 தொகுதிகளும் திவாகர நிகண்டின் வரிசையிலேயே தமிழ் உரிச்சொற்பனுவல் அமைந்துள்ளன. திவாகரத்தின் 5 தொகுதியான இடப்பெயர்த் தொகுதியும் 6 ஆம் தொகுதியான பல்பொருட்பெயர்த் தொகுதியும் மாற்றம் பெற்றுள்ளன. திவாகரத்தின் 8, 9 மற்றும் 10வது தொகுதிகளான பண்புப் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி என்பன இங்கு முறையே 7,8 மற்றும் 9ஆம் தொகுதிகளாக அமைந்துள்ளன.

**உரிச்சொற்பனுவலின் சிறப்பு**

☆'உரிச்சொற்பனுவல்' தமிழ் நிகண்டுகளில் அதிக அளவில் நூற்பாக்களையும், சொற்றொகையையும் கொண்ட நிகண்டாக அமைந்துள்ளது. இதன்கண் அமைந்த பலபொருள் ஒரு சொல் பெயர்த்தொகுதி மிக விரிந்த நிலையில் 2050க்கும் மேற்பட்ட பல பொருள் சொற்களைத் தொகுத்தளித்துள்ளது.

☆ தமிழ்ச் சொற்களை மட்டுமே தந்து தனிச்சிறப்பு பெற்றுள்ளது. ஒரு மொழியில் தோன்றிய நிகண்டுகள் அம்மொழியினை ஆய்வோர்க்குச் சொல்வரலாற்றுப் பெட்டகமாகவும், இலக்கிய இன்பம் நுகர்வோருக்குச் சொற்களஞ்சியங்களாகவும் இந்நிகண்டு தனிச்சிறப்புக்களைப் பெற்றுள்ளது.

இவ்வாறு பொதுவான பல நன்மைகளை விளைவிக்கும் இந்நிகண்டு தனித்தனியே பல சிறப்பியல்புகளைக் கொண்டு திகழ்கின்றது.

☆ உரிச்சொற்பனுவல் நூற்பா வடிவம் ஏற்றுள்ளமை தனிச்சிறப்பாகும்.

☆ திவாகர, பிங்கல நிகண்டுகளைத் தொடர்ந்து பின் வந்த நிகண்டுகளுள் பெரும்பாலானவை நூற்பாவினால் அமையாமல் விருத்தம், கட்டளைகலித்துறை உள்ளிட்ட யாப்பு வடிவங்களை ஏற்றுள்ளன.

தமிழ்ச் சொற்களின் இயல்புகளைப் பற்றிப் பாயிரப் பகுதியில் அழகாகக் கூறப்படுகிறது. பெயர்க் காரணம், நிகண்டுக்கான விளக்கம், உரிச்சொல் பனுவலின் காலம், பதிப்பு, உள்ளமைப்பு அந்நிகண்டின் உட்தொகுதிகளின் செய்திகள் அதில் இடம்பெற்றுள்ள பெயர்கள், சிறப்புக்கள் ஆகிய இக்கட்டுரையில் விளக்கம் பெறுகின்றன.

**அடிக்குறிப்பு**

1. நன்னூல் விருத்தியுரை. நூ.49
2. ஜெயதேவன், வ. தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ப.61
3. மேலது, ப.62
4. இராமசுப்பிரமணிய நாவலர், தமிழ் உரிச்சொற் பனுவல், நூ.1577
5. மேலது, நூ. 2208
6. மேலது, நூ. 2827

# கைலாச நிகண்டு சூளாமணி - ஓர் ஆய்வு

மோ. பொன்னி
சென்னை

---

தொல்காப்பிய காலத்திற்குப் பின்பு தமிழ் இலக்கியங்களில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. பல்வேறு சமய வளர்ச்சிகளின் காரணமாகத் தமிழ் மக்களின் பண்பாடும், மொழியும் மாற்றம் பெற்றன. வடமொழிச் சொற்கள் தமிழில் அதிகமாக பரவின. இதனால் தமிழ் மொழியின் சொற்றொகை பெருகியது. புதிய சொற்களுக்கான பொருள் தேடலில் கருவிகளாக நிகண்டுகள் தோற்றம் பெற்றன. இவ்வாறு உருவான நிகண்டுகள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு தோற்றம் பெற்ற திவாகரம் தொடங்கி கி.பி. 20-ஆம் நூற்றாண்டு உருவான உரிச்சொற்பனுவல் வரை தனது நிகண்டு மரபை நிலை நாட்டின. இத்தகைய வளர்ச்சிகளில் ஒன்றான கைலாச நிகண்டு சூளாமணியின் படைப்பு, பதிப்பு, அமைப்பு, சிறப்பு போன்றவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

## படைப்பு

நிகண்டுகளே இக்கால அகராதிகளுக்கு முன்னோடியகளாக திகழ்கின்றன. சொற்களுக்குப் பொருள் கொள்வதிலும், அவற்றிற்கு இலக்கணத்தைத் தழுவி வடிவங்களை அமைத்துக் கொள்வதிலும் சங்க காலப் புலவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான நடையினைப் பின்பற்றி வந்துள்ளனர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்தி இலக்கியங்களை இயற்றினர். தத்தம் சமயத்தை நிலை நாட்டிக் கொள்ளப் பல்வேறு இலக்கியங்களை இயற்றியதன் மூலம் சங்கத் தமிழினின்று வேறுபட்ட செய்யுள் நடை, கவிதைப் பண்பு, சொற்களின் தன்மை, வடிவம், சொற்றொடர் அமைப்பு போன்றவை தோன்றலாயின.

இவ்வாறு வழங்கி வந்த பல சொற்களுக்குப் பொருள் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலையில் நிகண்டுகள் தோன்றலாயின. தமிழ் நிகண்டுகளின் தோற்றுவாய்த் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்தில் சொற்களுக்குப் பொருள் கூறும் முறையைப் பின்பற்றியே நிகண்டுகள் தோற்றம் பெற்றன. இத்தகைய நிகண்டுகள் பழங்காலக் கல்விக்குப் பெரிதும் துணை செய்ததோடு மட்டுமல்லாமல் தமிழ்ச் சொற்களின் ஆற்றலையும் வளர்த்தன.

"நிகண்டு என்ற சொல்லைத் தமிழ்ச் சொல் என்று கூறுவோரும் உளர். சொற்கள் தொகுதியாகக் கூட்டமாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டிருத்தலால் நிகண்டு என்னும் பெயர்பெற்றது."[1]

கைலாச நிகண்டு சூளாமணி கி.பி. 17-ஆம் நூற்றாண்டு இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் கைலாசர். இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவரின் பெயரினாலே இந்நூல் கைலாசம் என்ற அடைமொழியினைப் பெற்றுள்ளது. நிகண்டுகளில் சூளாமணி சிறந்த நிகண்டாக இவர் கருதியதால் கைலாச நிகண்டு சூளாமணி என்று ஆசிரியர் பெயர் தந்துள்ளார். இந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. கிடைத்த பகுதியில் மொத்தம் 506 நூற்பாக்கள் மட்டும் உள்ளன. நிகண்டின் முதல் நூற்பாவில் சிவனைப் பற்றிய பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதனை அடுத்து 32 வகையான அறங்களைக் கூறுவதன் மூலம் அறத்தை வலியுறுத்தவே இந்நிகண்டினை ஆசிரியர் இயற்றினார் என்பதை அறிய முடிகிறது.

**பதிப்பு**

கைலாச நிகண்டு சூளாமணி முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. இந்நிகண்டின் பிரதியொன்று தொன்னூல் கருவூலமென்று சொல்லத்தகும் திருமேனி இரத்தினக் கவிராயர் பரம்பரையினர் வீட்டிலிருந்து கிடைத்தது. இதனை இயற்றியோர் வரலாறு கிடைக்கவில்லை.

ச.வே. சுப்பிரமணியன் பதிப்பித்த நிகண்டு தொகுதிகளில் கைலாச நிகண்டு சூளாமணியைப் பதிப்பித்துள்ளார். இந்நிகண்டிற்கான முன்னுரையில் அவர் கூறும் போது, தமிழ் நிகண்டுகளுக்காகத் தமிழகத்திலுள்ள பல நூல் நிலையங்களுக்குச் சென்றதாகவும், கைலாச நிகண்டு சூளாமணி எங்கும் கிடைக்கப் பெறவில்லை எனவும் ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் கிடைக்கலாம் என்று கருதி அங்குச் சென்றபோது, கைலாச நிகண்டு சூளாமணி வையாபுரிபிள்ளை அவர்களால் 'சக்தி' என்ற இதழில் 1939-மற்றும் 1940- ஆகிய இரண்டு ஆண்டுகளில் 506 நூற்பாக்கள் வெளியிடப்பட்டன என்று தெரிய வந்ததாகக் கூறுகின்றார்.

மேலும், பேராசிரியர் வையாபுரிபிள்ளை அவர்களிடம் கைலாச நிகண்டு சூளாமணி சுவடி இருந்ததாகவும் அதனை நிறைவு செய்யாமல் அந்தச் சுவடியை எண் 2978 தேசிய நூலகம் கல்கத்தாவிற்குக் கொடுத்து விட்டதாகத் தெரிகின்றது என்று வ.வே.சு. அவர்கள் இந்நிகண்டின் பதிப்பில் கூறுகின்றார்.

"பேராசிரியர் வையாபுரிபிள்ளை அவர்கள் இந்நூலைச் சக்தி இதழில் பதிப்பிக்கும் போது எந்தவித முன்னுரையும், விளக்கமும் தரவில்லை. முதல் நூற்பா முதல் 155 வரை 1939 சக்தி இதழ்களிலும், 156 முதல் 506 வரை 1940 ஆம் ஆண்டு சக்தி இதழ்களிலும் வெளிவந்துள்ளன."[2]

பேராசிரியர். வையாபுரிபிள்ளை அவர்கள் இந்நிகண்டினைப் பற்றிய எந்த செய்தியையும் பதிப்பு நிலையில் சக்தி இதழில் தரவில்லை. கிடைத்துள்ள 506 நூற்பாக்களைக் கொண்டு இந்நிகண்டினைத் தெய்வப்பெயர்த் தொகுதி, இடப்பெயர்த் தொகுதி என இரு பிரிவாகப் பிரித்துள்ளனர்.

**அமைப்பு**

எல்லா நிகண்டுகளும் பெரும்பான்மையிலும் 12 உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. நிகண்டுகளின் பொது

அமைப்பிற்கு அடித்தளமாக இருப்பது இன்றுள்ள நிகண்டுகளில் திவாகரமே. ஏனெனில் திவாகரம் மிகப் பழமையானது. இதற்குப் பின் வந்த நிகண்டுகள் அனைத்தும் திவாகர அமைப்பையே பின்பற்றி வந்தன. அதேபோல் கைலாச நிகண்டு சூளாமணியும் திவாகரம், பிங்கலம் என இரண்டு நிகண்டுகளைப் பின்பற்றி இயற்றப்பட்டிருக்கின்றது. பிங்கல நிகண்டினைப் பின்பற்றி விண்ணவர் வகை, விண்ணின் வகை, மண்ணின் வகையெனத் தொடங்கிச் சென்று ஊர்வன இறுதியாக வரும் 56 பிரிவுகளில் முதல் 49 பிரிவுகள் திவாகரத்திலுள்ள 10 தொகுதிகளில் வகைப்பட்டதாக அமைகின்றன. இவற்றில் மட்டும் 15000 சொற்கள் விளக்கப் பெற்றுள்ளன.

1. தெய்வப் பெயர்த் தொகுதி
2. இடப்பெயர்த் தொகுதி

என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளது.

1. ஓரெழுத்தொரு மொழி
2. ஓரெழுத்தொற்றொருமொழி
3. ஈரெழுத்தொருமொழி
4. ஈரெழுத்தொற்றொருமொழி
5. மூவெழுத்தொரு மொழி
6. மூவெழுத்தொற்றொரு மொழி
7. நாலெழுத்தொரு மொழி

என்ற ஏழு பகுப்புகளையுடைதாய்க் காணப்படுகின்றது. ஓரெழுத்தொரு மொழி தவிரப் பிற பகுப்புகளில் அகராதி முறை காணப்பெறவில்லை. சூத்திரங்களும் பிங்கலத்தை அடியொற்றி அமைந்துள்ளன.

முதலாவதாக அமைந்துள்ள தெய்வப் பெயர்த் தொகுதியில் சிவன், சிவனின் முப்படை, சக்திக்குரிய பெயர்கள் முதலில் தரப்பட்டுள்ளன. அதனை அடுத்து 32 வகையான அறங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்குப் பின்பு விநாயகன், முருகன், குபேரன், வயிரவன், திருமால், மூதேவி, இலக்குமனன், நான்முகன் போன்றோரின் பெயர்களும் அவர்களுக்கான வாகனம், கொடி,

படை போன்றவைகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. மேலும் மன்மதனைக் குறிக்கும் பெயர்களும், மன்மதனுக்குரிய பாணங்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. விண்ணுலகில் வாழ்வோரான தேவர், சுரர், அசுரர், இராவணன் போன்றோர்களுக்கான பெயர்களும் தரப்பட்டுள்ளன.

நட்சத்திர பெயர்களும், பெரும்பொழுது, சிறுபொழுது பெயர்களும் தரப்பட்டுள்ளன. சூறைக்காற்று, கொண்டல் காற்று, வாடை, தென்றல், வாயுக்கள் பத்து ஆகியவற்றின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. புனலின் வகைகளாக ஆசாரம், சோரி, மேகம், தூறல், இடி, தலையல், துளி, ஆலங்கட்டி, நிறைபுனல், மலிபுனல், நீந்து புனல், தெளி நீர் போன்றவற்றிற்கான பெயர்களும் தரப்பட்டுள்ளன.

இரண்டாவது இயலான இடப்பெயர்த் தொகுதியில் பூமி, மண்ணின் குணம், ஊர்ப்பெயர் போன்றவற்றின் பெயர்களுடன், வழியின் பெயர்களான அருநெறி, தண்டம், படுகால், சிறுவழி. கவலை, வழி, அரசமார்க்கம், தெரு நியமம், நகர் போன்றவையும் கொடுக்கப்பட்டுள்ளன. உயர்மனை, சன்னல், கல்லூரி, முற்றம், திண்ணை, அம்பலம், அத்தாணி, சூளை, அரண், மதில்உறுப்பு, கோபுரம், அகழி போன்றவற்றிற்கான பெயர்களுடன் மலைவகையின் பெயர்களான சிறுமலை, உச்சி, மலைப்பக்கம், துறுகல், அறை, காண்டை, பிலம், மலைக்குறை, விடர், கல், கேளிதம் போன்றவையும் தரப்பட்டுள்ளன.

மண்ணுலக மாந்தர்களின் வரிசையில் முதலில் மாதவம் புரிந்தவர்களான அகத்தியன் முதலான முனிவர்களின் பெயர்களும் சமண சமய முனிவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அதனை அடுத்து அந்தணர்களின் பெயர்கள், அவர்களுக்கான தொழில்கள், நான் மறை, அங்கம், உறுப்பு, மணம், பிரம்மசரியம் போன்ற பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

அறிஞர், கவிஞர், கணக்காயர், ஆசிரியன், தலைவர், வேந்தர், சக்கரவர்த்திகள், குருகுல அரசர்கள் ஆகியவர்களின் பெயர்கள்

தரப்பட்டுள்ளன. உதாரணமாக அர்ச்சுனனுக்குப் பற்குனன், விசயன், பார்த்தன், தனஞ்சயன், வானரக்கொடியோன், மாயோன் மைத்துனன், மாதவி கொழுநன் போன்ற பெயர்கள் தரப்பட்டுள்ளன.

வைசிகர் வைகை, வைசிகர் தொழில், வணிகர், வணிகர் தொழில், சூத்திரர், சோனகர், குயவர்-குலாலர், உமணர், சிற்பர், கண்ணாளர், நாவலர், துவசர், கொல்லர், தச்சர், கன்னார், பாணர், பறம்பர், கருவி இசைப்போர், சண்டாளர் போன்றோர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. உதாரணமாக யவனர், யோனகர் பெயர்கள் சோனகரைக் குறிக்கின்றன.

*"கஞ்ச காரர் கன்னுவர் கன்னார்"*[3]

*"சென்னியர் மதங்கள் செய்தியர் பாணர்"*[4]

என்ற நூற்பாவின் மூலம் கன்னார், பாணர் பெயர்களைத் தெரிந்துக் கொள்ள முடிகின்றது. தெய்வப் பெயர்த்தொகுதி, இடப்பெயர்த் தொகுதி எனப் பெரும் பிரிவுகள் அமைந்திருப்பினும், ஓரெழுத்தொருமொழி போன்ற சொற்களும் இடம்பெற்றுள்ளன.

மலை, மாலை, ஞெலி, புகை, இடி, துளி, பூமி, ஊர், வழி, தெரு, சூளை, அறை, கல், சோரி போன்ற ஈரெழுத்தொரு மொழி சொற்களுக்கான பெயர்களும் தரப்பட்டுள்ளன. உதாரணமாக,

புவி - புடவி, காசி, புவனம், பவனம், தரணி, வசுந்தரை, வசுமதி,
அமலை, சகம், நகர், விபுலை, பவனி

வழி-பந்தம், ஆறு, ஆற்று, மார்க்கம், அயனம், நடவை, வதி,
கீற்று, வாரி, கடை, தாரி

போன்ற பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஈரெழுத்தொற்றொரு மொழி சொற்களாகப் புனல், மேகம், தூறல், அகழ். அரண், மணம், பாணர் போன்றோரின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

*"இஞ்சி புரிசை யெயில்வரைப் புவளகம்*
*அரணங்கோட்டை ஆரை காப்பு*

*வேணகை கடகம் வேலி யம்பரமை*

*.............................................*

*ஓதை பிரகார மொரு பொருளென்ப"*[5]

வாயில்- தோட்டி, துவாரம், கோபுரம், வாரி, கடை, புழை, புதவு, கடைத்தலை, தூம்பு

முதலியவை வாயிலுக்கான பெயர்கள் ஆகும்.

மூவெழுத்தொரு மொழி சொற்களாக மூதேவி, துவலை, கவலை, போன்றவை இடம்பெற்றுள்ளன. மூவெழுத்தொற்றொரு மொழிகளாக திருமால், அசுரர், மிதுனம், பூராடம், பருவம், அபானன், உதானன், வியானன், சமானன், கழகம், துறுகல், துவசர், நாவலர், உமணர், சோனகர் போன்றபெயர்களும் இடம்பெற்றுள்ளன.

நாலெழுத்தொரு மொழிகளாக விரிபனி, அருநெறி, சிறுமலை, சிரேபதி போன்றவைகளின் பெயர்களைக் குறிப்பிடப்படுகின்றது.

**சிறப்பு**

தமிழ் நிகண்டுகளில் கைலாச நிகண்டு சூளாமணியில் தான் சிவனுக்கு 115 பெயர்கள் தரப்பெற்றுள்ளன. இதுதான் சிவனுக்குரிய மிகுதியான பெயர்களாக இருக்கின்றது. அதோடு ஏனைய நிகண்டுகளில் தெய்வப் பெயர்த்தொகுதி என்றால் சிவன், திருமால், கணபதி, முருகன் என்று கூறப்படும். ஆனால் இந்நிகண்டில் அவ்வாறு இல்லாமல் சிவன், சக்தி இரண்டையும் கூறி, அடு 32 வகையான அறங்களைக் கூறுகின்றார். உதாரணமாக,

வேதம் ஓதுவோர்க்கு உணவு அளித்தல்

மறச் சோறு அளித்தல்

விலங்கிற்கு உணவு

இலங்கு கண் மருந்து

போன்ற அறங்களை எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

ஊர்ப்பெயர்களில் வரிசையில் பொதுவான ஊர்களைக் குறிப்பிட்ட ஆசிரியர் ஐந்து நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம்,

நெய்தல், பாலை ஆகியவற்றின் ஊர்ப் பெயர்களையும் குறிப்பிடுகின்றார். அந்நிலங்களுக்கான இறை, பண், பறை ஆகியவற்றையும் கூறுகின்றார். உதாரணமாக,

கல்லூரி - கல்வியூரி
கழகம் - கல்வி பயில்களம்

மனிதர்களின் துயில் இடம், விலங்குகளுக்கான துயில் இடப்பெயர்களையும் குறிப்பிடுகின்றார். வேந்தர் வகையில் வேந்தர்களுக்கான பொதுப்பெயர்கள் தரப்பட்டாலும், சக்கரவர்த்திகள், குருகுல அரசர் போன்றவர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

சக்கரவர்த்திகள் - சகரன், நளன், அரிச்சந்திரன், புரூரவன், கார்த்தவீரியன், முசுகுந்தன்

குருகுல அரசர் - பௌரவர், பாரதர், கௌரவர்.

முதல் இடை, கடை வள்ளல்களான (3 × 7 = 21) 21-வள்ளல்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. பிராண வாயுக்கள் முதலான பத்து வாயுக்களின் பெயர்களோடு அவ்வாயுக்களின் பிறப்பையும் கூறுகின்றார். அவைகளாவன,

"*அபானன் அபான மாகாக் காலே*"[6]
"*உதனான் பிறப்பே உந்தி யென்ப*"[7]

தனஞ்செயன்

*இன்னுயிர் முதலா வெண்ணிய இந்த*
*மன்னுயிர் அகலவும் வரம்பிற வாமல்*
*சுடலையிலவ் வுடலை யடலை யாக*
*செங்கனல் கொளுத்தச் சென்னியைத் திறந்து*
*தங்கும் இடம் இல்னெச் சரிவது தனஞ்செயன்*[8]

மேற்கூரியவை அனைத்தும் கைலாச நிகண்டு சூளாமணியின் சிறப்புகள் ஆகும். இந்நிகண்டு முழுமையும் கிடைக்கப் பெற்றிருந்தால் இன்னும் பல புதிய செய்திகளை நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

**முடிவுரை**

மேற்கூறியவை மூலம் கைலாசநிகண்டு சூளாமணி கிடைக்கப்பெற்ற வரலாற்றையும், அதன் காலம், அதனைப் பதிப்பித்த வரலாறு, அதன் அமைப்புகள், உள்ளமைப்பில் இடம் பெற்றுள்ள செய்திகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதோடு மட்டுமேல்லாமல் இந்நிகண்டின் சிறப்புகளையும் தெரிந்துக் கொள்ள முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ப-60.
2. முனைவர் ச.வே. சுப்பிரமணியன்(ப.ஆ.) தமிழ் நிகண்டுகள் தொகுதி-1, ப.795.
3. மேலது., நூ-501
4. மேலது., நூ-506
5. மேலது., நூ- 326
6. மேலது., நூ-191
7. மேலது., நூ-192
8. மேலது., நூ-199

# தமிழ் உரிச்சொற் பனுவலின் புது முயற்சிகள்

அ. செந்தில்நாராயணன்
சென்னை

தொல்காப்பிய உரியியலில் தோன்றிய தமிழ்ச் சொற்பொருள் விளக்க மரபானது 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரத்தின்வழி நிகண்டு என்னும் தனி வகையாகத் தமிழ் மரபில் நிலைபெற்றது. ஐரோப்பியர் வருகைக்குப்பின் அகராதி என்னும் வடிவம் தமிழ் மரபில் செல்வாக்கு பெற்ற பின்பும் தமிழில் நிகண்டுகள் உருவாக்கும் பணி நடைபெற்று வந்துள்ளதைக் காணமுடிகிறது. மனனக் கல்வி முறைக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ள இந்நிகண்டுகளிலிருந்து பெருமளவிலான தரவுகளைத் தொடக்க காலத் தமிழ் அகராதிகள் பெற்றுள்ளன. இருப்பினும் தமிழ் நிகண்டுகளில் உள்ள சொல் வளம் இன்னமும் தமிழுலகால் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. தமிழ் மொழியின் சொற்களஞ்சியங்களாக அமைந்திருக்கும் நிகண்டுகளில் மிக அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டதான தமிழ் உரிச்சொற் பனுவல் என்னும் நிகண்டில் அதன் ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட சில புதிய முயற்சிகளை இனங்காட்டுவதாய் அமைகிறது இக்கட்டுரை.

## தமிழ் உரிச்சொற் பனுவல்

தமிழ் உரிச்சொற் பனுவல் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கி வெளியிடப்பட்ட தமிழ் நிகண்டாகும். இதனைக் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலை அடுத்த இராஜாக்கமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்த கவிராய பண்டிதர் இராமசுப்பிரமணிய நாவலர் இயற்றியுள்ளார். இவரது

மறைவிற்குப்பின் இவரது மகனார் திரு ஆர்.எஸ். மோகனராஜன் அவர்கள் இந்நிகண்டு நூலின் 1984 ஆம் ஆண்டு ஆசிரியரின் சொந்த பதிப்பகமான நாகர்கோவில் ‘செந்தமிழ் நிலையம்’ வாயிலாக வெளியிட்டுள்ளார். இதனைத் தவிர்த்து வேறு எந்தப் பதிப்பையும் இந்நிகண்டு நூல் பெறவில்லை.

தமிழ் நிகண்டுகள் குறித்துப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் இந்நிகண்டு பதிப்பிற்கு நல்லதொரு ஆய்வு முன்னுரையை வழங்கியுள்ளார். மேலும் இந்நிகண்டின் முதல் ஒன்பது தொகுதிகளிலும் இடம் பெற்றுள்ள தலைச்சொற்களை அடைவு செய்து பின்னிணைப்பாக இணைத்துள்ள பணியையும் செய்துள்ளார். இந்நிகண்டு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான பெருஞ்சொல்லகராதியின் தரவு சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அமைப்பு**

தமிழ் உரிச்சொற் பனுவல் தமிழின் இரண்டாவது நிகண்டான பிங்கல நிகண்டின் அமைப்பை ஒத்து பத்து தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. எனினும் தொகுதிப் பெயர்களில் திவாகர நிகண்டினைச் சார்ந்து அமைந்துள்ளது. கடவுட் பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, பண்புப் பெயர்த் தொகுதி, தொழிற் பெயர்த் தொகுதி, ஒலி பெயர்த் தொகுதி என ஒன்பது ஒருபொருள் பலசொல் பெயர்த் தொகுதிகளையும் பத்தாவது தொகுதியாக ஒருசொல் பலபொருட் பெயர்த் தொகுதியையும் கொண்டமைந்துள்ளது. பரவலாக நிகண்டுகளில் காணப்படும் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி இந்நிகண்டினுள் இடம்பெறவில்லை. நூற்பா யாப்பில் அமைந்த தமிழ் உரிச்சொற் பனுவலில் மொத்தம் 7532 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

**புதுமுயற்சிகள்**

**அ) தனித் தமிழ் வழக்கு**

தமிழ் மொழியின்மீது மிகுந்த பற்றுகொண்ட ஆசிரியர் நாவலரவர்கள் தாம் இயற்றிய நிகண்டு நூலிற்குத் 'தமிழ் உரிச்சொற் பனுவல்' என்னும் தமிழ் வழக்கு நோக்கிய பெயரை அமைத்தது மட்டுமல்லாமல் நூற் பெயருக்கு ஏற்றாற் போல வடமொழிச் சார்பாய் வந்த சொல் வடிவங்களை முற்றிலும் தவிர்த்துத் தமிழ்ச் சொல் வடிவங்களையே தம் நூலுள் தொகுத்துள்ளார். இதனை,

*பிறமொழிச் சொற்களை நெறிப்பட நீக்கித்*
*தமிழுரிச் சொற்களின் றகுபொருள் விளங்கப்*
*பைந்தமிழுரிச் சொற் பனுவல் தந்தனன்.*

(உரிச்சொற் பனுவல், தற்சிறப்புப் பாயிரம். 3, ப.1)

என்ற தற்சிறப்புப் பாயிர அடிகள் நன்கு உணர்த்துகின்றன.

நிகண்டின் வடமொழிப் பெயர்கள் பலவும் தமிழ் வழக்கு நோக்கி மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தெய்வப் பெயர்த் தொகுதியில் நாவலரால் இம்முயற்சி பெரிதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'முகம்' என்ற வடமொழிச் சொல்லிற்கு இணையாக 'முன்னம்' என்ற சொல் ஆசிரியரால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனை முன்னத்தோன் (நூ.12), ஆறு முன்னத்தோன் (நூ. 13) இரண்டும் முறையே ஆனை முகத்தோன், ஆறு முகத்தோன் என்பனவற்றிற்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இருபத்தேழு நாட்கள் (நட்சத்திரங்கள்), பன்னிரு இராசிகள், பன்னிரு திங்கள்கள் போன்றவை அனைத்திற்குமான தமிழ்ப் பெயர் வடிவங்களே நிகணடினுள் ஆட்சிபெற்றுள்ளன. புத்தரைக் குறிப்பதற்குப் புத்தர் என்ற பெயர் பயன்படுத்தப்படாமல் அறிவன் என்ற பெயரே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் புத்தரைக் குறிப்பதற்குத் தொகுக்கப்பட்ட அனைத்து பெயர்களும் தமிழ் வழக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மற்ற நிகண்டுகளில், வடமொழிப் பெயர்களைத் தவிர்க்க முடியாமல் அமைக்கப்படும் தெய்வப் பெயர்த் தொகுதி போன்ற இடங்களும் இந்நிகண்டில் முழுவதும் தமிழ் வழக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

**ஆ) வட்டார வழக்குச் சொற்கள்**

தொல்காப்பியம் செய்யுள், வழக்கு என்ற இரண்டிற்குமான இலக்கணத்தை விளக்குவதாக அதன் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இங்கு வழக்கு என்பது மக்களின் பேச்சு மொழியைக் குறிக்கின்றது. இன்றைய மொழியியல் ஆய்வுகளிலும் மக்களின் பேச்சு வழக்கிற்குச் சிறப்பிடம் தரப்படுகிறது. அகராதிப் பரப்பிலும் வட்டார வழக்கு அகராதிகள் முக்கியத்துவம் பெற்றுவருகின்றன.

இதற்கிணங்கத் தமிழ் உரிச்சொற் பனுவலிலும், தாம் பிறந்து வளர்ந்த பகுதியான நாஞ்சில் நாட்டின் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதி வட்டார வழக்குச் சொற்கள் பலவற்றினைப் பதிவு செய்துள்ளார் நாவலர். காட்டாக, வீட்டின் தாழ்வாரத்தை 'இறப்பு' (நூ. 3243) என்றும், சோறு சமைத்தலை 'வடித்தல்' (நூ.4750) என்றும், முறத்தில் புடைத்தலை 'நாவல்' (நூ. 4743) என்றும், அரிசியிலிருந்து குருணையை நீக்குதலைக் 'கொழித்தல்' (நூ. 3839) என்றும், மூக்கடைப்பு நோயினைத் 'தடுமம்' (நூ. 1207) என்றும் ஆண்டுள்ளமையைக் குறிப்பிடலாம். வட்டார வழக்கு குறித்த ஆய்விற்குரிய ஆவணமாக இதுபோன்ற பகுதிகள் அமைந்துள்ளன.

**இ) ஒப்பு மொழிப் பதிவுகள்**

நாவலரவர்கள் வாழ்ந்த பகுதியானது அவர் பிறந்த வளர்ந்த காலத்தில் கேரள மாநிலத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகத் தன் பள்ளிப்படிப்பை மலையாளத்தில் மேற்கொண்ட நாவலர் தமிழுடன் மலையாளத்திலும் புலமை பெற்றிருந்தார். மலையாளப் புலமை, புவி சார்ந்து மலையாள மொழி பேசும் மக்களுடனான நெருக்கம் உள்ளிட்ட காரணங்களால் மலையாள மொழியில் தற்போது வழங்கிவரும் சொற்கள் சிலவும் இந்நிகண்டினுள் இடம்பிடித்துள்ளன. இச்சொற்கள் தமிழிலும் மலையாளத்திலும் முன்பு வழங்கிவந்து தற்போது தமிழில் வழக்கொழிந்தனவாய் மலையாளத்தில் மட்டுமே வழங்கி வருவனவாய் உள்ளன.

'களித்தல்' (நூ. 4627) விளையாடல் என்னும் பொருளிலும், 'சீத்தை' (நூ. 4308), நூ. 4310) கேடானது என்ற பொருளிலும் 'கொதுகு' (நூ. 1478) கொசு என்ற பொருளிலும், 'தூக்கல்' (நூ.3651) நிறுத்தல் அளவையில் அளத்தல் என்ற பொருளிலும், 'பறம்பு' (நூ. 2734) படுத்துறங்கப் பயன்படும் பாய் என்ற பொருளிலும் நிகண்டினுள் ஆளப்பட்டுள்ளன. இச்சொல் வடிவங்கள் யாவும் மேற்குறிப்பிட்ட அதே பொருளில் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லாமல் மலையாளத்தில் மட்டுமே வழங்கி வருகின்றன. பிற தமிழ் நிகண்டுகளில் வடமொழி செல்வாக்கு பெற்றிருக்க, இந்நிகண்டில் தமிழின் ஒப்பு மொழிகளுள் ஒன்றான மலையாளம் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகிறது.

### ஈ) சொல்லாக்க முயற்சிகள்

ஒரு மொழியானது, வளர்ச்சியடைந்து வரும் அறிவியல் துறைகளுக்கேற்பப் புதிய கலைச்சொற்களைப் படைத்துக் கொள்ளவில்லை எனில் அம்மொழியின் வளர்ச்சியில் ஒரு தேக்க நிலை ஏற்படுவது தடுக்க முடியாததாகிவிடும். நிகண்டு ஆசிரியர்களும் இதுபோன்ற நிலையினைச் சிந்தித்துத் தம் காலத்து மொழிச் சூழலிற்கு ஏற்பச் சில சொல்லாக்க முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். எனினும் இவர்களது முயற்சி என்பது ஏற்கனவே வழக்கில் இருக்கும் ஒரு சொல்லிற்கு இணையாக மற்றொரு சொல்லை உருவாக்குவதாகவே அமைந்துள்ளது. தமிழ் உரிச்சொற் பனுவலில் நாவலரவர்கள் புதிய சொல்லாக்க முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்.

'ஊட்டி' (நூ. 5842) என்னும் சொல் உணவுக் குழாயின் தொடக்க இடத்தைக் குறிப்பதற்காக நிகண்டினுள் அமைக்கப்பட்டுள்ளது. இது வழக்கிலுள்ள சொல்லுக்குப் புதிய பொருள் சேர்ப்பதான சொல்லாக்க முயற்சியுள் அடங்குகிறது.

'பறவை வேந்தன்' (நூ. 1416) என்னும் சொல் பக்ஷிராஷன் (கருடன்) என்னும் சொல்லிற்கு இணையாக மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மொழிபெயர்த்து அமைக்கப்படும் சொல்லாக்க முயற்சியுள் இது அமைகிறது.

'தாயைக் கொன்றான்' (நூ. 2030), 'கண்ணுறை' (நூ. 2238) இரு சொற்களும் முறையே வாழை மரத்தையும் உணவுப் பொருள் முதலியவற்றை ஈ உள்ளிட்டவை மொய்க்காமலிருக்க மூடி பாதுகாக்கப் பயன்படும் சிறு சிறு துளைகளைக் கொண்ட பொருளையும் குறிப்பதற்கு நாவலரவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இரண்டும் காரணம் கருதிப் படைக்கப்பட்ட கலைச் சொற்களைப் போன்று உள்ளன.

**உ) முழு நிலையில் அகர வரிசை**

பிங்கல நிகண்டிற்குப் பின்வந்த நிகண்டுகள் பயன்படுத்துவோரின் தேவை கருதிச் சில மாற்றங்களைத் தம் கட்டமைப்பில் மேற்கொண்டன. அவற்றுள் ஒன்று மனனம் செய்வதன் எளிமை கருதிச் செய்யப்பட்ட யாப்பு மாற்றம். மற்றொன்று குறுக்கு நோக்கீட்டிற்கு ஏற்ற வகையில் பலபொருள் ஒருசொல் பெயர்த் தொகுதியை அமைக்க வேண்டும் என்ற அளவில் செய்த முயற்சிகள்.

பலபொருள் ஒருசொல் பெயர்த் தொகுதிச் சொற்களை எளிதில் கண்டறிய வேண்டி, அத்தொகுதிச் செய்யுள்கள் எதுகை முறையில் அமைக்கப்பட்டன. சூடாமணி நிகண்டில் முதலில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி போதிய அளவில் பலனளிக்காததால் சொற்களைக் கண்டறிவதற்கு அகர வரிசை முறை முன்னெடுக்கப்பட்டது. முதலெழுத்து அளவிலான அகர வரிசையோடு அகராதி நிகண்டிலும், இரண்டாம் எழுத்து வரையிலான அகரவரிசையோடு பொதிகை நிகண்டிலும் அமைக்கப்பட்ட பலபொருள் ஒருசொல் பெயர்த்தொகுதி முழு அளவிலான அகரவரிசையோடு தமிழ் உரிச்சொற் பனுவலில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

திவாகரம் உள்ளிட்ட ஒரு சில நிகண்டுகளில் அகர வரிசையோடு அமைந்துள்ள இப்பலபொருள் ஒருசொல் பெயர்த் தொகுதியை அந்நிகண்டுகளைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்களே அகர வரிசைக்கு உட்படுத்திப் பதிப்பித்துள்ளனர். (எஸ். வையாபுரிப் பிள்ளை, 1982: xxxiv).

**ஊ) தற்சிறப்புப் பாயிர விளக்கங்கள்**

நாவலரவர்கள் தாம் எழுதிய நூலிற்குத் தாமே சிறப்புப் பாயிரத்தையும் எழுதியுள்ளார். இதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக 27 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூற்பாக்களை மட்டும் படைக்காமல் நூற்பாக்களினிடையே விரிவான விளக்கங்களையும் எழுதியுள்ளார் ஆசிரியர். காட்டாக,

இடமும் பொருளு மிடமும் பண்பும்
பண்பும் பொருளும் பண்பும் செயலும்
ஒலியும் பண்பு மொலியுஞ் செயலும்
இயைந்தொருங் கியலும் பொருள்படு மொழிகள்
பலவிடத் துறினுந் தொகுதிக் கேற்பக்
குறித்த பொருளுட் கோடல் வேண்டும்.

(உரிச்சொற் பனுவல், தற்சிறப்புப் பாயிரம், 23).

'கட்டில்' என்பது படுப்பதற்குரிய இடமுமாம், பொருளுமாம் எனவே இடப் பெயர்த் தொகுதியிலோ பொருட் பெயர்த் தொகுதியிலோ அவ்விரண்டிலுமோ கொள்ளப்படலாகும். இடப்பெயர்த் தொகுதியில் வரின் இடமாகவும், பொருட் பெயர்த் தொகுதியில் வரின் பொருளாகவும் கொள்ளப்படும். பிறவும் இவ்வாறு காண்க (உரிச்சொற் பனுவல், தற்சிறப்புப் பாயிரம், 23, ப.4). இப்பகுதி ஒரே சொல் இரண்டு தொகுதிகளில் இடம்பெறும் வேளையில் அதனைப் படிப்போர்க்கு ஏற்படும் மயக்கத்தினைப் போக்கும் விதத்தில் உள்ளது. இத்தகு சிறப்புப் பாயிரமும் விளக்கமும் தற்கால அகராதிகளின் முன்னுரைப் பகுதியில் குறிக்கப்பெறும்' பயன் படுத்துவோர் குறிப்பு' என்பதை ஒத்துள்ளன.

**முடிவு**

தமிழில் வெளிவந்துள்ள நிகண்டுகளுள் இறுதியானதான தமிழ் உரிச்சொற் பனுவலில் அதன் ஆசிரியர், தன் நூலினைத் தனித் தமிழ் நடையில் அமைத்தல். வட்டார வழக்கு, ஒப்பு மொழிச் சொற்கள் போன்றவற்றைச் சொல் தொகுப்பினுள் இணைத்துக்கொள்ளுதல்,

சொல்லாக்க முயற்சிகளை முன்னெடுத்தல், பலபொருள் ஒருசொல் பெயர்த் தொகுதியை முழுஅளவிலானஅகர வரிசையோடு அமைத்தல், தற்சிறப்புப் பாயிரத்தை அமைத்ததோடு அதில் நூல் எழுதியதன் நோக்கம், நூலைப் பயன்படுத்தும் முறை உள்ளிட்டவற்றை உரைநடையில் விளக்கியிறுத்தல் உள்ளிட்ட சில புதிய முயற்சிகளை முன்னெடுத்துள்ளார். தமிழ் மரபிற்கு ஏற்றவாறும் காலத்தோடு பொருந்தியும் அமைந்துள்ள இம்முயற்சிகள் பாராட்டத்தக்க முறையில் அமைந்துள்ளன.

**துணைநூற்பட்டியல்**

**சண்முகம் பிள்ளை**, மு., 1982, நிகண்டுச் சொற்பொருட் கோவை தெய்வப் பெயர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**இராம சுப்பிரமணிய நாவலர்**, 1984. தமிழ் உரிச்சொற் பனுவல், செந்தமிழ் நிலைய்ம், நாகர்கேவில்.

**சற்குணம்**, மா. 2002. தமிழ் நிகண்டுகள் ஆய்வு, இளவழகன் பதிப்பகம், சென்னை.

**சித்திரபுத்திரன்**, எச்., 2004. சொல்லும் பொருளும், அன்னம், தஞ்சாவூர்.

**மாதையன்**, பெ., 2005. தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**வையாபுரி பிள்ளை**, எஸ். (ப-ர்), 1982. (மறுபதிப்பு) தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

# தமிழ் நிகண்டின் வரலாறு

மோ. அருணாம்பிகா
சென்னை

"சொல்லில் உயர்வு சொல் தமிழ்ச் சொல்லே" என்ற பாரதியார், தமிழ் மொழியில் அமைந்துள்ள சொல் வளத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவர் பாடியது வெறும் புகழ்ச்சியன்று; உண்மை என்பதற்கு உறுதி பயப்பவை தமிழில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதலாகத் தோன்றிய நிகண்டுகளாகும். தமிழ் மொழியின் சொல் வளத்தை அறிய உதவும் கருவி நூல்கள் நிகண்டுகள்.

**நிகண்டின் பெயர் வரலாறு**

நிகண்டு என்னும் சொல்லுக்கு கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருளாகும். நிகண்டு என்ற சொல்லின் பொருள் உண்மை எனவே தெரிகிறது. இதனை ஆராய்ந்தால் நிகழ்ந்தது என்ற சொல் உலக வழக்கில் இவ்வாறு மருவித் திரிந்து வழங்கியதென்று கொள்வதே பொருத்தமாகும். உயர்திணை, அஃறிணை பற்றிய பொருள்களையும், வினை பற்றிய பெயர்களையும் பாகுபடுத்தி அவற்றை தொகுத்துக் கூறுவதோடு அச்சொற்களின் பொருள்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொது இயல்பாகும். எனவே, மொழிப் பயிற்சிக்கு இது ஏற்றதொரு கருவி நூலாய் அமைந்துள்ளமை விளங்கும். நிகண்டுகளில் சிறப்பு வாய்ந்த நிகண்டு சூடாமணி நிகண்டாகும். நிகண்டு என்பதற்கு உரிச் சொற்பனுவல் என்பது பொருளாகும்.

**உரிச்சொற் பனுவல்**

நிகண்டு நூல்களை உரிச்சொல் என்னும் சொல்லால் குறிப்பார் பவணந்தியார்.

*இன்ன தின்னுழி இன்னணம் இயலும்*

*என்றிசை நூலுள் குணகுணிப் பெயர்கள்*
*சொல்லாம் பரத்திலிற் பிங்கலம் முதலா*
*நல்லோர் உரிச்சொல்லின் நயந்தனர் கொளலே.* (460)

என்னும் நூற்பாவிற்கு உரையெழுதிய மயிலைநாதரும் 'அவை பிங்கலம் முதலான புலவர்களாற் செய்யப்பட்ட உரிச்சொற் பனுவல்கள்' எனக் குறிப்பதும் கருதத்தக்கது. தமிழ் அகராதியியல் வரலாற்றில் இலக்கணத்தின் ஒரு பகுதியாய் இடம் பெற்ற உரியியலில் மரபின் பின் எழுந்த நிகண்டுகள் மொழி நிகண்டுகள், மருத்துவ நிகண்டுகள் என இரு வகைப்படும். நிகண்டு என்பதற்கு நோக்குநூல் என்றும் பொருள்.

**நோக்குநூல்**

தமிழ்ச் சொற்களுக்குரிய பொருள்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து கொள்வதற்குத் தேவையான சூழல்கள் ஏற்பட்டபோது உருவானவை நிகண்டு நூல்கள் ஆகும். காலந்தோறும் மொழியின் வளர்ச்சியில் அதன் இயல்புக்கேற்பப் பல சொற்கள் புதியனவாய்த் தோன்றிக் கொண்டேயிருக்கும். பல சொற்கள் பயன்பாடு குன்றி வழக்கில் மறையத் தொடங்கும். இவற்றைத் தொகுத்துக் காணும் சூழல் ஏற்படும் போது தான் நோக்கு நூல்களின் (Reference) இன்றியமையாமையை உணரமுடியும். அவ்வகையில் முன்னையோர் அரிதின் முயன்று தொகுத்த நூல்கள் நிகண்டுகளாகும்.

நிகண்டுகள் ஒரு சொல் குறிக்கும் பல பொருளை நமக்குத் திரட்டித் தருகின்றன.

**களஞ்சியம்**

சங்கத் தமிழுக்குப் பின்னர் காலந்தோறும் புலவர்கள் கையாண்ட செய்யுள் நடையிலும் கவிதைப் பண்பிலும் பல்வேறு புதிய இயல்கள் தோன்றின. சொற்களின் தன்மையிலும் வடிவங்களிலும், தொடர்களின் அமைப்பிலும் மொழி நடையிலும் மாறுதல்கள் தோன்றின. பழந்தமிழ் இலக்கியங்களில் வழங்கும் சொற்களின் பொருள்களை அறிந்துக்கொள்ளப் பிற்காலத்தில்

கடினமாயிருந்திருக்கக் கூடும். புலவர்களுக்கும், இலக்கியப் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கும் பண்டைக்கால நூல்களையும் பாடல்களையும் அறிந்து கொள்வதற்குக் கருவி நூல்கள் தேவையாயிருந்தன. தேவையின் அடிப்படையில் நிகண்டு நூல்கள் உருவாகியிருக்கக் கூடும்.

அகராதிகள் உரைநடையில் எழுதப்பட்டன. ஆயின் நிகண்டுகள் நூற்பாவினாலேயே அன்றிக் கட்டளைக் கலித்துறை வெண்பா, விருத்தம் முதலிய பாவகைகளில் இயற்றப்பட்டன.

நிகண்டுகள் பதிப்பிப்பதில் முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை ஆவார். நாமதீப நிகண்டு, பொதிகை நிகண்டு, கயாதர நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு முதலிய நிகண்டுகளைப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்துள்ளார் மற்றும் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை தமிழ் உலகிற்கு கிடைத்த மிகப்பெரிய கருவூலம். அவருடைய தமிழ்ப் பணியில் நிகண்டுகள் பதிப்புத் தலையாய பணியாகும்.

**நிகண்டு கற்றல்**

தமிழ் மொழியின் முக்கிய கூறுகளுள் நிகண்டு என்பது தனிச்சிறப்புடையதாகும். தமிழ் கற்போர் புலமை பெற இலக்கியம், இலக்கணம், நிகண்டு என்னும் மூன்றையும் மூன்று கண்களாக முன்னையோர் போற்றி வந்தனர். இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கு முற்பட நிகண்டு கற்றலைப் புலவர் பெருமக்கள் வலியுறுத்தியுள்ளனர். மாதவச் சிவஞானச் சுவாமிகள் வழங்கிய நன்னூல் விருத்தியுரையுள் இலக்கணம் கேட்டற்குரியாரின் தகுதிப்பாடு பற்றி உரைக்குமிடத்து "யாவரும் உணர எனவே முன்னர் நிகண்டு" கற்றுச் செய்யுள் ஆராய்ச்சியுடையார்க்கே அவற்றை ஆராய்வுழி, அவற்றின்கண் உளவாகிய செயற்கை வேறுபாடுகளும் சொல் முடிவு பொருள் முடிவு வேறுபாடுகளும் துணியப்படும். (நன்னூல் சிறப்புப் பாயிரவுரை) என்று எடுத்துக்காட்டுகின்றார். இதனால் தமிழ் பயிலத் தொடங்குவார்

நிகண்டு நூல் கற்பது மிகவும் இன்றியமையாததாக அந்நாளில் கருதி வந்தனர் என்பது தெரியவரும். முன்பெல்லாம் தமிழ் பயில முற்பட்டோர் முதற்கண் சூடாமணி நிகண்டு நூலை மனப்பாடம் செய்ய வேண்டும் என வலியுறுத்திவந்தனர். திவாகரம், பிங்கலம் முதலிய பழைய நிகண்டுகளையும் மனப்பாடம் செய்வது அந்நாளைய கல்வி முறையாக அமைந்திருந்தது.

**நிகண்டும், பாவகையும்**

திவாகரமும், பிங்கலமும் தொல்காப்பியரின் பெருநூல் போல நூற்பா அகவல் என்னும் சூத்திரயாப்பினால் அமைந்தவை. இச்சூத்திரங்கள் எதுகை நயம்பற்றிய ஓர் ஒழுங்கால் உள்ளன என்றாலும் மனப்பாடம் செய்து நினைவில் பதிய வைத்தல் சற்றுக் கடினமாயிருந்தது. இக்குறையை நீக்கக்கருதிப்பின் வந்த நிகண்டாசிரியன்மார் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியவிருத்தம் என்றும் பாவகைகளில் நிகண்டு நூல்களை இயற்றி வரலாயினர்.

**தொல்காப்பியமும், நிகண்டும்**

நிகண்டுகளின் தோற்றத்திற்குத் தொல்காப்பியம் அடிப்படையாக இருந்தது, தமிழ் அகராதியில் வரலாற்றில் சொற்பொருள் கூறும் வகையினைச் சார்ந்த நிகண்டுகளுக்குத் தொல்காப்பியம் மூலநூலாகத் திகழ்ந்தது எனலாம். தொல்காப்பிய நூற்பாக்கள் பலவும் திவாகரத்தில் இடம்பெற்றுள்ளன. கருப்பொருள்கள் விளக்கம் கூறும்,

*தெய்வம் உணாவே மாமரம் புள்பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப*

என்றும் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் திவாகர நிகண்டுத் தொகுதிகள் அமைந்தன என்பர்.

தொல்காப்பியம் தெய்வம், உணவு, மா, மரம், புள்; பறை, யாழ் என ஏழு வகை கருப்பொருள்களைக் குறிக்கின்றது. இவற்றுள் தெய்வம் திவாகரம் தெய்வப் பெயர்த் தொகுதியிலும், உணவு

பல்பொருள் பெயர்த் தொகுதியிலும், மாவும் புள்ளும் விலங்கின் பெயர்த் தொகுதியிலும், மரம் மரப்பெயர்த் தொகுதியிலும், பறையும் யாழும் செயற்கை வடிவப் பெயர்த்தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. வினையியல் செயல் பற்றிய பெயர்த் தொகுதிக்கு அடிப்படையாகலாம். உரியியலில் அமைந்துள்ள பல்வேறு சொற்களும் ஒரு சொல் பல்பொருள், பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதிக்கும் மூலமாய் அமைந்தன எனலாம். எனவே நிகண்டுகளின் தோற்றத்திற்கு மூலமாய்த் தொல்காப்பியம் அமைந்து விளங்குவதை நன்குணரமுடிகின்றது.

தமிழில் தோன்றிய நிகண்டுகள் அதன் பதிப்பு விவரம் முதலாயின வருமாறு

| எண் | நிகண்டின் பெயர் | ஆசியர் | காலம் |
|---|---|---|---|
| 1. | திவாகரம் | திவாகரர் | 9 நூ. |
| 2. | பிங்கலம் | பிங்கலர் | 10 நூ. |
| 3. | உரிச்சொல் நிகண்டு | காங்கேயர் | 14 நூ. |
| 4. | கயாதரம் | கயாதரர் | 15 நூ. |
| 5. | பாரதிதீபம் | திருவேங்கடபாரதி | 15 நூ. |
| 6. | சூடாமணி நிகண்டு | மண்டலபுருடர் | 16 நூ. |
| 7. | அகராதி நிகண்டு | இரேவண சித்தர் | 1594. |
| 8. | கைலாச நிகண்டு | கைலாசம் | 16 நூ. |
| 9. | ஆசிரிய நிகண்டு | ஆண்டிப்புலவர் | 17 நூ. |
| 10. | பல்பொருள் சூடாமணி (வடமலை நிகண்டு) | ஈசுரபாரதி | 1700. |
| 11. | சதுரகராதி | வீரமாமுனிவர் | 1732. |
| 12. | பொதிகை நிகண்டு | சுவாமிநாத கவிராயர் | 18 நூ. |

மேற்கண்ட நிகண்டுகள் 9-ஆம் நூற்றாண்டு தொடங்கி அனைவராலும் போற்றப்படக்கூடிய வகையில் பல நிகண்டுகள் தோன்றலாயின.

இதில் திவாகரம் 11 தொகுதிகளும், பிங்கலம் 10 தொகுதிகளும், உரிச்சொல் நிகண்டு 10 தொகுதிகளும், கயாதரம் 11 தொகுதிகளும், சூடாமணி நிகண்டு 11 தொகுதிகளும், ஆசிரிய நிகண்டு 11 தொகுதிகளும் பெற்றுள்ளன.

கி.பி.1700, 1750, 1800 என்று சுமார் ஒன்றுக்கொன்று 50 ஆண்டு இடைவெளிக்குள் தொகுக்கப்பட்ட மூன்று நிகண்டுகளை இவ்வாறு குறிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1700 | பல்பொருட் சூடாமணி | – ஈசுரபாரதி |
| | (அல்லது) | |
| | வடமலை நிகண்டு | – மடசைநாதர் |
| 1750 | பொதிகை நிகண்டு | –சுவாமிநாதக்கவிராயர், கல்லிடைக்குறிச்சி |
| 1800 | நாமதீப நிகண்டு | – சுவாமிநாதக் கவிராயரின் மைந்தர் சுப்ரமணிக்கவிராயர், கல்லிடைக்குறிச்சி |

இந்நூல்களில் முதல் இரண்டு நூல்களிலும் "ஒரு சொல் பல பொருள் அகராதி" உள்ளது. இத்தொகுதி இரண்டு நூல்களிலும் அகரவரிசையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. வடமலை நிகண்டைக்காட்டிலும் பொதிகை நிகண்டில் சொல்லுக்குப் பொருள்கள் அதிகமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. வடமலை நிகண்டில் முதல் எழுத்து மட்டும் அகர வரிசையில் அமைந்துள்ளது. பொதிகை நிகண்டில் இரண்டாம் எழுத்தும் அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சதுரகாதியை இயற்றிய வீரமாமுனிவருக்கும் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே முதல் எழுத்தையும், இரண்டாவது எழுத்தையும் அகர வரிசையில் அமைத்து அகராதி தொகுத்தல் தமிழகத்தில் வழக்கில் இருந்துள்ளது என எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தெளிவாக்கியுள்ளார்கள்.

**அகராதி**

அகராதி என்பது ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டும் தருவதாகும். தமிழில்தான் அகராதி முதன்முதலில் வெளிவந்தது என்றும், 1679-ல் தமிழ்- போர்ச்சுகீசிய அகராதியும், 1719-ல் தமிழ்-ஆங்கில அகராதியும், 1823-ல் சதுரகராதியும் வெளிவந்தன என்றும், 1838-ல் யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் அகராதியும், 1842-ல் வின்சுலோ அகராதியும், 1834-ல் ராட்லரின் அகராதியும் பின்பு ஏராளமான அகராதிகளும் வெளிவந்தன என்றும், 1926-ல் சென்னை பல்கலைக்கழகம் தமிழ் லெக்சிகனை ஏழு தொகுதிகளாக வெளியிட்டது என்றும் அறியப்படுகின்றது.

**அகராதிப்பணி**

தமிழ் மொழியில் முதன் முதலில் தோன்றிய அகராதி வீரமாமுனிவரின் 1732-ம் ஆண்டு எழுதிய சதுரகராதியே ஆகும். பின்னர் பல்வேறு அகராதிகள் தோன்றின, வளர்ந்தன, வெளிவந்தன.

அகராதியியலின் தந்தை என உலக அகராதியியல் புலமையுலகு போற்றும் பேராசிரியர் லாடிஸ்லாவ் சுகுஸ்தா (Ladislav Zgusta) அகராதியில் கொள்கை ஆய்வடங்கல் (Lexicography Today : An annotated Bibliography of the Theory of Lexicography) என்னும் நூலை வெளியிட்டார். மேலும் ஹவுஸ்மேன் (F.J. Hausman), ரெய்ச்ஹ்மேன்(O. Reichmann), வியகண்ட் (H.E. Wiegand)ஆகிய அறிஞர்களோடு இணைந்து மூன்று தொகுதிகள் கொண்ட அகராதிகள்: அகராதியியல், பன்னாட்டுக் கலைக்களஞ்சியம்(Dictionaries: International Encyclopaedia of lexicography), ஒன்றை முறையே 1989, 1990, 1991-இல் வெளியிட்ட பெருமையும் அவருக்கு உண்டு. சொற்களை அகரவரிசையில் அமைப்பது என்பது இந்திய நாட்டில் தொன்று தொட்டுவரும் மரபாகும். கல்வெட்டுகளில் கூட, சொற்கள் அகரவரிசையில் எழுதப்பட்டுள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்லவப் பெருமன்னன் மகேந்திரவர்மனது பெயர்கள், திருச்சி முதலிய

அவனது குகைக் கோயில்களில் அகர வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் கைலாயநாதர் ஆலயத்தில் இராஜசிம்ம பல்லவனின் பெயர்கள் அகரவரிசையில் எழுதப்பட்டுள்ளன. மகேந்திரவர்மனின் சமகாலத்தில் வாழ்ந்த அப்பர் பெருமான் பதிகம் ஒன்றை அகர வரிசையில் வைத்து பாடியுள்ளார் (ஐந்தாம் திருமுறை).

இவ்வாறு ஆங்கிலக்கல்வியின் பயனாகத் தமிழில் அகராதி உருவாகுவதற்கு முன்னர் நிகண்டுகள் அப்பணியைச் செய்தன. எனவே தமிழ் மொழியில் அகராதி உருவாக்கத்திற்கு நிகண்டுகள் அடித்தளம் அமைத்தன எனலாம்.

**பார்வை நூல்கள்**

வேதகிரியார் சூடாமணி நிகண்டு, பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

தமிழ் மொழியியல் - புதிய சிகரங்கள், பதிப்பாசிரியர்கள், எச். சித்திரபுத்திரன், ஆ. கார்த்திகேயன்

வடமலை நிகண்டு, பதிப்பாசிரியர். டாக்டர். இரா. நாகசாமி,

தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல் (1992 வரை). முனைவர். இரா. திருநாவுக்கரசு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# தமிழ் நிகண்டுகளில் யாப்பிலக்கணப் பதிவுகள்

ப. திருஞானசம்பந்தம்
சென்னை

தொல்காப்பிய மரபையொட்டி வளர்ந்த இலக்கண வகைமையாகத் திகழ்வது நிகண்டாகும். இது தொல்காப்பியரின் இடையியல், உரியியல், மரபியல் நூற்பாக்களில் உள்ள பொருள் கூறும் முறைமையைக் கொண்டு வளர்ந்தது. தமிழ் மொழியின் ஐந்திலக்கண மரபு என்ற வகைப்பாட்டில் அடங்காது தனியே சில கிளைகள் உருவாயின. அவ்வாறு தனியே கிளைத்த பிரிவாகவும் நிகண்டைச் சுட்டலாம். நிகண்டைப் பொதுவாக முப்பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். 1. ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி, 2. ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதி, 3. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி. இத் தொகுதி வகைப்பாட்டிற்கு மூலமாகத் தொல்காப்பிய நூற்பாக்கள் விளங்குகின்றன. இவ்வகைப்பாடுகள் நிகண்டுகளில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

நிகண்டு நூல்களில் நமக்குக் கிடைக்கும் மிகவும் பழமையான நிகண்டு திவாகரமாகும். இந்நிகண்டின் அமைப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டே பிற்கால நிகண்டு நூல்கள் உருவாயின. அவ்வாறு உருவான வகைப்பாட்டினுள் காணலாகும் யாப்பிலக்கணம் சார் தகவல்கள் கட்டுரையின் பொருண்மையாக அமைகிறது. இவ்வாய்வின் தரவுகளாகத் திவாகரம், பிங்கலம், சூடாமணி, அகராதி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, கயாதரம், பாரதிதீபம் , ஆசிரிய நிகண்டு, தமிழ் உரிச்சொல் பனுவல் முதலான நிகண்டுகளில் காணப்படும் யாப்பியல் பதிவுகள் இங்குத் தொகுத்து நோக்கப்படுகின்றன.

**தமிழ் நிகண்டுகளும் யாப்பும்**

தமிழில் உள்ள நிகண்டு நூல்களின் பாவகை அமைப்பும் அவை எவ்வாறு மனனம் செய்வதற்குரிய நிலையிலுள்ளன என்பது பற்றியும் மு. சண்முகம் பிள்ளை கூறும் கருத்துரை கவனிக்க தக்கது.

முதலில் வந்த நிகண்டு நூல்கள் நூற்பாவினால் அமைக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் மனப்பாடஞ் செய்வதற்கு எளிதாக இருத்தலைக் கருதி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் முதலிய பாவகைகளாலும் நிகண்டு நூல் செய்வாராயினர். வெண்பா யாப்பில் அமைந்தவை உரிச்சொல் நிகண்டும் நாமதீப நிகண்டும் ஆகும். கட்டளைக் கலித்துறையில் இரண்டு நிகண்டுகள் உள. ஒன்று கயாதரம் மற்றொன்று பாரதிதீபம் ………………..விருத்தப் பாவில் அமைந்த நிகண்டுகளுள் சூடாமணி நிகண்டு முதன்மையாகக் கொள்ளத்தக்கது. அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு, நாநார்த்த தீபிகை போன்றவை இவ்வகையின (1982: 23-24).

தமிழ் இலக்கணங்கள் பெரும்பாலும் நூற்பா யாப்பைப் பயன்படுத்தியதைப் போலவே தொடக்ககால நிகண்டுகளும் நூற்பா யாப்பைப் பின்பற்றியுள்ளன. பின்னர்ப் படிப்படியாக வெண்பா, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, பல்வகை யாப்பு எனக் கால மாற்றத்திற்கு ஏற்றாற் போல் நிகண்டுகள் பா வகையினையும் பாவினத்தையும் பயன்படுத்தியுள்ளன.

இத்தகைய பாவகைப் பயன்பாடுகள் அக்காலத்தைய கல்வியின் மனப்பாடப் பயிற்சிக்கு மிகவும் இன்றியமையாதனவாக அமைந்தன. மனப்பாடப் பயிற்சியில் சொற்களை எளிதில் பயில எதுகை என்ற யாப்பியல் கூறு பேருதவி புரிந்தது. கவி பாடும் மரபில் கடைப்பிடிக்கப்பட்ட இவ்வகையான யாப்பியல் சார் இலக்கணக் கூறுகள் நிகண்டுகளை உருவாக்குவதற்கு வழி வகுத்தன. இதைப் போலவே பா, பாவகை, இசைப்பா வடிவங்கள் சார் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன.

**நிகண்டுகளில் யாப்பியல் பதிவுகள்**

நிகண்டு உருவாக்க மரபில் வெண்பா, நூற்பா யாப்பு முதல் பல்வகையான யாப்பு வகைகளைப் பயன்படுத்தினாலும் எதுகை அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. யாப்பிலக்கண மரபில் ஒரு விகற்பம், இருவிகற்பம், வருக்கம் என எதுகை அமையும். இம்மரபு நிகண்டுகளிலும் ஆட்சி பெற்றுள்ளது. நிகண்டு ஆசிரியர்கள் பலரும் எதுகை அமைப்பை ஒழுக்க நெறியாகக் கடைப்பிடித்துள்ளனர். இதுபோல் இல்லாமல் சிலர் கலப்பின எதுகையைப் பயன்படுத்தி உள்ளமையும் நிகண்டமைப்பில் கண்ணுற முடிகிறது.

*'ஊறே யிடையூறும் உற்றறி புலனும்*
*நூறே பொடியும் நூறு மாகும்'*

(திவா. 2187, 2188)

*'வெள்ளாடு வெண்பா, வெள்ளை நிறத்தன*
*வெள்ளை என்னும் பெயரொடு விரியும்'*

(திவா. 2249)

எனத் திவாகரர் எதுகை நயமிக்க நூற்பா யாப்பை அமைத்துள்ளார். எதுகை நயமிக்க வகையில் பாவமைப்புகளைக் கையாண்டு நூற்பாக்களை வரைந்த நிகண்டாசிரியர்கள் 'எதுகை' என்பதற்கான இலக்கணத்தைச் சுட்டவில்லை. இது கவனிக்கத் தக்கதாகும்.

நிகண்டுகளில் அமைந்துள்ள யாப்பில் சார் இலக்கணப் பதிவுகளைக் கீழ்காணும் தன்மையில் வகைப்படுத்தலாம்.

- யாப்பு என்பதன் பொருள்
- செய்யுள் உறுப்புகள்
  (அசை, சீர், அடி, தொடை (மோனை, இயைபு)
- பா-பாவகை - பாவினம்
- இசைப்பா வடிவம் (வண்ணம், சந்தம், தாண்டகம்)

இப்பதிவுகள் பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி முதலியவற்றில் இடம்பெற்றுள்ளன.

**யாப்பு என்பதன் பொருள்**

'செய்யப்படும் அனைத்தையும் செய்யுள் என்று அழைப்பர். இச்செய்யுளுக்குப் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்ற ஏழுவகை வடிவங்கள் அடிப்படையாகும். இவ்வடிவங்களுள் முதன்மையாய் அமைவது பாட்டு. அப்பாட்டிற்குத் துணையாக அமைவன எழுத்து, அசை, சீர், அடி. இவை மட்டும் இணைந்து வந்தால் அது பாட்டு ஆகாது. இவ்விணைப்பால் ஏற்படும் பொருள் முடிவின் கோர்வையே யாப்பு'(ச.வே. சுப்பிரமணியன்: 1978:53).

இவ்வகையிலான இலக்கண வரையறைகளைக் கற்றுணர்ந்த நிகண்டாசிரியர்களும் யாப்பு என்பதற்கான விளக்கத்தைத் தந்துள்ளனர். திவாகரர் யாப்பு என்பதை இமிழ்த்தல், யாத்தல், பிணித்தல், தொடுத்தல், தொடர்தல், ஆர்த்தல், கட்டல் (திவா. 1682) என்கிறார். இதைப் பின்பற்றும் பிங்கலரும் சிமிழ்த்தல், பிணித்தல், சுருக்கல், தொடுத்தல், கிட்டல், துவக்கல், கட்டுதல் (பிங். 2141) என்கிறார். இதைப் போலவே கயாதரரும் 'நிறுத்த தொடர்பு தொடுத்தல் யாப் பார்த்தலே' (கயா. 370.1), மண்டல புருடரும் 'யாப்பு (என்ப) கவிதை கட்டு (ஆம்)' சூடா.(868) எனப் பதிவு செய்கின்றனர்.

இவ்வாறு யாப்பு என்பதற்கான பல் பொருள்களையும் நிகண்டாசிரியர்கள் ஒருங்கே தொகுத்தளிக்கின்றனர்.

**செய்யுள் உறுப்புகள்**

யாப்பு என்ற வடிவத்தைக் கட்டமைக்க உதவும் உறுப்புக்களைச் செய்யுள் உறுப்புகள் என்பர். இது எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலியவற்றைக் கொண்டமையும். இப்பிரிவுகள் அசை, சீர், அடி, தொடை (மோனை, இயைபு) சார்ந்த பதிவுகள் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ளன. அசை என்பதைத் தமிழ் உரிச்சொல் பனுவல்.

*'கட்டலுந் தங்கலும் வருத்தமு மியக்கமும்*
*அரும்பா வுறுப்பு மசையென மொழிப'* (தமிழ்.உரிச்.5483)

என்கிறது.

சீர் என்பதைத் திவாகரம்,

'*பல்வகை இயங்கள் ஓசை பாரம்*
*ஒல்லுதல் காத்தண்டு புகழ் அழகு*
*செல்வம் சீர்மை சீர் என்று ஆகும்*' (திவா. 2045)

என்றும்,

அடிஎன்பதைச் சூடாமணி

'*அடி செண்டு வெளி தாள்*
*ஆதி, கவிதையின் பாதம் (ஆமே)*' (சூடா.806.4)

என்றும் பதிவு செய்கின்றன.

தொடை விகற்பத்தில் உள்ள மோனை, இயைபுக்கான பொருளைத் திவாகரம் (1529.1710), பிங்கலம் (2247, 1990), பாரதிதீவம் (416), கயாதரம் (339), தமிழ் உரிச்சொல் பனுவல் (5703) முதலிய நிகண்டுகள் தருகின்றன. இவ்வரையறைகள் யாப்பிலக்கண வரையறைகள் போல் முழுமை நிலையில் இல்லாவிட்டாலும் அசை, சீர், அடி, தொடை என்பனவற்றைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

**பா-பா வகை- பாவினம்**

நிகண்டுகள் பாவின் பெயராகத் தூக்கு, யாப்பு, செய்யுள், கவி, பாட்டு, கவிதை முதலியவற்றைக் குறிப்பிடுகின்றன.

'*தூக்கும் யாப்பும் செய்யுளும் கவியும்*
*பாட்டும் கவிதையும் பாஎனப் படுமே*' (திவா. 1846)

என்று திவாகரர் கூற இதைப் பின்பற்றிப் பிங்கலரும் (2093), மண்டல புருடரும் (975), சிதம்பரம் ரேவண சித்தரும் (2440), திருவேங்கட பாரதியும் (494), காங்கேயரும் (207), ஆண்டி புலவரும் (210) தமது நிகண்டுகளில் பாவிற்கான பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

பாவின் வகைகளாக வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மருட்பாவை 21-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் உரிச்சொல் பனுவல்

குறிப்பிடுகின்றது. வெண்பாவை நிகண்டுகள் முதற்பா, முற்பா, தலைப்பா எனச் சிறப்பு அடைமொழி கொடுத்து அழைக்கின்றன.

'*முதற்பா வெண்பா*' (திவா.1847, பிங். 2079, பாரதி.தீப.494) என்று திவாகரமும் பிங்கலமும் பாரதி தீபமும் சிறப்பிக்கின்றன. இது போல் சூடாமணியும் (710), ஆசிரிய நிகண்டும் (210), உரிச்சொல் நிகண்டும் (207), தமிழ் உரிச்சொல் பனுவலும் (5325) வெண்பா குறித்துப் பதிவு செய்கின்றன.

நிகண்டுகள் ஆசிரியப்பாவை அகவலும் தொகையும் என்று குறிப்பிடுகின்றன. அகவலும் தொகையும் ஆசிரியப்பாவே (திவா. 1849) என்றும் பிங்கலமும் (2081), சூடாமணியும் (710), ஆசிரிய நிகண்டும் (210), உரிச்சொல் நிகண்டும் (207), அகராதி நிகண்டும் (93), பாரதிதீபமும் (494), தமிழ் உரிச்சொல் பனுவலும் (5326) பதிவு செய்துள்ளன. கலிப்பாவை முரற்கை (திவா. 1848, சூடா.710, தமிழ் உரிச்சொல்.5327) என்று பதிவு செய்கின்றன. வெண்பா, ஆசிரியப்பாவில் விகற்பித்து வருவதைக் கலிப்பா என்று பிங்கலம் (2080) குறிப்பிடுகின்றது. கலிப்பாவின் உறுப்பாக வரும் முடுகியல், அராகம், குளகம் முதலியவற்றையும் நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளன. வஞ்சிப்பாவைப் பெயர் அளவிலே குறிப்பிடுகின்றன. ஆசிரியப்பாவின் இனமான ஆசிரிய விருத்தத்தையும், கலிப்பாவின் இனமான கட்டளைக் கலித்துறை குறித்தும் பதிவுகள் உள்ளன.

மருட்பாவை

'*கலவைப் பாவு மயங்கியற் பாவும்*
*மருட்பா வென்ன வழங்கற் குரிய*' (தமிழ். உரிச். 5329)

எனத் தமிழ் உரிச்சொல் பனுவல் குறிப்பிடுகிறது. இவ்வாறு வெண்பா முதல் மருட்பா வரையிலான பா வகைகள் குறித்தும் பாவினங்கள் குறித்தும் நிகண்டுகளில் பதிவுகள் உள்ளன.

**இசை பாடல் வடிவங்கள்**

இசைப்பாடல்கள் வடிவங்களான வண்ணம், சந்தம், தாண்டகம் பற்றிய குறிப்புகள் நிகண்டுகளில் இடம்பெற்றுள்ளன. வண்ணம்

என்பதை ஆசிரியப்பாவின் இனமாக யாப்பிலக்கணங்கள் சுட்டும். ஆனால் இது பற்றிய குறிப்புகள் எதுவும் நிகண்டுகளில் இல்லை. 'அராகம் முடுகியல் வண்ணம் ஆகும்' (திவா.1850), 'வண்ணம் சந்தம்' (திவா.140) பிங். 1946), வண்ணம் ஏர் சந்தம் பண்பு ஆம் (சூடா. 817) என வண்ணம் குறித்த பதிவுகள் நிகண்டுகளில் உள்ளன.

சந்தம், தாண்டகம் இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடைய வடிவங்களாகும். இதைப் பற்றி யாப்பருங்கல விருத்தியுரை குறிப்பிடுகின்றது (யாப். விருத்தி. பக். 476). சந்தம், தாண்டகம் இரண்டிற்குமான ஒற்றுமை-வேற்றுமை எழுத்தெண்ணிக்கையிலும், சீர் எண்ணிக்கையிலும் குறிப்பிடப்படும். நிகண்டுகளில் சந்தம், தாண்டகம் இரண்டிற்குமான எழுத்தெண்ணிக்கையும் அடி அளவும் பதிவு பெற்றுள்ளன.

*'இருபது மேலும் இருமூன்று எழுத்து நான்கு*
*அடியும் வருவது சந்தப் பாட்டே'*
*'மற்று அதன் மிகுத்த சொல் தரும்பெயர்த் தாண்டகம்'*
(திவா. 1852, 1853)

என எழுத்தெண்ணிக்கையும்

...... நான்கடி எய்தும் செய்யுள்
தருவது சந்தம் தானமிகு தாண்டகம் தான் அது என்பர்
(பாரதிதீப. 495)

அடி அளவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதைப்போல பிங்கலமும் (4023), சூடாமணியும் (559, 711, 817, 858), ஆசிரிய நிகண்டும் (195, 210), கயாதரமும் (308), அகராதி நிகண்டும் (1373, 3123), தமிழ் உரிச்சொல் பனுவலும் (5335) சந்தம், தாண்டகம் பற்றிப் பதிவு செய்கின்றன.

**தொகுப்புரை**

☆ தமிழ் நிகண்டுகள் கால மாற்றத்திற்கு ஏற்றாற் போல் யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தி உள்ளன. அவ்வடிவங்களுக்கான இலக்கணங்களைப் பதிவு செய்தலையும் முன்னெடுத்துள்ளன.

☆யாப்பு என்பதற்குரிய பல்பொருள்களையும் நிகண்டுகள் ஒருங்கே தொகுத்தளித்துள்ளன.

☆பாவடிவங்களைக் கட்டமைக்க உதவும் செய்யுள் உறுப்புகள் சிலவற்றைப் பற்றி நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் இவை ஒருசொல் பலபொருள் என்ற தன்மையில் அமைந்து உள்ளன.

☆வடமொழி இலக்கண மரபுகளான சந்தம், தாண்டகம் பற்றிய குறிப்புகளும் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ளன.

☆யாப்பியல் குறித்த பதிவுகள் யாவும் ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன.

☆யாப்பியல் சார் பதிவுகள் சொற்களுக்கான பொருள் என்ற அளவில் மட்டுமே உள்ளன. யாப்பிலக்கண வகைகள், வளர்ச்சிகள் பற்றிய பதிவுகள் இல்லை.

## துணை நின்ற நூல்கள்


அருணாசலமும். மு., 1975 தமிழ் இலக்கிய வரலாறு (9-ஆம், 10-ஆம் நூற்றாண்டு) தி. பார்க்கர், தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம் சென்னை.

சற்குணம். மா., 2002 தமிழ் நிகண்டுகள் ஆய்வு, இளவன் பதிப்பகம், சென்னை.

சண்முகம் பிள்ளை, மு. 1982 நிகண்டுசொற்பொருட் கோவை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

சுப்பிரமணியன், ச.வே. 1978 இலக்கணத் தொகை - யாப்பு பாட்டியல், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

மணிகன்டன். ய., 2001 தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி, விழிகள் பதிப்பகம், சென்னை.

ஜெயதேவன்,வ., 1999 தமிழ் அகராதியியல் அன்றும் இன்றும், அஸ்வினி புக் கம்பெனி சென்னை.

# தமிழ் நிகண்டு யாப்பு

தி.அ. ரமேஷ்
சென்னை

தமிழ் யாப்புச் சூழல் காலந்தோறும் பல்பரிமாண வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருவதைக் காணமுடிகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் சூழல் சார்ந்த நிலைப்பாட்டில் ஒரு வடிவம் ஆட்சி செலுத்தி வந்துள்ளது. முன்னைய மரபில் இலக்கணம் என்றால் நூற்பா யாப்பும் இலக்கியம் என்றால் ஆசிரியமும் கலியும் பெருவழக்காயின. அடுத்துச் சங்கமருவிய காலத்தில் நீதியைப் (அறக்கருத்துக்களைப்) பாடுதற்கு வெண்பா என்ற நிலை மேலோங்கியது. காப்பிய காலத்தில் தொடர்ச்சியான கதைப்பின்னலுக்கு விருத்த யாப்பு முன்னெடுக்கப்பட்டுப் பரவலாக்கம் பெற்றது. இதே யாப்பு வடிவம் பக்தி இலக்கிய காலத்திலும் நிலைபெற்றுள்ளது. கால மாற்றத்திற்கும் இலக்கண இலக்கிய பொருண்மைக்கும் ஏற்ப யாப்பு வடிவம் தன் மூலவடிவத்திலிருந்து நெகிழ்ந்து பல வடிவங்களாக வளர்ச்சி பெற்றுள்ளது. அந்த அடிப்படையில் சொற்களுக்குப் பொருள் கூற யாப்பு குறித்து ஆழமான ஆய்வுகள் நிகழ்ந்ததாகப் புலப்படவில்லை. அதனடிப்படையில் நிகண்டு யாப்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**நூற்பா யாப்பு**

நூற்பா என்பது சூத்திரமாகும். இச் சூத்திரத்திற்குத் தொல்காப்பியத்தில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. கண்ணாடியில் விழும் நிழல் போல் படித்தவுடன் பொருள் விளங்கும் தன்மையில் அமைப்பது சூத்திரமாகும்.

*சூத்திரம் தானே*
*ஆடிநிழலின் அறியத் தோன்றி*

*நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க*
*யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே*
(தொல். பொருள்.471)

சூத்திர யாப்பிற்கு இலக்கணம் கூறிய தொல்காப்பியமே அதற்குச் சான்றாக அமைந்துள்ளது. தொல்காப்பியத்தின் இடையியல், உரியியல், மரபியல் ஆகிய மூன்று இயல்கள் நிகண்டு தோற்றத்திற்கு அடிப்படைகளாயின. அந்த வகையில் முதல் நிகண்டாகத் தோற்றம் பெற்ற திவாகரம் நூற்பா யாப்பிலே தொல்காப்பிய யாப்பை அடியொற்றி அமைந்துள்ளது. பிற்காலத்தில் சூத்திர யாப்பு நூற்பா அகவல் என்று ஆசிரிய வகையாகக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

"*நூற்பா யாப்பு நிகராம் அகவல்*" (யாப்பு நூல்.120)

த. சரவணத்தமிழன் நூற்பாவை அகவலுக்குச் சமம் என்று குறிப்பிடுவதன் மூலம் தெரியலாம். மேலும் முதல் நிகண்டான திவாகரத்திலும் நூற்பா அகவல் என்ற சொல்லுக்குப் பொருள் வழங்கப்பட்டுள்ளது இதைத் தொடர்ந்து பிங்கலத்திலும் சொல்லுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது.

திவாகரத்தைத் தொடர்ந்து பிங்கல நிகண்டு, அகராதி நிகண்டு, கைலாச நிகண்டு, வடமலை நிகண்டு, பொருட்தொகை நிகண்டு, அபிதான மணிமாலை, தமிழ் உரிச்சொற் பனுவல், பொதிகை நிகண்டின் இரண்டாம் பகுதி, மஞ்சிகன் ஐந்திணை நிகண்டு ஆகியன நூற்பா யாப்பில் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது, எளிதில் மனப்பாடம் செய்வதற்கும் பொருளை உடனே அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக நூற்பா யாப்பு அமைந்துள்ளது. அதனால் திவாகரத்தைப் பின்பற்றிச் சொற்களுக்குப் பொருள் கூறுவதோடு யாப்பு அமைப்பையும் பின்பற்றி மேற்கண்ட நூல்கள் படைக்கப்பட்டுள்ளன.

**வெண்பா யாப்பு**

தமிழ் நிகண்டுகளில் இரண்டு நூல்கள் மட்டுமே முழுதும் வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ளன. அவ்வடிவத்திற்கான இலக்கணத்தைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

- ஈற்றடி முச்சீராயும் ஏனைய அடிகள் நாற்சீராயும் அமைந்து வருதல்.
- இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளைப் பயின்று வருதல்.
- ஈற்றடியின் இறுதிச்சீர் நாள், மலர், காசு பிறப்பு என்னும் வாய்பாட்டில் ஒன்றைக் கொண்டு முடிதல்
- வகைகளுக்கு ஏற்ப வடிவத்தில் வேறுபட்டுக் காணப்படுதல்

என்ற நிலையில் அடிப்படையான வெண்பா இலக்கணத்தைக் குறிப்பிடலாம்.

வெண்பாவின் வகைகளுள் ஒன்றாக நேரிசை வெண்பா உள்ளது. இவ்வடிவமே உரிச்சொல் நிகண்டு மற்றும் நாமதீப நிகண்டு இரண்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வெண்பா மேற்கூறிய வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று வரும். 17-ஆம் நூற்றாண்டில் காங்கேயர் இயற்றிய உரிச்சொல் நிகண்டு கடவுள் வணக்கப் பாடலுடன் சேர்த்து மொத்தம் 287 நேரிசை வெண்பாக்களால் ஆகியது. இந்நிகண்டு ஒரு விகற்பம், இரு விகற்பம் என்ற நிலையில் அமைப்பைப் பெற்று விளங்குகிறது.

கல்யாணம், கிரீடை என்ற சொற்களின் பொருள்களை எடுத்துக் கூறும் நேரிசை வெண்பாவைக் காணலாம்.

"*வதுவைகைப் பற்றல் மணம் கலி யாணம்*
*விதியுளி வேட்டல்வி வாகம் - புது மன்றல்*
*தொடலை விலாசனை வண்டல் கிரீடை*
*கெடவரல் கேளிக்கை யாம்*" (உரி.177)

வெண்பா யாப்பிலும் மற்ற யாப்பு வடிவங்களிலும் எதுகைகள் வருக்க எதுகைகளாகவே அமைந்துள்ளன.

நாமதீப நிகண்டும் நேரிசை வெண்பாவால் ஆன 808 செய்யுள்களை உடையது. எதுகை, மோனை, தொடை நயங்கள்

சீராகப் பொருந்தியுள்ளன. இந்நிகண்டுகள் மட்டுமே வெண்பா யாப்பில் அமைந்துள்ளன என்று குறிப்பிடினும், ஆதி நிகண்டான திவாகரத்தில் ஓரிடத்தும் பிங்கல நிகண்டில் நான்கிடங்களிலும் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது. புறத்திணைகள் பற்றிக் கூறப் பற்றொடை வெண்பாவைப் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

"*வெட்சி நிரை கவர்தல் மீட்டல்*

.... ....... ...... ....... ......

*அப்பெயர் பெறுதலும் அந்நிலத்து உரிதே*". (திவா. 2432)

இதே பொருண்மையைக் குறிப்பிடப் பிங்கலத்திலும் இவ்வெண்பா வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது (பிங். 1474). மேலும் நேரிசை வெண்பா வடிவில் 1344, 1346, 1348, 1349, 1350, 1354 ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. இவ்வெண்பாக்கள் ஆறும் இருவிகற்பத்தால் அமைந்தவை. பிங்கல நிகண்டில் அமைந்த நேரிசை வெண்பாவை நோக்கலாம்.

"*தன் எழுத்துப் பாலன் குமரன் இரண்டாகும்*
*மன்னவற்கு மூன்றாம் வகுக்குங்கால் - துன்னிய*
*நஞ்சார் விருத்தமாம் நான்காகில் ஐந்தாகில்*
*எஞ்சா மரணத்து இயல்பு*" (பிங். 1346)

இதை மு. அருணாசலம் நூற்றாண்டு நோக்கில் எழுதிய இலக்கிய வரலாற்றில் 10-ஆம் நூற்றாண்டு தொகுதி - 3 இல் (பக். 122) குறிப்பிட்டுள்ளார். நூற்பா யாப்பில் அமைந்த முதல் நிகண்டுகளான திவாகரத்திலும் பிங்கலத்திலும் வெண்பா யாப்பு ஓரிரு பாடல்களாகப் பயின்றுள்ளது. பெரும்பலான நிகண்டுகளின் காப்புச் செய்யுள் வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து வெண்பா யாப்பின் சிறப்பு கருதித் தனித்து நூல் முழுதும் பாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**கட்டளைக் கலித்துறை யாப்பு**

கலிப்பாவின் இனங்களுள் ஒன்றான கலித்துறையின் ஒருவகையே கட்டளைக் கலித்துறை. இது அடிதோறும் ஐந்து சீர்களைக் கொண்டு நான்கடியான் நடப்பது. ஒவ்வொரு அடியின் இறுதிச்சீரும் காய்ச்சீரான் அமையும். அருகிக் கனிச்சீர்கள் வரலாம். ஏகாரத்தான முடியும். எழுத்தெண்ணிப் பாடப்படும் நேரசையில்

தொடங்கும் பாடல் அடிதோறும் ஒற்று நீக்கி 16 எழுத்துக்களும் நிரையசையில் தொடங்கும் பாடல் 17 எழுத்துக்களும் பெற்று அமையும். அசை அடிப்படையில் நேரசைக் கட்டளைக் கலித்துறை நிரையசைக் கட்டளைக்கலித்துறை என இருவகைப்படும். இதுவே கட்டளைக் கலித்துறையின் பொதுவான இலக்கணமாகும்.

இந்த யாப்பு வடிவத்தில் 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கயாதரமும் பாரதிதீபமும் 20-ஆம் நூற்றாண்டில் சோழவந்தனூர் மகாவித்துவான் அரசஞ்சண்முகனார் இயற்றிய நவமணிக் காரிகை நிகண்டும் எழுதப்பட்டுள்ளன. இதில் முன்னிரண்டு நிகண்டுகள் முறையே 566, 665 கட்டளைக் கலித்துறைகளைப் பெற்றுள்ளன. கயாதரம் 324 நேரிசைக் கட்டளைக் கலித்துறைகளையும், 242 நிரையசைக் கட்டளைக் கலித்துறைகளையும் கொண்டுள்ளது. இதே போன்று பாரதிதீபத்திலும் 293 நேரசைக் கட்டளைக் கலித்துறையும் 372 நிரையசைக் கட்டளைக் கலித்துறையும் அமைந்துள்ளன. நவமணிக் காரிகை தெய்வப் பெயர் தொகுதி ஒன்றையே கொண்டுள்ளது. அதில் 78 கட்டளைக் கலித்துறைகள் உள்ளன. 55 நிரையசைக் கட்டளைக் கலித்துறையும் 23 நேரசைக் கட்டளைக் கலித்துறைகளும் பயின்றுள்ளன.

*வஞ்சமில் சன்பகஞ் செண்பகஞ் சால மராமரமா*
*எஞ்சலி லாச்சா வகுள மிலஞ்சி மகிழிரத்தி*
*பிஞ்சு மீறல் திமிசு கணிவேங்கை வெள்ளிவிளாப்*
*பஞ்சரத் தோடுசெங் கோடு செருந்தியென் பான்மொழியே.*

(கயா. 190)

இப்பாடல் ஒரு விகற்பத்தால் அமைந்த நேரசைக் கட்டளைக் கலித்துறை.

*உலகம் புகழுமொன் மீந்தமிழ்ச் செஞ்சொறு ததியின்கட்*
...... ...... ....... ....... ....... ........ ........ ...... .....
*நிலவணி மும்மத நால்வாய்க் களிற்றை நின்குவனே.*

(நவமணி. 1)

இப்பாடல் ஒருவிகற்பத்தால் அமைந்த நிரையசைக் கட்டளைக் கலித்துறை.

தொல்காப்பியரின் எழுத்தெண்ணி அடிவகுக்கும் முறையின் நீட்சி ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு தொடர்ந்துள்ளதை மேற்கண்ட நிகண்டுகள் மற்றும் இவ்யாப்பில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களையும் கொண்டு அறியலாம். இவ்வடிவத்திற்குக் 'கட்டளை கலித்துறை' என்னும் பெயரிலேயே சி.வை. தாமோதரம் பிள்ளை 19-ஆம் நூற்றாண்டில் நூல் ஒன்று எழுதியுள்ளார் அகம் பாடுதற்கு இயற்றியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**விருத்தப்பா யாப்பு**

தமிழ் யாப்பில் பாக்களின் இனங்களில் ஒன்றான விருத்த வகையே பெருவழக்கைப் பரவலாக்கம் பெற்றுள்ளது எனலாம். அவ்விருத்தாப் பாக்களின் அடிப்படையில் மூன்று வகை என்று குறிப்பிடினும் பல்வகை கிளை வடிவங்களாக வளர்ந்துள்ளது.

- சீர்களின் எண்ணிக்கை
- வாய்பாடு (சீர்)
- சந்த மாத்திரை வாய்பாடு

என்று மூன்று நிலைகளில் பிரித்துப் பார்த்தாலும் மேலுள்ள இரு வகைகளில் பல வகை வடிவங்கள் காணப்படுகின்றன. சீர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அறுசீர் விருத்தம். எழுசீர் விருத்தம் என்று பெயர் அமைந்தாலும் அவற்றிலும் வாய்பாடு இடம்பெற்றுவரும். சந்த மாத்திரை கொண்டு பாடும் மரபு பிற்காலத்தில் வளர்ந்துள்ள ஒன்றாகும். இந்த அமைப்பில் தமிழ் நிகண்டில் ஆசிரிய நிகண்டு ஒன்று மட்டும் அமைந்துள்ளது. இந்த வடிவம் பற்றித் தெளிவான முடிந்த முடிபான ஒரு வரையறை இன்மையால் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

விருத்த யாப்பில் வாய்பாடு கணக்கிடுகையில் விளச்சீர் வருமிடத்துக் காய்சீர்களும் காய்சீர் வருமிடத்து விளச்சீரும் பயின்று வருவது விதிவிலக்காகும். இதை விருத்தப்பாவியலின் உரையில், 'விளத்திற்குப் பதிலாய் மாங்காய்ச்சீரும் வரலாம். ஆகையால்

இவ்வகை விருத்தம் இருவகை வெண்டளைகளும் விரவியிருக்கப் பெறுதலும் இயல்பேயாம்' (வி.ப. 6, உரை) என்பதாக வீரபத்திர முதலியார் குறிப்பிட்டுள்ளார். மேலும் இது குறித்து, த. சரவணத் தமிழனும் தம் யாப்பு நூலுள் கூறியுள்ளார். இதனுடன் சேர்த்து மெல்லின இடையின ஒற்றுகள் சீர்களில் இடம்பெறின் தளை தட்டுமிடத்தும் வாய்பாடு மாறுமிடத்தும் விடுத்துச் சீர்கொள்ளலாம் என்று 'நெடில்வலி பன்றி இரண்டொற்றின் முன் வரும் நிரை (யாப்பு நூ. 36) குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட இரு விதிவிலக்குகளும் தமிழ் நிகண்டுகளின் யாப்புகளில் விரவிக்கிடக்கின்றன.

விருத்த யாப்பில் சூடாமணி, அரும்பொருள்விளக்க நிகண்டு, நாநார்த்த தீபிகை, வேதகிரியார் சூடாமணி, விரிவு நிகண்டு, பொதிகை நிகண்டு, உசித சூடாமணி, பல்பொருட் சூடாமணி ஆகியவை இயற்றப்பட்டுள்ளன. ஆனாலும் முதலில் உள்ள நான்கு நிகண்டுகள் மட்டுமே கிடைத்துள்ளன. பின்னர் உள்ளவையின் யாப்பு பற்றி மு. அருணாசலம் தம் இலக்கிய வரலாற்றில் இறுதித் தொகுதியில் பட்டியலிட்டுள்ளார். அதைக் கொண்டு அறிந்து கொள்ளமுடிகிறது.

பா இனங்களின் அடிப்படையில் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம் ஆகிய மூன்று வகை விருத்தங்கள் இடம்பெற்றுள்ளன. சீர் வகையாக மூன்று சீர்கள் தொடங்கிப் பதினான்கு சீர்கள் வரை விருத்தங்கள் காணக்கிடக்கின்றன. வாய்பாடு அமைப்பைக் கொண்டு நோக்கின் பலவகை விருத்தங்கள் பயின்றுள்ளதை அறியமுடிகிறது. பா இன வகையானாலும், சீர் வகையானாலும் வாய்பாடு இடம் பெறும் ஓரிரு இடங்களில் வாய்பாடு இன்றிக் காணப்படும்.

வாய்பாடு அமைப்பில் விருத்தப்பாக்களுக்கு இலக்கணம் கூறும் நூல் விருத்தப் பாவியலாகும். ஆசிரிய விருத்தத்திற்கு மட்டும் பத்து வகை வாய்பாடு முறைகளைக் குறிப்பிட்டுள்ளது. அதை நிகண்டுகளில் பயின்றுள்ள விருத்தயாப்போடு பொருத்திப்பார்த்தல் தெளிவைத்தரும்.

1) விளம் மா தேமா வாய்பாடு

*சீர்கிள மாச்சீர் தேமாச்*

*சீரினைந் திரட்டு மீங்கே* (வி.ப.முதற். 1)

வாய்பாடு அமைப்பிலே அமைந்த இலக்கணமாகும்.

இந்த வாய்பாடு அமைப்பில் சூடாமணி நிகண்டு, வேதகிரியார் சூடாமணி அரும்பொருள் விளக்க நிகண்டு மூன்றும் முழுமையாகப் பயின்றுள்ளன. நாநார்த்த தீபிகையில் பல விருத்தங்கள் விரவிக் காணப்படுகின்றன. அவற்றுள் மேற்கண்ட வாய்பாடு அமைப்பு விருத்தங்களும் இடம்பெற்றுள்ளன.

தகைமையே குணமே யாட்சி சான்றாண்மை யெனவே முப்பேர்;
புகையென்ப நூமங் காதம்; பூக்குதல் நினைத்தல் தோன்றல்;
திகைதிசை சுணங்கி னாமம்; சோகென்ப வயிர மாசாம்;
பகையில லடித்தல் சாதல்; பகர்தலே விற்றல் பேசல்.
(அரும். 22)

குறைதலின் பேர்நி ரப்பே குன்றலே யருக லஃகல்
சிறுகலே யீன மூனஞ் சிங்கலே யெஞ் றேய்வாய்
துறுமலே சடிலத் தோடு துன்னலே கஞறல் வீங்கல்
செறிநறி பொதுளல் பெற்றுத் திணுங்கல்பத் துந்நெருங்கல்.
(சூடா. 546)

சாரணர் ஒற்றர் என்ப; சமண்முனி வருக்கும் ஆகும்
வாருணம் ஓர்பு ராணம்; மறிகடவொ(ம்) மேக்கு என்ப;
வேரெனப சுவேதம் மூலம்; வீரனே அசோகன் மீளி;
பூருவம் பழமை ஆதி இந்திரி முப்போர் போற்றும்.
(வே.சூ. 369)

வாசரை நிசிபென் பூமி வாசிதை பெண்பொன் னானை
பேசலஞ் சமர்த்து லக்கை குயிலழ கியதும் பேசும்
மாசல முதலை நோயாம் மாசலன் றுதிப்போன் கள்வன்
மூசலே மொய்த்தல் சாய்தல் மோசைதா னிலவு வாழை.
(நாநார்த்த. 142)

மேற்கண்ட பாடல்கள் ஒவ்வொரு நூலிலிருந்தும் எடுத்துக்காட்டப்பட்ட விளம் மா தேமா விளம் மா தேமா என்ற வாய்பாடுகளைக் கொண்டவை. சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியை மேலும் விரிவுபடுத்தி எழுதினால் அந்நூலும் சூடாமணி நிகண்டின் யாப்பையே பின்பற்றியுள்ளது. எப்படியாயினும் நிகண்டுகளில் நூற்பா யாப்பிற்கு அடுத்த நிலையில் விருத்தப்பாக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. விருத்தப்பாக்களிலும் விளம் மா தேமா வாய்பாடு விருத்தங்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

2. மா, மா, காய் வாய்பாடு:

இருமா காய்ச்சீ ரரையடிக்கா
யிவையே மற்றை யரையடிக்கும்
...... ....... ....... ....... ...... (வி.ப.முதற்.2)

இந்த வாய்பாடு அமைப்பில் நாநார்த்த தீபிகையில் மட்டும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மற்றைய நிகண்டுகளில் காணப்படவில்லை.

ஆக்கம் பெருக்கங் கொடிப்படைதாக்
கணங்கி லாபம் பொருளைம்பேர்
.... ..... ...... ..... ...... (நாநார்த்த. 78)

என்று தொடங்கும் இப்பாடல் மேற்கண்ட வாய்பாடு அமைப்பில் புனையப்பட்டுள்ளது. அறுசீர் கொண்டு பாடும் விருத்தங்களில் மேற்கண்ட இரு வாய்பாடு வடிவங்களே பயன்படுத்தப் பெற்றுள்ளன.

3. விளம் மா விளம் மா விளம் விளம் மா வாய்பாடு:

எழுசீர்கள் கொண்டும் விருத்தப்பாக்கள் பாடப்படுகின்றன. ஆனால் பயன்பாட்டில் அருகியே காணப்படுகின்றன. அந்த வகையில் இவ்வடிவம் நிகண்டுகளிலும் ஓரிடத்து மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

நால்விள மும்மா நடைபெறுங் கொடி
நச்சுவே னயனமா ரமிழ்த்தே (வி.ப.மூன்.)

எழுசீர் விருத்தயாப்பிற்கு இவ்வாய்பாடு ஒன்றே

விருத்தப்பாவியலிலும் பிற யாப்பு நூல்களான ‘கவிபாடலாம்’ ‘எளிதாகப் பாடலாம்’ போன்றவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாநார்த்த தீபிகையில் ஓரிடத்து வந்துள்ளது.

திருமறு மார்ப னுலகெலாம் புருக்குந்
திருநெடு மால்கல்வி பயிறற்
...... ...... ..... ...... .......
பொருள்பெற வெழுத்தின் முறையினா
நாநார்த்த தீபிகை யினவிது புகல்வாம்.
(நாநார்த்த. கடவு. திருமால்)

4. எண்சீர் ஆசிரிய விருத்தப் பாடல்கள் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ளன. ஆனால் விருத்தப்பாவியல் கூறும் வாய்பாடு அமைப்பைப் பெற்று வரவில்லை. ‘கவிபாடலாம்’ என்ற யாப்பு உரைநடை நூல் குறிப்பிடும் காய், காய், காய், மா என்ற வாய்பாடு அமைப்பில் இயற்றப்பட்டுள்ளன. இந்த வாய்பாடு அமைப்பில் பொதிகை நிகண்டின் முதல் தொகுதியும் நாநார்த்த தீபிகையில் பரவலாகப் பலவகை விருத்தங்களுக்கு இடையிடையேயும் பயின்று வந்துள்ளன.

*மங்கைபங்கன் சம்புமகே சன்வாம தேவன்*
*மாதேவ னிமலன்வி டையோன்கொன்றை சூடி*
..... ..... ..... ...... ........ ...... (பொதிகை. முதற்.3)

*வசதி மரு தத்தூர்வீ டிராத்திரி நல் விடமாம்*
*வசுகமெருக் குச்சிவமல் விகையாத்துப் பும்பேர்*
...... ..... ..... ...... ..... ...... (நாநார்த்த. 118)

இந்நிலைகளில் வாய்பாடு அடிப்படையில் ஆசிரிய விருத்தங்கள் இடம்பெற்றுள்ளன.

கலிவிருத்த யாப்பும் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ளது. இவ்யாப்பு நாநார்த்த தீபிகையில் மட்டுமே இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கது. மற்ற நிகண்டுகளில் இடம்பெறவில்லை. விருத்தப்பாவியல் கூறும் வாய்பாடு இங்குப் பொருந்தவில்லை. யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடும் நான்கு சீர் நான்கு அடி என்ற

இலக்கணம் மட்டுமே பொருந்தியுள்ளது.

*பசநம் பாகஞ் சையல்வழி பாடு*
*வசநம் வார்த்தை வசித்தல் மனைதுகில்*
*தசமி பத்தாஞ் திதிகூன் கிழவன்*
*குசலம் நன்மை சமர்த்துப் புண்ணியம்* (நாநார்த்த.120)

வஞ்சிவிருத்த யாப்பும் நாநார்த்த தீபிகையில் மட்டும் இடம்பெற்றுள்ளது. இதற்கான இலக்கணமாகக் கூறப்படுவது. இருசீர் அல்லது முச்சீர்கள் கொண்டு நான்கடியால் நடப்பதாகும். அறுசீர் ஆசிரிய விருத்தத்தின் அரையடிக்குக் கூறப்படும் விளம்-மா-தேமா மற்றும் மா-மா-காய் வாய்பாடுகள் இதன் ஓரடிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாநார்த்த தீபிகையில் இடம்பெற்ற வஞ்சிவிருத்தங்களைக் காணலாம்.

*ஏறிது சிறுமை பயனின்மை*
*தெளித னெரித்த லழித்தற்பேர்*
*நறைகள் வசம் நறும்புகையாம்* (நாநார்த்த. 1044)

இது மா-மா-காய் வாய்பாடால் அமைந்த முச்சீர் வஞ்சி விருத்தம்.

*திறல்கொடுஞ் சமமான் மைப்போர்*
*கிறிபடிற் றுச்சொல் பாதை*
*நெறிலென்ப வடக்கம் வேகம்* (நாநார்த்த.1046)

இது விளம்-மா-தேமா வாய்பாடான் அமைந்த முச்சீர் வஞ்சிவிருத்தம்.

நாநார்த்த தீபிகையில் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் ஆகிய மூன்று பாக்களின் இனங்களும் அவற்றின் உள் வகைகளும் இடம்பெற்றுள்ளன. இப்படியாகத் தமிழ் யாப்பு நிகண்டுகளில் பயின்று வந்துள்ளன.

**முடிவுரை**

நிகண்டுகளின் யாப்பு வடிவங்கள் எளிமை கருதியே மாற்றமடைந்துள்ளதை அறியமுடிகின்றது. நூற்பா யாப்பிற்கு அடுத்து ஆசிரிய விருத்தங்களே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஆசிரிய விருத்தத்தில் விளம் மா தேமா வாய்பாடு ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இன்னும் நிகண்டு யாப்புகளில் நுணுகி ஆராய வேண்டிய களங்கள் உள்ளன என்பது குறிக்கத்தக்கது.

## துணைநூல்கள்

1. அரசஞ்சண்முகனார், நவமணிக் காரிகை நிகண்டு.
2. அருமருந்தைய தேசிகர், அரும்பொருள் விளக்க நிகண்டு, செந்தமிழ் பிரசுரம் 1931.
3. ஆண்டிப்புலவர், ஆசிரிய நிகண்டு, தஞ்சை சரஸ்வதி மஹால் 1975.
4. இராம சுப்பிரமணிய நாவலர், தமிழ் உரிச்சொற்பனுவல், செந்தமிழ் நிலைய வெளியீடு 1984.
5. ஈசுர பாரதியார், வடமலை நிகண்டு, உ.வே.சா. 1983.
6. கயாதரர், கயாதரம் சென்னை சர்வகலா சாலை 1939.
7. காங்கேயர், உரிச்சொல் நிகண்டு, சாந்தி சாதனா 2003.
8. சரவணத் தமிழன், த., யாப்பு நூல், தமிழன் வெளியீடு, 1984.
9. சாமிநாதக் கவிராயர், பொதிகை நிகண்டு, 1934.
10. சிதம்பர ரேவணசித்தர், அகராதி நிகண்டு, செந்தமிழ்ப் பிரசுரம் 1921.
11. சிவசுப்பிரமணியக் கவிராயர், நாமதீப நிகண்டு, தமிழ் பல்கலைக்கழகம், 1930.
12. சுப்பிரமணிய பாரதி, பொருள் தொகை நிகண்டு.
13. திருவம்பலத் தின்ன முதம்பிள்ளை, அபிதான மணிமாலை, உ.வே.சா. வெளியீடு, 1988.
14. திருவேங்கட பாரதி, பாரதி தீபம், சென்னைப் பல்கலைக்கழகம் 1980.
15. திவாகர முனிவர், திவாகரம், சென்னைப் பல்கலைக்கழகம் 1993.
16. தொல்காப்பியர், தொல்காப்பியம்-பொருள்-இளம்-தமிழ் மண் பதிப்பகம், 2003.
17. பிங்கல முனிவர், பிங்கலம், கழக வெளியீடு 1968.
18. மண்டலபுருடர், சூடாமணி, ஆறுமுக நாவலர் வி. அச்சகம் 1966.
19. முத்துசுவாமிப்பிள்ளை, நாநார்த்த தீபிகை, சென்னைச் சர்வகலா சாலை 1936.
20. வீரபத்திர முதலியார், விருத்தப்பாவியல்.
21. வேதகிரி முதலியார், வேதகிரியார் சூடாமணி நிகண்டு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1997.

# நிகண்டுகளில் இடைச்சொற்கள் (திவாகரம், பிங்கலம், சூடாமணி)

ஜா. கிரிஜா
சென்னை

தமிழிலக்கணிகள், உரையாசிரியர்கள், மொழியியலறிஞர்கள் பலரும் இடைச்சொற்கள் பற்றிப் பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றனர். அவ்விளக்கங்களிலிருந்து இடைச்சொல் என்பது பெயரையும் வினையையும் சார்ந்து அதனை வேறுபடுத்தவோ, பொருண்மைக்குத் தெளிவு ஏற்படுத்துவதற்கோ, பொருண்மையை உறுதி செய்யும் வகையிலோ இடைச்சொற்கள் காணப்படுகின்றன. இத்தன்மையிலான இடைச்சொற்கள் நிகண்டுகளில் எவ்வகையில் அமைந்துள்ளன. நிகண்டு ஆசிரியர்கள் தொல்காப்பியர் கூறும் இடைச்சொற்களைத் தவிர மேலும் அதிகமான இடைச்சொற்களைக் கூறுகின்றனரா அல்லது எவ்வாறு இடைச்சொற்களைத் தவிர மேலும் அதிகமான இடைச்சொற்களைக் கூறுகின்றனரா அல்லது எவ்வாறு இடைச்சொற்களை அவர்கள் கையாளுகின்றனர் என்பதைத் திவாகரம், பிங்கலம், சூடாமணி என்னும் முதல் மூன்று நிகண்டுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை எழுந்துள்ளது.

‘இலக்கண மரபில் இடைச்சொற்கள்’ ‘இக்காலத் தமிழ் இடைச்சொற்கள்’, ‘பத்துப்பாட்டில் இடைச்சொற்கள்’ என்னும் நூல்கள் இடைச்சொற்களைத் தொகுத்து வகைப்படுத்துகின்றன. கோட்பாட்டு முறையில் ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம் போன்ற அறிஞர்கள் இடைச்சொல்லின் தன்மையை ஆய்வு செய்து பல்வேறு கருத்துகளை உரைத்துள்ளனர். இச்சூழலில் அனைத்து நிகண்டுகளையும் அடிப்படையாகக் கொண்டு இடைச்சொற்கள்

குறித்து வரலாற்று நோக்கில் ஆய்வதற்கு முன்னோடியாக முதல் மூன்று நிகண்டுகளில் இடைச்சொற்கள் அமைந்துள்ள தன்மையினை விவரிக்கிறது.

**இடைச்சொல் வகைப்பாடு**

இடைச்சொற்கள் ஏழுவகை என்பது தொல்காப்பியம். இவ்வேழு வகையும் நிகண்டுகளில் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திலிருந்து சிற்சில மாற்றங்களோடு அவை காணப்படுகின்றன.

**சாரியை**

சாரியை வகைப்பாட்டில் தொல்காப்பியமும் நிகண்டுகளும் ஒத்தமைகின்றன. இவை சாரியை, எழுத்துச் சாரியை என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளன.

தொல்காப்பியம் உரைக்கும் ஒன்பது சாரியையினையும் திவாகரம் கூறுகிறது. பிங்கலம் அத்து என்னும் சாரியையினைத் தவிர்த்து எட்டு சாரியைகளைக் குறிப்பிடுகிறது. சூடாமணி நிகண்டு பதின்மூன்று சாரியைகளைப் பதிவு செய்துள்ளது. இற்று, அற்று, அல், இல், ஐ, தம், நும், அ, கு என்னும் ஒன்பது சாரியைகளைப் புதுவதாக அமைத்துள்ளது. அம், அத்து, அன், ஆன் என்னும் நான்கை மட்டும் தொல்காப்பியத்திலிருந்து ஏற்றுக் கொள்கிறது.

கரம், காரம், கான் என்னும் மூன்றினை மட்டும் எழுத்துச்சாரியைகளாகத் தொல்காப்பியம் உரைக்கிறது. நிகண்டுகள் தொல்காப்பியத்தை ஏற்றுக் கொண்டு மேலும் புகுத்துகிறது. திவாகரம் அம்மூன்றினோடு ஏனம், ஓனம் என்னும் இரண்டினையும் சேர்க்கிறது. பிங்கலம் திவாகரத்திலிருந்து சற்று வேறுபட்டு அ, ஏனம் என்பனவற்றையும் சூடாமணி அ ஒன்றை மட்டும் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள சாரியைகள் வெவ்வேறு காலகட்டத்தில் தோன்றிய மூன்று நிகண்டுகளிலும் மாற்றம் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது.

தொல்காப்பியர் கால வழக்கில் இல்லாமல் ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றித் திவாகரத்தில் அறிமுகமான ஏனம், ஓனம் என்னும் எழுத்துச்சாரியைகளில்பத்தாம் நூற்றாண்டில் அதாவது பிங்கலம் தோன்றிய காலத்தில் ஓனம் மறைந்துள்ளது. சூடாமணி காலக்கட்டத்தில் ஏனம், ஓனம் என்னும் இரண்டும் வழக்கிழந்து விடுகின்றன.

**வேற்றுமையுருபு**

தொல்காப்பியம் கூறிய ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் ஆறு வேற்றுமையுருபுகளும் ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் வழக்கில் இருந்துள்ளன. புதிதாக வேறு எதுவும் தோற்றம் பெறவில்லையென்பதை முதலிரண்டு நிகண்டுகள் உணர்த்துகின்றன.

சூடாமணி தோன்றிய பதினாறாம் நூற்றாண்டில் ஒடு உருபுக்கு மாற்றாக ஆல் உருபு வழக்கிற்கு வந்துள்ளது. ஒடு உருபினை அது பதிவு செய்யவில்லை. அது இன்றும் வழக்கிலிருக்கிறது. ஏன் சூடாமணி பதிவு செய்யவில்லை என்பது சிந்தனைக்குரியது. இன்று பல உருபுகள் வழக்கிலுள்ளன. ஒடு உருபு உடனிகழ்வுப் பொருளில் வரும் என்பதை மூன்று நிகண்டுகளும் கூறுகின்றன. மற்ற உருபுகளுக்குப் பொருள் விளக்கம் அளிக்கவில்லை.

**3உவமை உருபுகள்**

தொல்காப்பியர் 36 உவமை உருபுகளைப் பதிவு செய்வதோடு 'அன்ன பிறவும்' என்பதால் ஒப்புமைப் பொருளை உணர்த்தும் வகையில் வருவன எல்லாம் உவம உருபுகளே எனத் தெளியலாம்.

திவாகரம் 13 உருபுகளையும் பிங்கலம் 19 உருபுகளையும் சூடாமணி 24 உருபுகளையும் பதிவு செய்துள்ளன. இவற்றில் தொல்காப்பியர் கூறியவற்றுள் சிலவும் புதிதாகச் சிலவும் காணப்படுகின்றன. உவமை உருபுகள் ஏன் வழக்கில் குறைந்தன என்னும் கேள்வி முதல் மூன்று நிகண்டுகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள உருபுகளின் வழி ஏற்படுகிறது. வழக்கிலிருந்தும் நிகண்டு ஆசிரியர்கள் முக்கியமான உருபுகள் மட்டும் பதிவு

செய்தால் போதும் என்று விட்டுவிட்டனரா? அல்லது வழக்கிழந்துவிட்டனவா என்னும் ஐயம் ஏற்படுகிறது. ஒரு வேளை இலக்கியங்களை ஆராய்ந்தால் தீர்வு கிடைக்கலாம்.

**அசைநிலை**

தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ள அசைநிலைகளுள் பிரிவில் அசைநிலையினை மூன்று நிகண்டுகளும் குறிப்பிடவில்லை. சூடாமணி 'வாழி' என்னும் முன்னிலை அசைநிலையினைப் புதிதாகப் பதிவு செய்துள்ளது. மற்றவை தொல்காப்பியத்தின் மரபிலேயே அமைந்துள்ளன. திவாகரம் அசைநிலையினை அசைநிலைக்கிளவி, அசைச்சொல், உரையசை, முன்னிலை அசைச்சொல் என்னும் சொல்லாட்சியில் பதிவு செய்துள்ளது.

**குறிப்புச் சொற்கள்**

அதிசயக்குறிப்பு, சினக்குறிப்பு, ஐயக்குறிப்பு, இகழ்ச்சிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு ஆகியன மூன்று நிகண்டுகளிலும் இடம் பெற்றுள்ளன. மூன்று நிகண்டுகளிலும் சொல்லாடல்களும் குறிப்புச் சொற்களும் சிற்சில மாற்றங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அச்சக்குறிப்பினைத் திவாகரமும் பிங்கலமும் கூறாது விடுக்கச் சூடாமணி மட்டும் பதிவு செய்துள்ளது. திவாகரம் கூறாது விடுத்த ஆம் குறிப்புச் சொல்லைப் பிங்கலமும் சூடாமணியும் குறிப்பிட்டுள்ளன. இல்லை என்னும் குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொல் சூடாமணியில் காணப்படுகிறது. இகழ்ச்சிக் குறிப்பு திவாகரத்தில் பாடவேறுபாடாகக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்புச் சொற்களின் பதிவு வேறுபாடு வழக்கொழிந்தமையால் மாற்றம் பெற்றதெனக் கருத முடியாது. ஏனெனில் தொல்காப்பியமே உயிர்களின் எண்வகை மெய்ப்பாடுகளைச் சுட்டுகிறது. எனவே ஆசிரியர்களின் விருப்பு வெறுப்பு காரணமாக அமைந்திருக்கலாம். மேலும் அதிக அளவில் புழக்கத்தில் இருந்தமையாலும் காரணமாகலாம்.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்**

ஒலிக்குறிப்பினை நிகண்டாசிரியர்கள் அனுகரண ஓசை என்னும் கலைச்சொல்லால் பதிவு செய்கின்றனர். திவாகரம் ஒன்பது ஒலிக்குறிப்புச் சொற்களை உரைக்க மற்ற இரு நிகண்டுகளும் பதினான்கைக் கூறுகின்றன.

பிங்கலமும் சூடாமணியும் அனுகரண உபய ஓசை என்னும் கலைச்சொல்லில் மேலும் சில ஒலிக்குறிப்புச் சொற்களைப் புகுத்தியுள்ளன. இது முதல் நிகண்டான திவாகரத்தில் இல்லை. இதனை இரட்டைக்கிளவி எனலாம்.

**சுட்டும் வினாவும்**

தொல்காப்பியர் கருத்தே நிகண்டுகளிலும் உள்ளது. ஆனால் சூடாமணி வினா இடைச்சொல்லினைக் கூறவில்லை.

**முன்னிலை விளி இடைச்சொல்**

'ஏபா' தோழன் முன்னிலையாகவும் 'ஏடி' தோழி முன்னிலையாகவும் 'எல்லா' இருவர்க்கும் பொதுவாகவும் மூன்று நிகண்டுகளும் சுட்டுகின்றன.

**கால இடைநிலைகள்**

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களை மட்டும் நிகண்டுகள் கூறுகின்றன. ஆனால் அதற்கான கால இடைநிலையினைக் கூறாது விட்டுவிட்டன. மூன்றுகாலம் என்று திவாகரமும் முக்காலம் என்று பிங்கலமும் சூடாமணியும் கலைச்சொல்லைக் கையாண்டுள்ளன.

சூடாமணி பாக்கு என்னும் சொல் எதிர்காலப் பகரிடைச்சொல் (எதிர்கால வினையெச்ச விகுதி) என்கிறது. இந்தச் சொல் புதிதாக வழக்கிற்கு வந்ததினால் கூறினாரா என்றால் தொல்காப்பியரோ வினையெச்ச வாய்பாட்டினுள் ஒன்று என்கிறார். ஆதலால் புதுமையன்று எனத் தெளியலாம். முதல் இரண்டு நிகண்டுகளும் இதனைக் குறிப்பிடாமையால் வழக்கிழக்கும் நிலையில் காணப்பட்டமையால் பதிவு செய்தாரா என்பது ஆய்வுக்குரியது.

**இடைச்சொற்கள்**

முதல் மூன்று நிகண்டுகளிலும் இடைச்சொல் என்னும் தலைப்பில் சிலச் சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை சாரியை, வேற்றுமை உருபு, குறிப்புச்சொற்கள், அசைநிலைக்கிளவிகள் என்னும் பகுப்பு நிலையில் அடங்கக்கூடியவை. இந்தப் பகுப்புக்குள் அடங்காமல் புதிய பொருளில் வந்தமையால் பொதுநிலையில் குறிப்பிட்டார்களா என்பதும் ஆய்வுக்குரியது. ஏதேனும் சான்றுகள் காட்டியிருந்தால் அனுமானிக்க முடிந்திருக்கும். சொற்கள் மட்டும் ஆட்சியில் உள்ளமையால் எதன் அடிப்படையில் கூறியுள்ளனர் என்பது தெளிவாகவில்லை. வினை விகுதிகள், பெயர் விகுதிகள், எச்சவிகுதிகள் ஆகியவற்றை மேலும் பகுப்புக்கு உள்ளாக்காமல் பொதுவாகக் குறிப்பிட்டார்கள் போலும் எனக் கருதத் தோன்றுகிறது.

சூடாமணி ‘அன்’ என்னும் சொலை மட்டும் சாரியை, ஒருபெயர் விகுதி, ஒரு வினை விகுதி என்று பதிவு செய்கிறது. ஏன் மற்ற சொற்களைப் பாகுபடுத்திக் கூறாமல் விட்டுவிட்டது. இந்த வகைப்பாட்டில் ஒவ்வொன்றையும் கூறாமல் பொதுவாகக் கூறி ஒன்றை மட்டும் சான்று காட்டினார் போலும் எனத் தீர்மானிக்க முடிகிறது.

மேலும் கொன், கொன்னை என்ற சொற்கள் அச்சம், பயமிலி, காலம், பெருமை என்னும் பொருண்மையில் வருமெனத் தொல்காப்பியம் கூறியனவற்றை மூன்று நிகண்டுகளும் பின்பற்றியுள்ளன. தேற்றப்பொருள் தரும் சொற்கள் தேற்று, மன்ற, மாற்று, ஓளர்ப்பு, தெளிவு எனத் திவாகரமும் தேறு, மன்ற, தெளிவு எனப் பிங்கலமும் ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள் எனச் சூடாமணியும் கூறுகின்றன.

அம்ம என்னும் சொல் கேட்பிக்கும் பொருளை உணர்த்தும் சொல்லாக வரும் எனத் திவாகரம் கூற, பிங்கலமும் சூடாமணியும் கூறாது விட்டுவிட்டன. வழக்கிழந்தமையால் விட்டுவிட்டனரா என்பது சிந்தனைக்குரியது. இக்கால இலக்கியங்களை ஆய்வு செய்தால்

தீர்வு கிடைக்கலாம். தொல்காப்பியம் மாதர் என்னும் சொல்லை உரிச்சொல் என்கிறது. ஆனால் திவாகரமும் சூடாமணியும் இடைச்சொல் என வரையறுக்கிறது. சான்றுகள் இல்லாமையால் தீர்மானிக்க முடியவில்லை.

இசைநிறை அசைநிலை என்னும் தலைப்பில் திவாகரம் ஏ, ஒப்பில் போலி, குரை என்னும் மூன்று சொற்களையும் பிங்கலம் ஏ, குரை என்னும் இரண்டு சொற்களையும் குறிப்பிட்டுள்ளன. இந்தத் தலைப்பு மயக்கம் தருவதாயுள்ளது. இசைநிறை, அசைநிலை என இரண்டிற்கும் பொதுவாய் வரும் என்னும் கருத்தில் குறிப்பிட்டுள்ளார்களா? இல்லை தலைப்பாகக் கொள்ள வேண்டுமா என்னும் சிக்கலைத் தோற்றுவிக்கிறது. இக்கட்டுரையில் இசைநிறை, அசைநிலை எனக் கொள்ளப்பட்டு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்டவற்றால் நிகண்டுகளில் புதிய இடைச்சொற்கள் வழக்கிற்கு வந்துள்ளமையும் பழமையான சில மாற்றம் பெற்று வந்துள்ளமையும் இடைச்சொற்கள் அனைத்தும் பதிவு செய்யப்படாமையும் பொருண்மையில் மாற்றம் பெற்றுள்ளதையும் அறியமுடிகின்றது. மூன்று நிகண்டுகளும் தோன்றிய காலத்திலுள்ள இலக்கியங்களை ஆய்வு செய்தால் மேற்குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு ஆதரமான முடிவுகள் பெறப்படலாம்.

## இடைச்சொற்கள் அட்டவணை

| இடைச்சொற்கள் | திவாகரம் | பிங்கலம் | சூடாமணி |
|---|---|---|---|
| 1. சாரியை | அக்கு, அத்து, அம், அன் ஆன், இக்கு, இன், ஒன், வற்று (1816) | அக்கு, அம், அன், ஆன், இக்கு,இன், ஒன், வற்று (2101) | அ.அத்து, அம், அல், அற்று, அன், ஆன், இற்று, இல், ஐ, கு, தம், நும் (698) |
| 1.1. எழுத்து சாரியை | காரம், கரம், கான், ஏனம், | அ, காரம், கரம், கான், | அ, காரம், கரம், கான் -699 |
| 2. வேற்றுமை உருபு | அது, இன், ஒடு, ஐ. கண், கு (1819) | அது, இன், ஒடு, ஐ, கண், கு (2106) | அது, அல், இன், ஐ, கண், கு (1819) |
| 3. உவமை | அமர், உறழ்வு, ஒப்பு, கடுப்பு, செத்து, துணை, துணைத்தல், துப்பு துலை, நிகர், நேர், புரை, பொரு (1554) | அன்ன, ஆங்கு, இணை, உவமம், உறழ்வு, எதிர், என, ஏய்வு, ஏர், ஒப்பு, கடுப்பு, சமம், துல்லியம், புரை, பொருவு, போல், மான், நிகர், நேர் (3860) | அற்று, அன்ன, அனைய, ஆங்கு, இகல, இணை, உறழ, என்ன, சேத்து, தகவு, துணை, தூக்கு, நிகர், நேர, புரைய, பொருவ, போல மலைவு, மான, வீழ்வு (610) |

| | | | |
|---|---|---|---|
| 4. அசைநிலை | அரோ, கா, பிற, பிறக்கு, மாது, யா, (1813) அந்தில் (2012), மற்று (2137), ஆங்க (1811), அன்று, ஆம், இன்று (1809), ஏ, ஒப்பில் போலி (போலும்), குரை (1812) | அத்து (3058), சேத்து (3584), அத்தை (3059 ஏ, குரை (2097) | அரோ, இக, இருந்து, ஒரும், போ, போலும், மாது. மியா (697) |
| 4.1. முன்னிலை | இக, இகும், சின், மதி, மியா, மோ (1812) | இக, இகும், சின், மதி, மியா, மோ (2098) | இக, இகும், சின், மதி, மியா, மோ, வாழி (697) |
| 5. இசைநிறை | ஏ, ஒப்பில், போலி | ஏ, குரை (2097) | ---- |
| 6. குறிப்புச் சொற்கள் | இம்மெனல், இழுமெனல் | அம்மெனல், இம்மெனல், இழுமெனல் | அம்மெனல், இம்மெனல் |
| 6.1. ஒலிக்குறிப்பு | ஒல்லெனல்,கல்லெனல் ஞெளளெனல், பொம்மெனல், பொள்ளெனல், வல்லெனல் (1900) | ஒல்லெனல், கல்லெனல் கொம்மெனல், கொல்லெனல் சரேலெனல், ஞெரேலெனல் ஞொள்ளெனல், பொம்மெனல் பொளலெனல். வல்லெனல் (2116), மாஎனல் (1996) | இழுமெனல், ஒல்லெனல் கல்லெனல், கொம்மெனல், சரேலெனல், நெரேலெனல் பொம்மெனல், பொள்ளெனல் முகேரெனல், வல்லெனல் விடேலெனல் (729) குய்யெனப (893) |

| | | | |
|---|---|---|---|
| 6.2. அனுகரண உபய ஓசை | ---- | கலகல எனல், களளெனல் கிடுகிடு எனல், கொளகொளெனல் சடசஎனல், சலசலெனல் திடுதிடுஎனல் , நெடுநெடுஎனல் படபடஎனல், மொகமொகெனல் மொடுமொடுஎனல், வெடுவெடுஎனல் (2117) | படபட, பதபத, களகள, மொடுமொடு, மொகமொக கொளகொள, திடுதிடு, நெடநெட, நெறுநெறு, கடகட, கலகல (730) |
| 6.3. இகழ்ச்சிக் குறிப்பு | என், ஏ, சீச்சீ, இளி (1786 பாட வேறுபாடு) | எல், என், ஏஎ, சீச்சீ (2105) | இளி, என், ஏய், சீச்சீ, ஏஎனம்-700 |
| 6.4. விரைவுக் குறிப்பு | ஐதுஎனல், கதுமெனல் சூத்திரம், கோரம், சண்டம், ஞெள்ளல், நொய்து எனல், பொருக்கு எனல், பொள்ளெனல், வெம்மை, வெய்தெனல் (1588) | ஐதுஎனல், கதுமெனல், நொய்து எனல், பொருக்கு எனல், பொள்ளெனல் வெய்தெனல் (2196) | . . . மென்றிட்டல் சூத்திரம், கோரம், சண்டம் ஞெள்ளல், நொய்துஎனல் பொருக்கு என்றிட்டல், பொள்ளென்றல், வெம்மை, வெய்தென்றல் (654) ஒல்லை (948) |
| 6.5. கால விரைவுக் குறிப்பு | ---- | கணம், மாத்திரை (281) | ஒல்லை, இறை, சிறுவரை, இலேசம், மாத்திரை(89) |
| 6.6. மந்தக் குறிப்பு | ---- | ---- | மெய்யெனல், மெல்லென்றல், பையெனல், தாழ்த்தல் (654) |

| | | | |
|---|---|---|---|
| 6.7. மழுங்கல் குறிப்பு | ---- | ---- | புல்லெனல் (557) |
| 6.8. அதிசயக் குறிப்பு | அச்சோ, இறும்பூது, விபரீதம், விம்மிதம், வியப்பு (1439), அந்தோ அந்தே, அய்யோ, அன்னோ, ஆ, ஓ, (1440) | அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னோ, ஆஅ, எற்றே, என்னோ, ஐயோ, ஓஒ (2104) | அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னோ, ஆ, எவன், எற்று, என்னே, ஐயோ, ஓ (604) |
| 6.9. சினக் குறிப்பு | கஞறல், கறுப்பு, கன்றல், சிவப்பு, புகைதல், புழுங்கல் வியர்ப்பு, வெய்துறல் (1438) | கஞறல், கறுப்பு, கன்றல், கொதித்தல், செவப்பு, புகைதல், புழுங்கல், வயிரம், வியர்ப்பு, வெதிர்ப்பு, வெய்துறல் (1874) வியப்பு (4078) | கறுப்பு, கன்றல், கொதித்தல், சிவப்பு, புகைதல், புழுங்கல் (594) |
| 6.10. அச்சக்குறிப்பு | ---- | ---- | அளுக்கல், உலமரல், ஓடல், குலைதல், கூசல், ஞெரேஎனல், ஞொள்கல், திட்கல், துட்கல், துடுக்கெனல், துண்ணெனல், தேங்கல், வெய்துறல் (588) |
| 6.11. ஐயக்குறிப்பு | எவன், என்னை,கொல், யாது, (1822) யாங்கு, யாண்டை (1823) | எவன், என்னை, ஏது, கொல், யாது, (2095), யாங்கு, யாண்டை (2095) | எவன், என்னை, கொல், யாது, யாங்கு, யாண்டை-700 |

| | | | |
|---|---|---|---|
| 6.12. ஆம் குறிப்பு | ---- | அன்று எனல், இன்று எனல் (1840) | ஆல் (950) |
| 6.13. இல்லைக்குறிப்பு | ---- | ----- | அல் (950) |
| 6.14. முன்னிலை விளிச்சொல் | ஏடா (328), ஏடி (330), எல்லா (330) | ஏடா (928), ஏடி, ஏலா, (934) | ஏடா (143), ஏடி, எல்லா (143) |
| 7. சுட்டு இடைச்சொல் | அ,இ, உ (1820) | அ,இ, உ (2099) | அ,இ,உ (700) |
| 8. வினா இடைச்சொல் | ஆ, ஏ,ஓ (1821) | ஆ,ஏ,ஓ (2100) | ---- |
| 9. இடைச்சொல் | அம், அல், அன், அன்று ஆம், ஆல், ஆன், உம், எம், என, ஏ, எம், கெழு, ஞான்று, தம், தில்லை, தெய்ய, நம், நும், பாக்கு, மன், முறை, வான் (1817), ஏனை (2168), குரை (2181) மாதர் (2031), வாழி (2269), கொன்னை(2014) | அந்தில், அரோ,அல், ஆங்கு, ஆல், உறை, என, ஏ, ஓ, ஓரும், கெழு, ஞான்று, தெய்ய, போ, மாது, (2103), மன் (3944), வான் (4062), ஓரை (3255), கொன் (3439) | அம், அல், ஆம், ஆல், உம், எம், ஏ, ஏம், தம், தில், நம், நும், பாக்கு, பான், மன், வான் (698), குரை, எற்று (1014), உறை (1018), ஏனை (1029), கொன், வாழி (1031) ஆன் (937) |

# வேதகிரியார் சூடாமணி

ஜா. கீதா
சென்னை

தொல்காப்பியர் உரியியல், இடையியல், மரபியல் ஆகிய இயல்களில் சொற்களுக்குப் பொருள் விளக்கம் அளித்துள்ளார். தமிழில் முதன் முதலில் 9-ஆம் நூற்றாண்டில் திவாகரம் என்னும் பொற்பொருள் விளக்கும் நிகண்டு நூல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கு முன்னரே வடமொழி, பாலிமொழி, பிராகிருத மொழியில் நிகண்டு நூல்கள் தோன்றியுள்ளன. வடமொழியில் (Niruktha) நிருத்தம் என்பதற்குச் சொல்லினுள் மறைந்திருக்கும் சொற்களின் பொருளைக் கண்டுபிடித்துச் சொல்லை விரிவுபடுத்துவது ஆகும். யாஸ்கர் வேதாங்க நிருத்தம் என்னும் நூல் ஒன்றினை கி.மு.700க்கு முன்பே படைத்திருக்கிறார். இவரது இந்நூலில் இடம்பெற்றுள்ள முதற்காண்டத்தின் பெயராகிய நைகண்டுகம் என்பதன் மூலச்சொல்லாகிய நிகண்டு என்னும் பெயரே பின்னர் இயற்றப்பெற்ற சொற்பொருளுரைக்கும் நூல்களுக்கெல்லாம் உரிய பொதுப் பெயராகியது என்று மு. அருணாசலம் குறிப்பிடுகிறார்.

தமிழில் சொற்பொருளின் தொகுதியைக் குறிப்பதாக நிகண்டு என்னும் சொல் 16-ஆம் நூற்றாண்டில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை முதன்முதலில் பயன்படுத்தியவர் சூடாமணியின் ஆசிரியர் மண்டலபுருடர் ஆவார். பின்னர்த் தோன்றிய சொற்பொருள் உரைக்கும் நூல்கள் எல்லாம் நிகண்டு என்னும் சொல்லால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த வேதகிரியார் சூடாமணி நிகண்டு என்னும் பெயரிலான நூலைப் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

**சூடாமணி எனப் பெயர் பெற்ற நிகண்டுகள்**

சூடாமணி நிகண்டு எல்லோராலும் முதன்மையானதாகவும் சிறப்பானதாகவும் கருதப்படுகிறது. இதனால் இதன் பின்னர்த் தோன்றிய சில நிகண்டுகள் சூடாமணி என்னும் பெயரையும் சேர்த்து உசிதசூடாமணிநிகண்டு, கைலாச சூடாமணி நிகண்டு, பல்பொருள் நிகண்டு, வேதகிரியார் சூடாமணிநிகண்டு எனத் தம் பெயரில் கொண்டுள்ளன. ஆனால் இவ்வெல்லா நிகண்டுகளும் அமைப்பிலும் பொருட்பாகுபாட்டிலும் சூடாமணி நிகண்டினோடு ஒத்தவை அல்ல. வேதகிரியார் சூடாமணி நிகண்டு மட்டும் சூடாமணியோடு தொடர்புடையது. உசித சூடாமணி நிகண்டு தேவ சரித்திரத்தொகுப்பு முதலாக உதாரண ஒழிபு, அலங்காரத்தொகுப்பு போன்ற 18 தொகுப்புகளைக் கொண்டது. கைலாசநிகண்டு சூடாமணி பிங்கலத்தை ஒத்தது.

**வேதகிரியார் சூடாமணி நிகண்டு தோற்றம்**

மண்டலபுருடரின் ஒருசொல்-பல்பொருள் தொகுதியில் சொற்கள் எதுகை அமைப்பில் படைக்கப்பட்டுள்ளன. எதுகை முறையில் பொருள் விளக்க வந்த நூலாகிய சூடாமணி நிகண்டில் அடிக்கு அடி சொற்கள் எதுகையில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஒரே அடியில் இன்னொரு பல்பொருள் குறித்த ஒருசொல் வருமாயின் அதற்கு இந்த எதுகை முறை பின்பற்றப்படவில்லை. இக்குறையைப் போக்கும் வகையிலும் இன்னும் அதிகமான சொற்களைச் சேர்க்கும் வகையிலும் படைக்கப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

**ஆசிரியர்**

வேதகிரியார் சூடாமணி நிகண்டின் ஆசிரியர் வேதகிரிமுதலியார் (1795-1852) ஆவார். இவர் தொண்டை மண்டலத்திலுள்ள களத்தூரில் பிறந்தவர். இராமனுசக் கவிராயரின் மாணவர். இவர் மனுநீதிசதகம், மனுவியாக்கியான சதகம், சன்மார்க்க சதகம், நீதிசிந்தாமணி என்னும் நூல்களையும் படைத்துள்ளார். இலக்கியக்களஞ்சியம், இலக்கணக்களஞ்சியம் ஆகிய தொகுப்பு நூல்களையும் உருவாக்கியுள்ளார்.

### பதிப்பு

வேதகிரியார் சூடாமணி நிகண்டு முதலில் யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகசாலையில் 1843 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் முதல் பக்கத்தில் நிகண்டு ஒருசொற் பல பொருட்டொகுதி எனப் பெயரிடப்பட்டுள்ளதாக மு. சண்முகம் பிள்ளை குறிப்பிடுகிறார். 1977–ஆம் ஆண்டு மு. சண்முகம் பிள்ளையும் த. பூமிநாகநாதனும் இணைந்து பதிப்பித்துள்ளனர். இது உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் சு.சு. இராமர் இளங்கோவின் அணிந்துரையுடனும் பதிப்பாசிரியர்களின் பதிப்புரையும் மு. சண்முகம்பிள்ளையின் முன்னுரையும் இடம்பெற்றுள்ளன.

### அமைப்பு

இந்நூலின் அமைப்பு உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீட்டைக் கொண்டு விளக்கப்படுகிறது. இந்நூலில் அணிந்துரை, பதிப்புரை, முகவுரை, பொருளடக்கம் ஆகியனவும் பின்னிணைப்பாகப் பல்பொருள் ஒரு சொல் அகராதியும் பாடல் முதற்குறிப்பகராதியும் உள்ளன. பல்பொருள் ஒருசொல் அகராதிக்கும் பாடல் முதற் குறிப்பகராதிக்கும் செய்யுள் எண் தரப்பட்டுள்ளது.

### பொருள் பற்றிய செய்திகள்

இந்நூல் ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாக 18 எதுகைகளிலும் சொற்பொருளை விளக்குகிறது. பின்னர் ஓரெழுத்தொருசொல் பல்பொருள் என்னும் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் 583 விருத்தப்பாக்கள் உள்ளன. ஒரு விருத்தத்தினுள் பெரும்பான்மையும் நான்கு சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இந்நூல் 2526 சொற்களுக்குப் பொருள் நவில்கிறது.

மண்டலபுருடரின் சூடாமணி நிகண்டில் எதுகை மாறி அமைந்த விருத்தங்களை வேதகிரியார் சரிசெய்துள்ளமையைக் கீழ்வரும் சான்றுகளால் உணரலாம்.

*மகம் யாகம் ஓர் நாள் என்ப மாய்வு என்ப மறைவும் சாவும்*
(சூடாமணி . 2.4)

*மகம் யாகம் ஓர் நாள் என்ப மகன் என்ப மைந்தன் சிறந்தோன் ஆமே*
(வேதகிரியார். 2.4)

சூடாமணி நிகண்டில் மாய்வு என்பது எதுகை மாறியுள்ளதால் மகன் என வேதகிரியார் எதுகையோடு செய்திருப்பது பயன்தருகிறது. மேலும்,

*புங்கம் உயர்ச்சி அம்பு அம்பின்குதை முப்பேரே*
*திங்கள் அம்புலி மாதப்பேர் சித்திரன் ஓவன் தச்சன்*
*கங்கு என்ப வரம்பின் பக்கம் கருத்தினை பருந்தும் ஆமே*
*தொங்கலே பீலிக்குஞ்சம் தூக்கொடு தொடுத்தமாலை*
(சூடாமணி.21)

*என்று மண்டலபுருடர் அமைக்க வேதகிரியார்,*

*புங்கம் உயர்ச்சி அம்பு பொரும் அம்பிற்குதை நற்றூசு*
*திங்கள் அம்புலி மாதப்பேர் சிங்கலே ஓவன் தச்சன்*
*கங்கு என்ப வரம்பின்பக்கம் கருத்தினை கழுகுபாறு*
*அங்கி தீ கவசம் ஆரல் ஆங்கே அவ்விடம் அசைச்சொல்*
(வேதகிரியார்.46)

என்று மாற்றி அமைந்துள்ளமை சிறப்பானது. இன்னும் இத்தன்மையில் மிகுதியான செய்யுட்களைப் படைத்துத் தந்துள்ளார்.

இந்நிகண்டின் ஆசிரியர் இந்நூலுக்கு உரையும் செய்துள்ளார். நிகண்டு நூல்களைச் சொற்பொருள் அடிப்படையில் பிரிக்கும்போது ஏற்படும் சிக்கல் ஏதுமின்றிச் செய்துள்ளமை சிறப்பு வாய்ந்ததாகும்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினரால் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நிகண்டில் வேதகிரியார் புதியதாகச் சேர்த்துள்ள செய்யுளுக்கு நட்சத்திரக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. மண்டலபுருடர் செய்த செய்யுளில் மாற்றம் செய்துள்ளமையைக் குறிக்கக் கூட்டல் குறி பயன்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (* இந்த அடையாளம் கவிராசமுதலியார் செய்த செய்யுளுக்கு, +இஃது அவர்

செய்த செய்யுளில் கலந்தவைகளுக்கு (பக்.2) இம்முறை சரியாக அமைக்கப்பட்டுள்ளது என்பது இவ்விரு நிகண்டு நூல்களையும் ஒத்துநோக்கி அறியப்பட்டது.

இந்நூலினைப் பதிப்பித்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் முதலில் 1. சொல் பிரித்த செய்யுள், 2. சொல்-வரிசை எண்ணுடன் செய்யுளில் தரப்பட்டவாறு பொருள், 3. சொல்-வரிசை எண்ணுடன் எளிமைப்படுத்தப்பட்டுள்ள பொருள் என்னும் முறையில் தந்துள்ளது. இம்முறையினை, ச.வே.சு. அவர்களும் பின்பற்றியுள்ளார்.

இவ்வகையில் எதுகை அமைப்பில் சொற்களுக்குப் பொருள் கூறிய பின்னர் ஓரெழுத்துச் சொற்களுக்கான பொருளை 6 செய்யுட்களில் படைத்துள்ளார். இதில் 21 உள்ளடக்கப் பொருண்மை அமைந்துள்ளமை புலனாகிறது.

**சதுரகராதியும் வேதகிரியார் சூடாமணியும்**

சதுரகராதி தோன்றிய பிறகு இந்நிகண்டு உருவாகியுள்ளது. அகராதி வடிவில் வடிவமைக்கப் பெற்ற சதுரகராதி பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும் வகைமையில் அமைக்கப்பட்டுள்ளது. சதுரகராதியில் பெயரகராதி என்னும் பகுதியில் சகடம் - உரோகணி, ஊர்க்குருவி, பண்டி, பாண்டில், பூண்டவூர்தி, வட்டில் (பக். 64) எனவும் பொருளகராதியில் உரோகணி நாள் - அயனாள் ......சகடம் (பக்.224), ஊர்க்குருவி - கடலகம், ......சகடம் (பக். 178) வட்டில் - கரகம், கோரம், சகடம், (பக், 224) எனவும் தொடையகராதியில் சகடம் - உரோகணி, ஊர்க்குருவி, பண்டி, வட்டில் (பக். 259) எனவும் பதிவாகியுள்ளது.

வேதகிரியார் சூடாமணியில் சகடம் ஊற்றாலே வட்டில் சடகம் ஆசவுசம், அகமுறு பாண்டில் பூண்ட ஊர்தியும் ஆகும் அப்போர் (பக். 39) என்று உருவாக்கியுள்ளார். எனவே வீரமாமுனிவர் கூறிய நான்கு தொகுதிகளும் இதில் அடங்கியுள்ளனள எனலாம். வீரமாமுனிவர் சொற்களின் பொருட்களை அகர வரிசையில் தந்துள்ளார். இதைப் போன்று இந்த ஒரு தொகுதியை மட்டும்

விருத்தத்தின் அடிப்படையில் உருவாக்கியிருந்தால் மிகவும் சிறப்பானதாக அமைந்திருக்கும். அகரவரிசையைப் பின்பற்றாமையால் அகராதி உருவாக்கத்திற்கான களஞ்சியமாகத் திகழ்கிறது. இந்நிகண்டு உருவாக்கத்திற்குச் சதுரகராதியும் பயன்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

**பகுப்பாய்வு**

இந்நிகண்டு ஒரு சொல் பல்பொருளுக்கான தொகுதியாக அமைந்திருப்பினும் பகுத்து ஆய்வு செய்தால் பல்பெயர்களின் களஞ்சியமாகச் செயல்படுவதை உணரலாம். இந்நிகண்டினுள் 25 நூற்பாக்களைப் பகுத்துப்பார்த்தபோது மற்ற நிகண்டுகளில் கூறியுள்ள தெய்வப்பெயர்தொகுதி, மக்கட்பெயர்தொகுதி போன்ற அனைத்துத் தொகுதிகளும் ஒரே தொகுதியில் அமைந்திருப்பது சிறப்பானது.

தெய்வத்தின் பெயர்களாக, பகவன் (1), நக்கன் (அருகன்) (16), உக்கிரம் (19), செக்கர் வானிறத்தோன் (21), முக்கணன், முக்கணி (21), சக்கிரி (23), போகி (25) என்னும் பெயர்கள் பொதிந்துள்ளன.

மக்களின் பெயர்களாக, மகன், இகுளை (2), சிகண்டி, சகுனி (நிமித்திகன்) (7), மக்கள் (17), சக்கிரி (23) போன்ற பெயர்களை இனம் காணமுடிகின்றது.

நாள் மற்றும் இராசியின் பெயர்களாக, மகரம் (1), மகம் (2), உகம், சகம் (9), இகுள் (15), செக்கு (19), சுக்கை (22) ஆகிய பெயர்கள் புலப்படுகின்றன.

மரப்பெயர்களாக, நகம் (3), திகிரி (4), பொகுட்டு (5), மகரந்தம் (6), சிகண்டி, சாகினி (7), அகணி (10), இக்கு, வகுளம் (11), கொக்கரை (20), மொக்குள் (22), கொக்கு (23), சாகம், பாகல், சேகரம் (24), கோகில் (25) ஆகிய மரப்பெயர்கள் விரவியுள்ளன.

விலங்கு மற்றும் பறவைகளின் பெயர்களாக, சிகி (மஞ்ஞை), எகினம்(4), பகடு(6), சகுந்தம், சிகண்டி, சகுனி, சகுனம் (7), ககம்,

காகம், அகி (8), பகம் (9), பக்கம் (16), சுகம் (18), கொக்கரை, கொக்கு, சக்கிரி (23), சாகம் (24), ஆகு, போகி, போகில், கோகிலம் (25) என்பன போன்றவற்றைப்ள பிரித்தறியமுடிகிறது.

பண்பு மற்றும் பொருட் பெயர்களாக, தகை, சிக்கம், அகளம் (8), சுகிர்தம், தகுதி, தொகுதி (11), தாகம் (14), செக்கர் (19), வக்கிரம் (23), பகழி, புகல் (12), நிகமம், தகரம் (13), அகல், தகலம், முகம் (14). சொக்கு (16), தொக்கு (16), அக்கு (17), துக்கம், பொக்கம், அக்கம் (18) துகள், சேகரம், திசை (24) போன்றவை பிரித்தறியப்பட்டுள்ளன. சினைப் பெயர்களாக அகலம் (8), புகல் (11), அக்கு (17), அக்கம் (18), புக்கில், மூக்கு (21), ஆகம் (24), ஆகு (25) என்று இனம் கண்டறியப்பட்டன.

செயல்களின் தொகுதியாக இகல் (3), நகைத்தல், செகுத்தல், தெகுளம் (5) அகற்றல், இகத்தல், இகழ்ச்சி, பகுத்தல் (10), நகுதல், நெகிழ்தல் (12), நுகர்தல் (13), சிகல் (14), புகைத்தல், இகைத்தல், உகைத்தல், உகளல், தகைத்தல் (15), எக்கல் (16), நக்கல் (17), அகலல், ஒக்கல் (18), எக்கர் (22), பகர்தல் (24), யோகம் (25) ஆகியவை பிரித்து அறியப்பட்டன.

இலக்கணம் மற்றும் இசைப்பொருட்களின் பெயர்களாக அகவல் (8), மிகுதி (11), நிகர் (13), அகல் (14), இகரம் (17), கைக்கிளை (22), வக்கிரம் (விருத்தம்) (23), சகண்டை, சிகண்டி (7), தக்கை (19) ஆகிய பெயர்கள் பகுக்கப்பட்டன.

ஒரு தொகுதியினைப் பகுத்து ஆய்ந்தபோது பல்வகைப் பெயர்கள் கூட்டமாகக் காணப்படுவது இனம் கண்டறியப்பட்டது.

**நடை**

நிகண்டுகள் பொருள் கூறும்போது பெரும்பான்மையும் அடைகளைப் பயன்படுத்துகின்றன. நடுங்கிய நுடக்கம் (சூடா.777.1) என்று மண்டலப்புருடர் அடையினைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் இதனையே வேதகிரியார் நடுக்கமும் (வேத. சூடா. 88.1)

என்று அடையின்றி விளக்குகிறார். இதனால் பொருள் மயக்கம் ஏற்படுவது குறைவாக உள்ளது.

இந்நிகண்டு பெரும்பான்மையும் பொருளை உம் என்னும் இணைப்பிடைச்சொல்லால் கூறியிருப்பது எளிமையானது. நடலை வஞ்சனையும் பொய்யும் நடுக்கமும் துன்பமும் பேர் (வேத.சூடா. 88.1). இவர் உம், ஆம், என்ப, நாற்பேர், முப்பேர், எனல், ஆமே, அப்பேர், சாற்றும், கூறும், ஆகும், செப்பும், என்றல், பன்னும், ஓதும், மேவும் ஆகிய சொல்லாட்சிகளை பொருள் விளக்கும் உத்தியாகக் கையாண்டுள்ளார். ஷ, ஸ, ஜ, ஹ போன்ற எழுத்துக்களின் வரிவடிவம் புகுத்தபடவில்லை. ஆனால் வடசொற்கள் (சுகிர்தம், சுபம், கோபம்) உள்ளன. இவ்வாறு அடைகளின்றி எளிதில் பொருள் புரியும் வகையில் இவரது நடை அமைந்துள்ளது.

## முடிவுரை

சதுரகராதி என்னும் கருவிநூல் தோன்றி பின்னர் இந்நிகண்டு படைக்கப்பட்டாலும் அதிகமான சொற்களைத் தருவதால் தேவையான ஒன்று ஆகும். சூடாமணி நிகண்டின் ஒரு பகுதியாக விளங்கினாலும் அமைப்பியல், பொருளடக்கம் போன்ற ஆய்வினால் அதிலிருந்து வேறுபட்டுள்ளமை அறியமுடிந்தது. இது ஒரு தொகுதிக்கென்று எழுந்திருந்தாலும் பகுப்பாய்வு செய்ததில் அனைத்துத் தொகுதிகளும் உள்ளடங்கியிருப்பது தெளிவாகிறது.

## துணைநூல்கள்


1. அருணாசலம், மூ. — தமிழ் இலக்கிய வரலாறு, ஒன்பதாம் நூற்றாண்டு முதற்பாகம், தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், இராயப்பேட்டை, சென்னை-14, 1995.

2. ஆறுமுகநாவலர், (ப.ஆ.) — சூடாமணிநிகண்டு மூலமும் உரையும், வித்தியநுபாலன அச்சகம், சென்னை-1, 1980.

3. கந்தையா, ந.சி. — தமிழ்ப்புலவர் அகராதி

4. சண்முகம் பிள்ளை & பூமிகாநாதன் (ப.ஆ.) — வேதகிரியார் சூடாமணி நிகண்டு, நூற்றாண்டு நினைவு வெளியீடு -2, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை-4, 1989.

5. சண்முகம் பிள்ளை & சுந்தரமூர்த்தி, இ. — திவாகரம் சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை -5.

6. சற்குணம் , மா. — தமிழ் நிகண்டுகள் ஓர் ஆய்வு தி . பார்க்கர் வெளியீடு இராயப்பேட்டை சென்னை, 2003.

7. சொக்கலிங்கம், வீ. — ஆசிரிய நிகண்டு சரசுவதி மகால் நூல் நிலையம் தஞ்சாவூர், 1975.

8. பிங்கலமுனிவர் — பிங்கலந்தை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி, சென்னை-1, 1968.

9. மாதையன், பெ. — தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், 2005.

10. வையாபுரிப்பிள்ளை, எஸ். — தமிழின் மறுமலர்ச்சி நூற்களஞ்சியம் (தொகுதி-2) நூற்றாண்டு நினைவு வெளியீடு-2 வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை, 1989.

11. ஜெயதேவன், வ. — தமிழ் அகராதியியல் அன்றும் இன்றும் அஸ்வினிபுக் சென்டர், 1998.

# ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு

ஆர். பன்னிருகைவடிவேலன்
சென்னை

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பரப்பில் சொற்பொருள் விளக்கும் கருவிநூல்களான நிகண்டுகள் பல தமிழில் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்றான ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு குறித்து இந்த ஆய்வு அமைகிறது.

**ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு பெயர்க்காரணம்**

மஞ்சிகன் என்பவரால் எழுதப்பட்டது இந்நூல். இதில் இருவேறு மாறுபட்ட கருத்து உண்டு. இது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளுக்குரிய தாவரங்களைக் கூறுகிறது. இது அளவில் சிறியது. ஆசிரியர் பெயர், ஐந்திணைச் சார்பு, அளவு சிறுமை ஆகியன பற்றி இந்நூல் ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு எனப்பெயர் பெற்றது எனலாம். இதன் பெயரில் சிறுநிகண்டு என்று இருத்தலால் இவ்வாசிரியர் இயற்றிய பெருநிகண்டு ஒன்று இருந்திருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது. நமக்குக் கிடைக்கின்ற நூல்கள் அனைத்திலும் கடவுள் வாழ்த்து, குரு வாழ்த்து, அவையடக்கம் போன்றவற்றில் ஏதாவது ஒன்று நூலின் தொடக்கத்தில் அமைந்திருக்கும். நிகண்டு நூல்களில் இதைக் காணமுடிகிறது. இந்நிகண்டில் இவற்றில் ஒன்றும் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அவை கிடைக்கப்பெறவில்லையா? மஞ்சிகன் என்பவர் இயற்றிய பெருநிகண்டு என்னும் ஒன்றின் தொடர்ச்சியாக இது அமைந்தா? என அறிய முடியவில்லை.

**பதிப்பு**

இந்நிகண்டு மாகறல் தி. பொன்னுசாமி முதலியாரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இவர் தமது முன்னுரையில் மாகறல் கார்த்திகேய முதலியாரிடமிருந்து இந்நிகண்டு கிடைத்ததாகக் கூறியுள்ளார். மேலும் கொல்லிமலை நிகண்டு. விநாயக நிகண்டு ஆகிய நிகண்டுகள் வெளிவராமல் போனதைப் போன்று மஞ்சிகன் ஐந்திணைப் பெருநிகண்டு ஒன்று இருந்து வெளியிடப்படாமல் போயிருக்கும் என்று பதிவு செய்துள்ளார். ஆசிரிய நிகண்டின் பதிப்பாசிரியர் வீ. சொக்கலிங்கம் மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு பற்றிக் குறிப்பிட்டு உள்ளார். ஆசிரிய நிகண்டு முன்னுரையில் இந்நிகண்டின் ஆசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியார் (பக்.8) என்று கூறியுள்ளார். மாகறல் கார்த்திகேய முதலியார் அல்லது பொன்னுச்சாமி முதலியார் பதிப்பித்திருக்கக் கூடும். ஆனால் மஞ்சிகன் என்பவரால் எழுதப்பட்டிருக்கும், கார்த்திகேய முதலியார் படைத்திருந்தால் மஞ்சின் என்னும் அடைமொழியைச் சேர்த்திருக்க மாட்டார். எனவே வீ. சொக்கலிங்கம் அவர்களின் கருத்து ஆராயத்தக்கது. மஞ்சிகன் என்பதற்கு நாவிதன் என்பது பொருள். எனவே மஞ்சிகன் என்பவரால் எழுதி இவர்கள் இருவரில் ஒருவரால் பதிப்பிக்கப்பட்டிருக்கலாம். அல்லது மாகறல் கார்த்திகேய முதலியாரால் முதல் பதிப்பு பதிப்பிக்கப்பட்ட பின்னர்ப் பொன்னுசாமி முதலியார் இன்னொரு பதிப்பினை வெளியிட்டிருக்கிறார் என்று கருதத் தோன்றுகிறது. இந்நிகண்டு பதிப்பிக்கப்பட்ட காலம், பதிப்பாசிரியர்கள் ஆகியன பற்றித் தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை.

**உள்ளடக்கம்**

எளிதில் மனனம் செய்வதற்கு ஏதுவாக இந்நூல் 122 ஒரடி நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூல் மரங்களின் பெயர்களையும் பிற தாவரங்களின் பெயர்களையும் கூறுகிறது. இந்நூலில் 122 மரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மரத்துக்கும் பெரும்பான்மை 2 பெயர்களும் (குடவம் தணக்கு 56) சிறுபான்மை பெயர்கள் (பிசிதம் மந்தம் 6 வள்ளறுகு (68) வரையும் சுட்டியுள்ளதைக் காணமுடிகிறது. இது மருத்துவ

குணமிக்க மரங்களையும் வாசனைப் பொருள் மிகுந்த மரங்களையும் குறிப்பிடுகிறது. ஆனால் அவற்றின் பயன்பாடு பற்றிக் கூறப்படவில்லை.

**மரங்கள்**

பிரம்பு, சிறுமுன்னை, பெருமுன்னை, தென்னை, பனை, வெண்முருங்கை, மூங்கில், தகரை, ஈஞ்சு, நிலவேம்பு, ஆலம், மகிழ், கொன்றை, குரா, செருந்தி, சந்தனம், அரசு, கோங்கம், ஒதியம், புளி, குங்குமம், அனிச்சம், கொய்யா, ஆத்தி, தேறு, இரும்பிலி, தும்பிலி, கடம்பு, பிடா, ஊசிப்பாலை, பெருமரம், கருங்குன்றி ஆகிய 27 மரங்களின் பெயர்களை இந்நூல் பட்டியலிட்டுள்ளது.

**செடிகள்**

செடிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் கீரைவகைகள், கொடி வகைகள், மூலிகைகள் அடங்குகின்றன.

மூலிகை (ஓடதி, ஒடதம்), கருநாகதாளி, அறுகு, சித்திரமூலம் , நஞ்சுமுறிச்சான், முடக்கற்றான், பச்சிலை, ஆவிரை, தான்றி, பல்லி, பொருதலை, குதம்பை, தணக்கு, செம்பு, பிரமி, ஈயுணி, வெள்ளறுகு, காக்கணம், கஞ்சாங்கோரை, கொறுக்கை, நன்னாரி, நெடுங்கோரை, கரும் பிரண்டை, திரிதளமூலி, பாற்சொற்றி, சிறுநெல்லி, செந்தூதளை, வெண்தூதளை, கரிசாலங் கண்ணி, நெருஞ்சில், துளசி ஆகிய மூலிகைச் செடிகளின் பெயர்களைக் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

**கீரைவகைகள்**

சிறுகீரை, தொய்யா, கானாங்கீரை, பொன்னாங்கன்னி ஆகிய 4 வகைகள் பேசப்பட்டு உள்ளன.

**செடிகள்**

நறுவிலி, கோவை, ஆமணக்கு, பூனைக்காஞ்சொறி, பூனைக்காலி, தகரை, பீநாறி, நீர்மேல்நெருப்பு, பனிதாங்கி, மஞ்சாடி, மாதளை, கூவிளம், விண்டுகாந்தி, சூரியகாந்தி, எலுமிச்சை,

வேளை, சின்னி, வேடு, எருக்கம், குதிரைக்குளம்பு, உடுப்பை, குருவி, படலைக்கள்ளி, கஞ்சா, கத்தரி, தும்பை, பசலை, புல்லுருவி, சிறுபுள்ளடை, அச்சங்கரணை, சவண்டல், ஞள்ாயிறுதிரும்பி, நமை, பீர்க்கு, அவுரி, நொச்சி, மயிர்மாணிக்கம், அவரை, மயிர்ச்சிகை, நாரத்தை, வாகை, மஞ்சம்புல், குறிஞ்சி, தாழை ஆகியன.

**கொடிகள்**

உம்பிலம், கோற்கொடி, வள்ளை, பூசனி ஆகியன.

**தானியம்**

மூங்கில் நெல், புனநெல், குளநெல், கடலை, பெருங்கிழங்கு ஆகிய 3 வகையான நெல்லினையும், கடலையினையும் கிழங்கினையும் பற்றிப் பதிவு செய்துள்ளது.

திவாகரம், பிங்கலம் போன்ற நிகண்டுகள் மரப்பெயர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றன. ஆனால் இந்நிகண்டு கூறியுள்ள பெயர்கள் அனைத்தும் அவற்றில் சான்றாக, இந்நிகண்டு தென்னையின் பெயரினைக் குறிப்பிடும் போது. நாலிநாரி தெங்குதென்னை(7) என்கிறது. ஆனால் திவாகரம், நாளிகேரம், தெங்கு தழை என நவில்வர் (திவா. 702) என்று குறிப்பிட்டுள்ளது. இதில் மஞ்சிகன் ஐந்திணை நிகண்டு வேறுபடுவதைக் காணலாம். மேலும் ஆமணக்கு என்பதற்குத் திவாகரம் ஏரண்டம் ஆமணக்கு (திவா. 751) என்று நவில்கிறது. ஆனால் மஞ்சிகன் நிகண்டு, ஆமண்டம் மந்தம் ஆமணக்கு எனப்படும் (16) எனப் பகருகிறது.

**திவாகரமும் பிங்கலமும்**

ஆரம் சந்து இவை சந்தனம் (திவா. 629, பிங்.2653) என்று நவில மஞ்சிகன் நிகண்டு ஆரம் சாந்தம் சந்தனம் எனப்படும் (34) என்று ஒலி வேறுபாட்டால் மாறுபடுகிறது.

திவாகரம் கூவிளம் என்பதனை,

"*கூவிளம் வில்லுவம் மாலுரம் கூவிளை*" (திவா. 673)

என்று சொல்ல மஞ்சிகன் நிகண்டு,

மாவிளம் வில்வம் கூவிளம் ஆகும் (44) என மாறுபட்டுள்ளது.

தான்றி என்பதற்கு மஞ்சிகன் நிகண்டு பூதவம் தான்றி (53) என்று விளக்கப் பிங்கல நிகண்டு கலிந்துருமம் தான்றி (பிங்.2674) என முழுவதுமாக வேறுபட்டுள்ளது.

கோங்கின் பெயர்களாக, "குயா சூடினர் கன்னிகாரம் கோங்கே" (திவா.650) என்று திவாகரம் குறிப்பிட மஞ்சிகன் நிகண்டு "நாழல் காரம் கோங்கம் ஆகும்" (36) என்று முற்றிலும் மாறுபட்டு அமைந்துள்ளது.

**புளியின் பெயர்களாகத் திவாகரம்**

"*சிந்தம் சிந்தூரம் ஆம்பிலம் திந்துருணி எகினம் புளியே*" (திவா.664)

என்று பதிவு செய்ய, மஞ்சிகன் நிகண்டு எகினம் சிந்தம் புளி எனப்படும் (41) என ஒருசிலப் பெயர்களைக் கூறாமல் விட்டுவிட்டுள்ளமையைக் காணலாம்.

மகிழமரத்தின் பெயர்களாக வகுளம் இலஞ்சி மகிழமரம் என்ப (திவா.633) என்று குறிப்பிட மஞ்சிகன் நிகண்டும் "இலஞ்சி வகுளம் மகிழ் எனப்படுமே" (30) என்று ஒன்றுபட்டுள்ளமையைக் காணமுடிகிறது. இதைப்போன்று இன்னும் சிலவற்றைக் கூறமுடியும்.

அகத்திக்கு அசகம் என்பதைப் புதியதாகவும் செருந்தி என்பதற்கு அரத்தம் என்பதைப் புதியதாகவும் கூறுகிறது.

**முடிவுரை**

இந்நிகண்டினை வேறு நிகண்டுகளின் மரப்பெயர்த் தொகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் புதிய செய்திகள் பல புலப்படும். திவாகரம் பிங்கலம் ஆகியவற்றில் பொருத்திப் பார்த்ததில் மாறுபட்டும் வேறுபட்டும், புதியதாகவும் இந்நூலின் கருத்துகள் தோன்றியுள்ளமையைக் காணமுடிந்தது. ஆகும், எனப்படும், எனப்படுமே என்று முடிவதாக அமைந்துள்ளது. இந்நூலில் மரத்தினது பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளனவேயன்றிப் பொருள்புரிந்து விளங்கிக் கொள்ளும் அளவிற்குரியதான

பதிப்புகள் வரவில்லை. இந்நிகண்டில் கூறியுள்ள பெயர்களைக் கொண்டு இன்று வழக்கில் இப்பெயர்கள் இல்லை என்பது அறியமுடிந்தது. உச்சரிப்பு ஒலியனின் வேறுபாட்டால் புதுப்பெயர்கள் அறிமுகமாகின்றன. நிகண்டுவளர்ச்சி வரலாற்றில் மரப்பெயர்களுக்குரிய தொகுதியாக விளங்குவதால் இந்நிகண்டும் நிகண்டு வளர்ச்சி வரலாற்றில் ஒரு பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

# தமிழ் நிகண்டுகளின் வரலாறு

ஜெ. இராமன்
ஆலப்பட்டி

---

தொல்காப்பியர் அகத்திணை யொழுக்கத்தில் முதல், உரி, கரு பொருள்களை குறிப்பிடுகின்றார். அந்த நூற்பாவில் தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதி ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

*"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப"* - என்கிறது தொல்காப்பிய சூத்திரம். இது போன்று பல நூல்கள் நிகண்டு பற்றித் தெரிவிக்கின்றன.

**நிகண்டின் பெயர்**

தொல்காப்பியர் தமது உரியியலை, "உரிச் சொற்கிளவி விரிக்குங் காலை" என்று தொடங்குகிறார். பின்னர் 11-ஆம் நூற்றாண்டு வரை "உரிச்சொல்" என்றே நிகண்டை அழைத்தனர். திவாகரர், பிங்கலர், காங்கேயர் போன்ற எவரும் நிகண்டு என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. இவர்களுக்குப் பின் வந்த "மண்டல புருடர்" நிகண்டு என்ற சொல்லைப் பயன்படுத்தி அவர் செய்த நிகண்டுக்கு "நிகண்டு சூடாமணி" என்று பெயர் வைத்தார். இதற்குப் பின்னர்த் தோன்றியவர்கள் அனைவரும் நிகண்டு என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளனர்.

**நிகண்டு விளக்கம்**

சமஸ்கிருதத்தில் நிகண்டு என்பதற்குச் சொல், தொகுதி, கூட்டம் என்று கூறுகின்றனர். "இன்னசொல்லுக்கு இன்னபொருள்

என்றும்", "இன்னபொருளுக்கு இன்ன சொல்" என்றும் சொற்பொருள் குறித்துக் கூறுவது நிகண்டாகும். இவ்வகையில் சொற்களின் கோவைக் களஞ்சியமாகத் திகழ்வது நிகண்டாகும். வேதத்தில் கூறும் ஆறு வகையான கருவி நூல்களில், சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கல்பம் இவை ஆறும் வேதங்கள் என்று சொல்லப்படுகின்றன. பின்னர் இயற்றப்பெற்ற நூல்கள் எல்லாம் தமிழில் யாப்பு நடையில் சொற்களை உரைக்கின்றன. இவ்வாறு சொற்களை உரைக்கும் நூல்கள் நிகண்டு என்னும் பெயரால் அழைக்கப்பட்டன.

**திவாகரம்**

தமிழ் நிகண்டுகளுக்கு முதன்மை ஆதாரமாகத் திகழ்வது திவாகரம் ஆகும். இந்நூலை இயற்றியவர் திவாகரர் ஆவார். இந்நூலை இயற்றுவதற்கு ஆதரவு தந்த சேந்தன் என்ற வள்ளலின் பெயரால் சேந்தன் திவாகரம் என்று பெயர் ஏற்பட்டது. திவாகரர் சமண சமயத்தைச் சார்ந்தவர். இவருடைய காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்று எஸ். வையாபுரிப் பிள்ளையும், 9ம் நூற்றாண்டு என்று மு. அருணாசலமும் கருதுகின்றனர். இந்நிகண்டு 12 தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில் 2189 நூற்பாக்கள் உள்ளன.

1. ஒரு பொருள் குறித்த பல பெயர் சொற் தொகுதி (முதல் பத்து தொகுதி. (Synonyms)
2. பல்பொருள் குறித்த ஒரு பெயர்த் தொகுதி (பதினோராவது தொகுதி) (Polysemy)
3. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி (பன்னிரெண்டாம் தொகுதி) (Group Names).

முப்பெரும் பிரிவுகள் (தொல்) கொண்டு உறுதிப்படுத்தலாம்.

*"ஒருசொற் பல்பொருட் குரிமை தோன்றினும்*
*பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும் .......*" (தொல்)

என்ற நூற்பாவை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்டுள்ளது.

ஒரு சொல், ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு பொருள்களைக் குறிப்பின் அது ஒருசொற் பல பொருள் எனப்படும்.

*"கடி என் கிளவி*
*வரைவே கூர்மை காப்பே புதுமை*
*வரைவே விளக்கம் மிகுதி சிறப்பே*
*அச்சம் முன் தேற்று ஆயீர் - ஐந்தும்*
*மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே"* - (866) (தொல்).

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒருபொருளைக் குறிப்பின், அது பலசொல் ஒருபொருள் எனப்படும்.

*"கம்பலை சும்மை கலியே அழுங்கல்*
*என்று இவைநான் கும் அரவப் பொருள் .....".* (832) (தொல்).

மேற்கூறிய இரண்டு நூற்பாக்களின் அடிப்படையில் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதிக்குத் தொல்காப்பியம் வழிவகுத்துள்ளது என்பது தெளிவாகும்.

இந்நிகண்டின் 12 தொகுதிகளிலும் ஏறத்தாழ 9500 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**பிங்கல நிகண்டு**

பிங்கலர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நிகண்டு அவர் பெயரால் பிங்கலந்தை என்றும் வழங்கப் பெற்றது. பிங்கலர் திவாகரரின் மகன் என்ற செய்தி பாயிரத்தில் தெரிய வரும்.

*"செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த*
*பிங்கல முனிவன் எனத்தான் பெயர் நிறீஈ..... "*

என்பது விளங்கும்.

பிங்கல நிகண்டு முழுக்க முழுக்கத் திவாகரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது 10 தொகுதிகளாகப்

பகுக்கப்பட்டுள்ளது. பிங்கலர் அமைத்த நூற்பகுப்பு தனி வகையானது. 4121 நூற்பாக்களும், 15800 சொற்களும் இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டு வகை என்னும் பெயரில் வகுக்கப்பட்டுள்ளது. வான் வகை, வானவர் வகை, ஐயர் வகை, அவனி வகை ....... ஆக பத்து தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**உரிச்சொல் நிகண்டு**

உரிச்சொல் நிகண்டு காங்கேயர் என்பவரால் செய்யப்பட்டது. இது வெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

"முந்து காங்கேயன் உரிச்சொல்" - என்றே இந்நூலை ஆண்டிப்புலவர் தமது ஆசிரிய நிகண்டினுள் குறிப்பிடுகிறார். 14-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்நிகண்டில் 287 வெண்பாக்களும், 3200 சொற்களும் இடம் பெற்றுள்ளன.

**கயாதர நிகண்டு**

கயாதரர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல் "அரும்பொருள் விளக்க நிகண்டின் பாயிரத்தில்" - "செஞ்சொற்கயாதரன் இவரால் சொற்ற பாவியல் நூல்" என்று குறிப்பிடுகிறார். அருமருந்தைய தேசிகர் இயற்றிய அரும்பொருள் விளக்க நிகண்டில் கயாதர நிகண்டைக் குறித்த குறிப்பு காணப்படுகின்றது. 15ம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கருதத்தக்கது. இந்நிகண்டில் (நூற்பழி) 11 இயல்கள் உள்ளன. தெய்வம் முதல் ....... 11 இனங்கள் இடம் பெற்றுள்ளன.

"*ரேவண சித்தன் செஞ்சொற் கயாதரன் இவராற் சொற்ற*
*பாவியல் நூற்கூ றோர்சொற் பல்பொருட் தொகையெலாம் சேர்த்து*"

- என்னும் அந்தாதித் தொடையில் அமைக்கப்பட்டு மொத்தம் 566 செய்யுளில், 10500 சொற்கள் பொருளுரைக்கப் பெற்றுள்ளன. இறுதியில் 850 சொற்கள் பொருண்மை சுட்டப்பெற்றுள்ளன

.பாரதி தீபம்

பாரதி தீபம், திருவேங்கட பாரதியால் செய்யப்பெற்றது.

"*முந்து தமிழ்ப் பன்னிய பாரதி பாரதி தீபம்*" - (293)

"*பாரதி வாதுக்கவிக் கேறான் அவன் செயன்ன*" (319)

பாரதி தீபம் என்று இந்நூல் 12 தொகுதிகளைக் கொண்ட பூரண நிகண்டாகும். 737 செய்யுளும், 14700 சொற்களும் இடம் பெற்றுள்ளன. 15-ம் நூற்றாண்டைச் சார்ந்தது (சண்முகம் பிள்ளை).

**சூடாமணி நிகண்டு**

சூடாமணி நிகண்டினைத் தோற்றுவித்தவர் மண்டலபுருடர். இது நிகண்டுகளுள் மணி முடியாய்த் திகழ்கிறது. இதனுள் 12 தொகுதிகளும், விருத்தப்பாவில் 1197 செய்யுளும் இடம் பெற்றுள்ளன. 11000 சொற்களும் இடம் பெற்றுள்ளதுன. "சகர எதுகை முதலா", "னகர எதுகை ஈறாகப்" 18 எதுகைச் சொற்கள் விளக்கப்பட்டுள்ளது.

"*கிருஷ்ண ராயன் கைகோல்*
*கொடைமடம் என்று சொல்ப*
*வரையாது கொடுத்த லாமே*"... என்ற பாடல் மூலம் இது 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிருஷ்ண தேவராயர் காலத்தைச் சேர்ந்தது என்பது தெளிவாகும்.

**அகராதி நிகண்டு**

அகராதி நிகண்டு புலியூர் சிதம்பர ரேவணசித்தர் என்பவரால் இயற்றப்பட்டது. முதல் எழுத்து "அ" முதல் சொற்களை அகர நிரலில் அமைத்துக் கொடுத்துள்ளதால் இதை அகராதி நிகண்டு என்று கூறுகின்றோம். இது ரேவண சூத்திரம், ரேவணத் திரியர் சூத்திரம், சூத்திர அகராதி எனவும்-அழைக்கப்படுகின்றது.

"*அரிய சகாத்தம் ஆயிரத் தைந்நூற்று*
*ஒருபத் தாறென உரைத்திடும் ஆண்டினில் ....*

*............. அகராதி நிகண்டென*

*ஓதினன் யாவரும் உணர்ந்திட நினைத்தே''* - என்ற பாயிர அடியின் மூலம் 1516ல் (கி.பி. 1594)-ஆம் ஆண்டில் இயற்றியுள்ளார் என்பது தெரிகிறது. அ முதல் ஔ வரை உள்ள எழுத்துக்கள் கொண்ட பெயர்த் தொகுதியும், க முதல் கௌ வரையுள்ள தொகுதியும், ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகிய எழுத்துக்கள் வரிசையிலும் பெயர் தொகுதிகள் அமைந்துள்ளன. 31368 நூற்பாக்கள் உள்ளன.

**ஆசிரிய நிகண்டு**

இந்நிகண்டு ஆண்டிப் புலவர் என்பவரால் இயற்றப்பட்டது. ஆசிரிய விருத்தத்தால் இயற்றப்பட்டதால் இதை ஆசிரிய நிகண்டு என்று அழைத்தனர். திவாகரம், பிங்கலம், உரிச்சொல், கயாதரம், அகராதி ஆகிய நிகண்டுகளை ஆதார்மாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 11 தொகுதிகளையும் 263 பாடல்களையும் கொண்டுள்ளது. ஆனால் 199 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. 1200 சொற்களும் இடம் பெற்றுள்ளன.

**பல்பொருள் சூடாமணி**

ஈசுர பாரதியால் இயற்றப்பட்ட இந்நூல், சூடாமணியின் தோற்றத்திற்குப் பின் நிகண்டு நூலாசிரியர்கள் சிலர் சூடாமணி என பெயரிட விரும்பியதால் இதற்குப்ள பல்பொருள் சூடாமணி என்று பெயரிட்டனர். இதன் காலம் கொல்லமெண்ணூற் றெழுபத்தா றெனக்கணிதப் பாவாணர் குறித்த வயண்டின் மல்கியசீர் விக்கிரம வருடத்தா என்ற பாயிரத்தின் வாயிலாகக் கொல்லம் எண்ணூற்று எழுபத்தாறு என்னும் ஆண்டிற்கு இணையாக 1700 இல் இயற்றப்பட்டது ஆகும். இந்நூல் மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது. முதல் காண்டத்தில் 2800 சொல்லும், இரண்டாம் காண்டத்தில் 1465 சொற்களும் இடம் பெற்றுள்ளன. இரண்டு காண்டங்கள் மட்டுமே எஸ். வையாபுரிப் பிள்ளைக்கு கிடைத்துள்ளது.

**கைலாச நிகண்டு சூடாமணி**

கைலாசம் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் கைவர், இவர் பெயரால் இதற்குக் கைலாச நிகண்டு என்று பெயரிட்டனர். 17-ம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பகுதியில் இயற்றப்பட்டது. இது நூற்பா நடையில் உள்ளது. பிங்கலத்தைத் தழுவிப் படைக்கப்பட்டுள்ளது (உ.ம்) விண்ணவர் வகை, விண்ணின் வகை ..... இப்பிரிவில் 15000 சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. ஓர் எழுத்து ஒருமொழி, ஓரெழுத்து ஒற்று ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி. ஈரெழுத்து ஒற்று ஒருமொழி, மூன்றெழுத்து ஒருமொழி, மூன்றெழுத்து ஒற்று ஒருமொழி, நாலெழுத்து ஒருமொழி என்று ஏழு பிரிவுகள் அகர நிரலில் உள்ளன.

**அகராதி மோனைக்கு அகராதி எதுகை**

தமிழ்ப் பேரகராதியின் முன்னுரையில் இந்நூல் பற்றி வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். நிகண்டு ஆசிரியர் பற்றி செய்தி தெரியவில்லை. இந்நிகண்டில் பல தொடர்ச் சொல் வடிவம், எச்சச்சொற்கள், சொற்றொடர் போன்றன காணப்படும். சுமார் 7500 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இதன் காலம் 17-ம் நூற்றாண்டு ஆகும்.

**அரும்பொருள் விளக்க நிகண்டு**

அருமருந்தைய தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. தன்னுடைய ஞானாசிரியர் பச்சைக் கந்ததேசிகரின் ஆணையை மேற்கொண்டு இந்நிகண்டைச் செய்துள்ளார். இந்நூல் 17-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இந்நூலுக்கு ஆதாரமாகச் சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளார். 700 விருத்தமும், 3200 சொற்களும் இடம் பெற்றுள்ளது.

**பொருட்தொகை நிகண்டு**

பொருட்தொகை நிகண்டு சுப்பிரமணி பாரதியால் செய்யப்பெற்றது. 1000 நூற்பாக்கள் உள்ளன. கி.பி. 18-ம்

நூற்றாண்டில் இயற்றப்பட்டுள்ளது. 1000 தொகைப் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

**தொகை நிகண்டு**

இந்நிகண்டு சாமிநாதக் கவிராயரால் 18-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

*"எந்தை பொதிகை நிகண் டென்றோர்சொற் பல்பெயரே*
*தந்தனன்காண் பல்கூட்டஞ் சாரொருபேர் - முந்தியில்*
*பன்னுத் தொகை நிகண்டிற் பார்க்கவிரி வாமனவக*
*ளின்னசுருக் கத்தடங்கா வே.........."*

இப்பாடல் மூலம் இந்நிகண்டைத் தந்தை சாமிநாதக் கவிராயர் செய்தார் என்பது தெளிவாகும்.

**உசித சூடாமணி நிகண்டு**

சிதம்பரக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நிகண்டில் காப்புச் செய்யுள் உட்பட 197 விருத்தங்கள் உள்ளன. இது 18-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டுள்ளது. இதில் 18 உட்பிரிவுகள் உள்ளன.

1. தேவசரத்திரத் தொகுப்பு, 2. வருணாசிரம வருணத் தொகுப்பு ......... போன்ற 18 பிரிவுகள் உள்ள்ன. இதுவரை எவரும் செய்யாத ஒரு புதிய பகுப்பு முறையாக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. தேவர், மனிதர் பற்றிய பாடமுறைகள் பிற்காலத்தில் பாட வருவோருக்கு வழிகாட்டும் வகையில் இன்னதுக்கு இது பொருந்தும் வகையில் (உசிதம்) இயற்றப்பட்டுள்ளது.

**நாமதீப நிகண்டு**

இதன் ஆசிரியர் சிவசுப்பிரமணிய கவிராயர். நாமம் என்றால் பெயர் தீபம் என்றால் விளக்கு. இதனடிப்படையில் இதற்கு நாமதீப நிகண்டு என்று பெயர் வழங்கப்பெற்றது. 19-ம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. இது 800 வெண்பாக்களால் ஆனது. 16 வர்க்கங்களாக உள்ள இதில் 12000 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

### வேதகிரியார் சூடாமணி நிகண்டு

இந்நிகண்டு களத்தூர் வேதகிரி முதலியாரால் 19-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. 310 விருத்தப்பாக்களும், 290 புதிய விருத்தங்களும் சேர்த்து 600 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. 2526 சொற்களும் இடம் பெற்றுள்ளன. தொகைப் பொருள் நிகண்டும் இவரே செய்துள்ளார்.

### கந்தசுவாமியம்

கீழ்வேளூரில் வாழ்ந்த சுப்பிரமணிய தேசிகர் என்பவர் பழைய நிகண்டுச் சொற்களைத் தொகுத்து இந்நூலை செய்துள்ளார். முதல் தொகுதியில் 1318 சொற்களும், இரண்டாம் தொகுதியில் 1425 சொற்களும் இடம் பெற்றுள்ளது.

### நாநார்த்த தீபிகை

இந்நிகண்டு முத்துச்சாமிப் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. நாநா என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் என்று பொருள்படும். நாநார்த்த தீபிகை என்ற சொல்லுக்குப் பல்பொருள் விளக்கம் தரும் நிகண்டு என்று பொருளுடையது ஆகும். இந்நிகண்டு 1102 செய்யுள்களால் ஆக்கப்பெற்றது. ஓரெதுகை பிற எதுகைச் சொல் கலக்காமல் உள்ளன.

*“வருக்க ராதி னகரவீ றெதுகை*
*வைத்து அதிற் கலப்பு உறாது அடைவே*
*பொருள்பெற எழுத்தின் முறையில் நாநார்த்த*
*தீபிகை என இது புகல்வாம்”*

என்ற அடிகளால் நன்கு அறியலாம். 19-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

### சிந்தாமணி நிகண்டு

யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம் பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டது. சிந்தாமணியானது கேட்டதை எல்லாம் கொடுக்கும், அதுபோல தெரிந்து கொள்ள விரும்பும் சொற்களுக்குரிய பொருளையெல்லாம் தருவது சிந்தாமணி நிகண்டு. இதில் 400 செய்யுள்கள் உள்ளன. 3000 சொற்களும்

இடம் பெற்றுள்ளன. 19-ஆம் நூற்றாண்டு இயற்றப்பட்டது. இது ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் உரைக்கும் நூல் ஆகும்.

*“நேர்நெறி இளைஞர் ஓர்சொற்கு*
*ஒரு பொருள் நேராய் ஓரப்*
*பார்செறி நிகண்டு சிந்தா*
*மணியெனப் பகர்வன் ஒன்றே”*

என்ற பாடலில் தெளிவாகும்.

**அபிதான தனிச்செய்யுள் நிகண்டு**

இந்நிகண்டு கோபாலசாமி நாயக்கர் என்பவரால் 1878ம் ஆண்டு இயற்றப்பட்டது. கி.பி. 19-ம் நூற்றாண்டு. இதனைப் பற்றிய செய்திகள் அறியப்படவில்லை.

**நவமணிக்காரிகை நிகண்டு**

அரசஞ்சண்முகனார் என்பவரால் 1889-ல் இயற்றப்பட்டது. 19-ஆம் நூற்றாண்டு பிற செய்திகள் தெரியவில்லை.

**விரிபொருள் நிகண்டு**

இதன் ஆசிரியர் தெரியவில்லை. கல்கத்தா தேசிய நூலகத்தின் தமிழ்ச் சுவடிகள் பிரிவில் இரண்டு சுவடிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 3174 ஒலிப்பற்றிய பெயர் தொகுதியும், பத்து தொகுதியில் 283 செய்யுளும், பாயிரத்தோடு 427 செய்யும் இருப்பதாகத் தெரிகிறது.

**விரிவு நிகண்டு**

இந்நிகண்டு நா. அருணாசல நாவலர் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. நெல்லை மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. 1036 செய்யுளும், 1100 விருத்தப்பாக்களும் இடம் பெற்றுள்ளன. 1900-ல் இயற்றப்பெற்றிருக்கலாம் என்று தெரிகிறது.

**நேர்ச்சொல் நிகண்டு**

நேர்ச்சொல் நிகண்டு இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள புலோலி என்ற இடத்தைச் சார்ந்தவரான சதாசிவம் பிள்ளை

என்பவரால் 1889-ல் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. வேறுசெய்திகள் செய்தி தெரியவில்லை.

### தமிழுரிச்சொற் பனுவல்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் என்பவரால் (20-ஆம் நூற்றாண்டு) இயற்றப்பட்டது. தமிழ்ச் சொற்களை மட்டுமே தொகுத்துத் தருவது இந்நிகண்டு ஆகும். நிகண்டு என்ற சொல்லுக்குப் "பனுவல்" என்று முந்தைய நிலையை நினைவூட்டும் வகையில் இந்நிகண்டு இடம் பெற்றுள்ளது. இதனை,

"*பிறமொழிச் சொற்களை நெறிப்பட நீக்கித் தமிழுரிச்*
*சொற்களின் றகுபொருள் விளங்கப் பைந்தமிழ் உரிச்சொற்*
*பனுவல் தந்தனன்*" - என்ற பாயிர அடியின் மூலம்

தெளிவாகிறது. 7532 நூற்பாக்களும், 5466 சொற்களும்ள இடம்பெற்றுள்ளன.

### அபிதான மணிமாலை

திருச்சிற்றம்பலம் இன்னமுதம் பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டது. சென்னை திருவான்மியூரில் உள்ள உ.வே.சா. நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. திவாகரத்தைப் போன்று 531 பக்கங்களும், 9 தொகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

### சொற்சேர்வை பொருட் சேர்வை

இந்நிகண்டின் காலம், ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. உ.வே.சா. நூலகத்தில் ஒருசொல் பல்பொருட் பெயர் தொகுதியைக் கொண்டு 20 தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சொற்களுக்குப் பொருள்கூறும், அகராதி வரிசையில் 3441 ஓர் அடிச் சொற்றொடர்களைக் கூறும், ஒரு சில விருத்தங்களும் இடம் பெற்றுள்ளன.

தமிழ் நிகண்டுகள் வரிசையில் 8 முதல் 20 வரையுள்ள நூற்றாண்டுகளில் செய்யப்பட்ட நிகண்டு பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. ஆனால் 20-ம் நூற்றாண்டில் உள்ள நிகண்டுகள்

பெயர் அளவில் தான் கிடைக்கப்பெற்றன. நவமணிக்காரிகை, தமிழுரிச்சொல்பனுவல்........ இன்னும் பல நிகண்டுகள் இடம் பெற வேண்டும். தமிழ் நிகண்டு பற்றிய ஆய்வுகள் தமிழில் மிக அருகியே காணப்படுகின்றன. தமிழாய்வுகள் அதிகரித்தால்தான் நிகண்டுகள் பற்றியும், சொற்களஞ்சியப் பெருக்கம், பயன்பாடு ஆகியவை பற்றியும் அறிய முடியும்.

# பஞ்சகாவிய நிகண்டு - ஓர் உள்ளடக்க ஆய்வு

ச. ஜெயந்தி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நிகண்டு என்பதற்குச் 'சொற்தொகுதிகளின் கூட்டம்' என்று பொருள். நிகண்டுகள் சொல்லுக்குப் பல்வேறு பெயர்களையும், பொருளையும் தரும். பஞ்சகாவிய நிகண்டானது ஒருபொருட் பல சொல்லையும், செய்முறை விளக்கங்களையும் தருகிறது. சித்த மருத்துவத்திற்காகத் தோன்றிய இந்நூலில் மாந்திரிகம் பற்றிய செய்திகள், பரிபாசை விளக்கம், காவியங்களின் சிறப்பு, சித்தர்களின் மறைப்பு, மருந்துகளின் பெயர்கள், பூசை விதிகள் போன்ற பல்வேறு சிறப்புகள் காணப்படுகின்றன. இந்நூலின் உள்ளடக்கத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பஞ்ச காவிய நிகண்டானது,

1. அகத்தியர் ஏமதத்துவம்
2. பஞ்ச காவிய நிகண்டு

என இரு பெயர்களில் வழங்கப்படுகிறது.

## அகத்தியர் ஏமதத்துவம்

ஏமம் என்பதற்கு இன்பம், களிப்பு, காவல், பள்ளியறை, பாதுகாப்பு, இரா, பொன், உறுதி, ஐயம், மயக்கம், பைத்தியம், இடுதிரை, திருநீறு என்ற பொருள்கள் உள்ளன. இதில் இன்பம், களிப்பு, உறுதி, பொன், காவல் என்பன இத்தலைப்புக்குப் பொருந்தி வருவதாலும், இயற்றிய ஆசிரியரான அகத்தியரையும் சேர்த்து அகத்தியர் ஏமதத்துவம் என்று அழைக்கப்பட்டது.

## பஞ்ச காவிய நிகண்டு

பஞ்ச என்றால் ஐந்து என்று பொருள். காவிய என்றால் தொடர்நிலைப் பாடலைக் குறிக்கும். இந்நூல் வாதகாவியம், பூரண

காவியம், ஞான காவியம், மாந்திரிக காவியம், இலட்சண காவியம் என்ற அகத்தியரின் ஐந்து நூல்களுக்கான நிகண்டாக விளங்குவதால் பஞ்ச காவிய நிகண்டு எனப் பெயர் பெற்றது எனலாம்.

'*பஞ்ச காவியங்காப்பு சௌமியங் காப்பாமே*' (3)

'*பூரணமாம் காவிய நூல் நிகண்டே சொல்வோம்*' (387)

போன்ற வரிகள் 'பஞ்ச காவிய நிகண்டு' என்பதற்குச் சான்றாக நிற்கின்றன.

**காண்டங்கள்**

பஞ்ச காவியங்களுக்குப் பொருள் தரும் வகையில் எட்டுக் காண்டங்களாக அமைந்துள்ளது.

'*காணுநீ, இந்நூல் காண்டமென்ற காவியமாம்*' (5)

காண்டம் பற்றிய செய்திகளை 5 முதல் 10 பாடல்களில் காணலாம். இவற்றில் 8 ஆம் பாடலில் மாந்திரிகக் காவியத்துக்காக 3 ஆம் காண்டம் சொல்லிவிட்டோம் என்று உள்ளது. ஆனால் மாந்திரிகம் பற்றிய செய்திகள் மூன்றாம் காண்டத்தில் காணப்படவில்லை. மாந்திரிகம் பற்றிய குறிப்புகளை ஆறாம் காண்டத்தில் தான் காணமுடிகின்றது. இக்காண்டத்தில் வசியமை, புருவவசியம், இராசவசியம், செகவசியம், தலைவசியம், மிருகவசியம், உலோகவசியம், பூதவசியம், தேவதைகள் வசியம், மாந்திரிக வைப்பு ஆகியவற்றைக் கூறக் காணலாம். ஆதலால், மந்திரிக காவியம் ஆறாம் காண்டத்திற்கு உரியது எனலாம்.

முதல் காண்டம், இரண்டாம் காண்டம், மூன்றாம் காண்டம் — வாத காண்டம் பற்றியவை.

நான்காம் காண்டம், ஐந்தாம் காண்டம் — வைத்திய காண்டம் பற்றியவை.

ஆறாம் காண்டம் → மாந்திரிக காண்டம் பற்றியவை.

ஏழாம் காண்டம் → ஞான காண்டம் பற்றியவை.

எட்டாம் காண்டம் → இலட்சண காண்டம் பற்றியவை.

திவாகரம், பிங்கலம், நாமதீபநிகண்டு முறையே தொகுதி, வகை, படலம் போன்ற பிரிவுகளைக் கொண்டு காணப்படுகிறது. பஞ்ச காவிய நிகண்டு காண்டப் பிரிவைக் கொண்டு காணப்படுகிறது. இதற்குக் காரணம் வடமொழிக்கு உரிய அமரகோசமாக இருக்கலாம். அமரகோசமும் காண்டப்பிரிவைக் கொண்டது. முதல் காண்டம் (சுவர்காதி காண்டம்), இரண்டாம் காண்டம் (பூமியாதி காண்டம்), மூன்றாம் காண்டம் ஆகியவற்றைக் கொண்டு காணப்படுவதால், இப்பிரிவே பஞ்ச காவிய நிகண்டிற்கு அடிப்படைக் காரணம் எனலாம்.

**காண்டத்தில் காணப்படும் செய்திகள்**

முதல் காண்டத்தில் காப்புச் செய்யுள், காண்டப்பிரிவு, நாற்திசை மனிதர்களில் நல்லவர்கள் பற்றிய விவரம், நால்சாதிக் கரு பற்றிய விவரம், கலைமெழுகு செய்யும் முறை, சிவபாடாணம் செய்யும் முறை, ஏமதத்துவம் பற்றிய செய்தி, தலை முடி மூளை போன்றவற்றின் பெயர்கள் இக்காண்டத்தில் காணக் கிடைக்கின்றன.

இரண்டாம் காண்டத்தில் காப்புச் செய்யுள் தொடங்கி சவ்வு, மாமிசம், அடியீரல், அங்கத்தின் பிச்சி, மணிக்குடல். சல்லிக்கொடி, நரம்பு, கொழுப்பு, நகம், ஞானக்கண்ணி, வெளிக்கண்ணி, இந்துப்பு, வெடியுப்பு, நால்திசை பூமி, வடதென்கீழ்மேல் பூமியின் மண்நிறம் மற்றும் தண்ணீர் வானம் போன்றவற்றின் பெயர்கள் இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ளன.

மூன்றாம் காண்டத்தில் காப்புச் செய்யுள் தொடங்கி நால்வகைப் பெண்களின் பிரிவுகள், இரும்பு, பித்தளை போன்ற உலோகங்களின் பெயர்கள், யுகம் மற்றும் ஆண்டின் பெயர், வைத்திய கரு செய்முறை, ஆதி அண்ட உப்பின் பெயர்கள் மற்றும் பலவற்றை இக்காண்டத்தில் காண முடிகின்றது.

நான்காம் மற்றும் ஐந்தாம் காண்டத்தில் வைத்தியம் சம்பந்தமான அனைத்து செடி, கொடி, வேர், இலை, பருப்பு, கீரை ஆகியவற்றின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டிலும் காப்புச் செய்யுள் முதலில் காணப்படுகிறது.

ஆறாம் காண்டத்தில் முதலில் காப்புச் செய்யுள் காணப்படுகிறது. அதற்கடுத்து, சுழல்வண்டு, ஈ, கொசு போன்ற பறப்பனவற்றின் பெயர்கள்; யானை, ஒட்டகம், குரங்கு போன்ற விலங்கு இனத்தின் செய்திகள்; வசியமை, தலைவசியம், மாந்திரிக வைப்பு போன்ற மாந்திரிக செய்திகள்; சாலநூல் வகைகள்; ஒ, ந, ம, சி, வ, ய, ஐ, ச, கிலி போன்ற எழுத்துக்களின் பெயர்கள்; சித்தர்களின் நூல்கள், நிகண்டின் வரலாறு ஆகியவற்றை இக்காண்டத்தில் காணலாம்.

ஏழாம் காண்டத்தில் காப்புச் செய்யுள் தொடங்கி, வாசி குளிகை பற்றிய குறிப்புகள்; யோகங்களின் பெயர்கள்; அறம்,விதி, மதி, புத்தி, அறிவு போன்றவற்றின் பெயர்கள்; சூரிய மற்றும் சந்திர மண்டிலங்களின் பெயர்கள்; வேதாந்திகள், வேதமுனி, மவுனிகள், யோகிகள், ஞானிகள், சோதிடர், புலவர் ஆகியோரின் பெயர்கள்; பூசை வகைகள் போன்றவற்றைக் காணலாம்.

எட்டாம் காண்டத்தில் காப்புச் செய்யுள் முதலில் இடம் பெற்றுள்ளது. மேலும் சுவாசலீலை, ஆண்சாதி நான்குக்கான இலக்கணம், பெண்சாதி நான்குக்கான இலக்கணம் போன்றவற்றைக் காணலாம்.

**எண்ணிக்கை**

பஞ்ச காவிய நிகண்டானது எண்ணிக்கை முறையில் இரு வகையில் அமைந்துள்ளதுள.

1. எண்ணூறு
2. எட்டு

**எண்ணூறு**

'இந்தநூல் நிகண்டெண்ணூறு' (4)
'கருக்குக் கருவாயிந்த எண்ணூறு கவியாய் பாடி' (337)
'வதுவாகச் சொல்லிவிட்டோம் இந்த எண்ணூறு' (391)

பல்வேறு மருத்துவ நிகண்டு நூல்களில் கூறியுள்ள சொற்களைச் சுருக்கி 800 பாடல்களில் கூறியிருப்பதை

*'பாரப்பா, ஐம்பத்தோராயிரத்தில்*
*பதினாறு இலட்சம் நூல் பேரைச் சொன்னோம்*
*தேரப்பா, ஐயாயிரம் பார், இதற்கெல்லாந்தான்*
*தெளிவான நிகண்டது வாய் கொண்டு நீபார்*
*ஆரப்பா, அறிவார்கண் ஆயிரத்தை?*
*அதைக் குறுக்கி இவ்வெண்ணூறு அருளினோம் பார்*
*வேரப்ப. இந்நூலைச் சித்தர்கள் கண்டால்*
*விடாரய்யா, ஓர் நாளும், கை விடாரே'* (12)

இப்பாடல் மூலம் அறியலாம். பாடல்களின் எண்ணிக்கையை அறுதியிட்டுக் கூறுவது இடைச்செருகலைத் தடுக்க உதவும் முயற்சி எனலாம். இருப்பினும் பாடல்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

''மருத்துவ நிகண்டுகள், அகத்தியர் நிகண்டு, விருத்த யாப்பு -8 காண்டங்கள் 1000க்கு மேலும் பாடல்கள் உள்ளன. அகத்தியர் நிகண்டு 800 என்ற பெயர் பொருத்தமில்லை என்பார் சுந்தரசண்முகனார்''.

**எட்டு**

சில பாடல்களின் பெயர்களைத் தொகுத்துச் சொல்லும் போது எட்டு எட்டாகக் கூறுவதைக் காணலாம்.

*'வசனித்தோம் எட்டு, நாவேளையின் பேரே'* (431)
*'நாம் சொன்னோம், எட்டுப்பேர் செங்கதாரியின் பேரே'* (432)
*'செப்பினோம், எட்டுப்பேர் முக்கதாரியின் பேரே'* (433)

இருப்பினும், எட்டுக்கும் மேற்பட்ட பெயர்களையும் காண முடிகின்றது. வேளையின் பெயர்களைத் தொகுத்துக் கூறும்போது,

வசுண்டிக்காய், காய்கண்டிம், தமனோரு பாணி, தருவாளிப் பூண்டு, தருவாளி, கொடிக்காய், கொடிமாதளத்தி, குழலொளி, விடுவான், வானவெடி, மந்தம், அறுவான் (430) என்று 12 பெயர்கள் வேளையின் பெயர்களாகக் கூறப்பட்டுள்ளன. 'பேரேட்டாச்சு, வேளையின் பேரே' என்று கூறியுள்ளதற்கும், இங்குப் பன்னிரெண்டு பெயர்கள் வருவதற்கும் இடைச்செருகலே காரணம்.


## எதுகை அமைப்பு

பெரும்பாலான பாடல் வரிகள் எதுகை அமைப்பில் அமைந்துள்ளன. இவ்வமைப்பினால் பாடல்கள் எளிமையைக் கொண்டுள்ளன எனலாம். எளிதில் நினைவுபடுத்திக் கொள்வதற்கும், மனப்பாடம் செய்வதற்கும் இவ்வமைப்பு உதவியாக இருக்கக் காணலாம்.

*'வினையான , பாவகதி வாகமென்னும்*
*விளமருகல், சிசுதோட மென்றும் பேர*
*தினையான, கிடும்பென்று விரும்பென்று பேரு*
*தீர்க்சா மென்றதற்கு கதீதப்பேரு*
*தனையான, கடுதடகமென்றும் பேரு*
*காதபல மென்றதற்கதீதப் பேரு*
*முனையான உத்தண்ட அசமென்றும் பேரு*
*முதலான, தீபாத்தி வினையின் பேரே.'*

## ஒருபொருட் பலசொல்

பெரும்பாலான நிகண்டுகள் ஒருபொருட் பலசொல்லைத் திரட்டித் தருகின்றன. ஒருபொருட் பலசொற்களை மட்டுமே தரும் நிகண்டுகளும் உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை நாமதீப நிகண்டும், அகராதி நிகண்டும் ஆகும். அகராதி நிகண்டில் பொருட்பாகுபாடின்றிச் சொல்லின் முதலெழுத்து அடிப்படையில் அகராதிப் பேர்த்தொகுதி, வகராதிப் பேர்த்தொகுதி எனத் தொகுதிகளுக்குப் பெயர் தரப்பட்டுள்ளது. நாமதீப நிகண்டானது புதிய வகைப்பாட்டைக் கொண்டது.


பொருள்
குணம்
குணி
உயிரில்பொருட்குணம்
உயிர்ப்பொருட்குணம்
மனம்
வாக்கு
செயல்
அஃறிணை
உயர்திணை
தெய்வம்
மானிடம்
உயிரில்பொருள்
உயிர்ப்பொருள்
இயற்கை
செயற்கை
இடம்
காலம்
சினை
நாற்காலுயிர்
பறவை
ஊர்வன
நீர்வாழ்வன
தாவரஉயிர்

எனப் பட்டியலிட்டுள்ளதைக் காணலாம். இப்பட்டியல் முறையைப் பஞ்ச காவிய நிகண்டிலும் பொருத்திப் பார்க்க இயலும்.

## I.உயர்திணைப் படலம்

| தெய்வ வர்க்கம் | மானிட வர்க்கம் |
|---|---|
| சிவன் (1) | நாற்றிசை மனிதர் (16) |
| உமையாள் (1,132) | அத்தினி (267) |
| கணபதி (1,132) | சித்தினி (268) |
| கந்தன் (1,132) | பத்மினி (269) |
| சதுர்முகன் (2) | |
| வாணி (2) | |

## II.அஃறிணை உயிர்ப்பொருள்படலம்

| நாற்காலுயிர் பொருள் வர்க்கம் | பறவையுயிர்ப் பொருள் வர்க்கம் |
|---|---|
| பசு (642) | நாரை (688) |
| எருமை (643) | கொக்கு (689) |
| வெள்ளாடு (644) | பருந்து (692) |
| செந்நாய் (650) | கருங்குருவி (697) |
| பூனை (652) | ஊர்க்குருவி |

| ஊருயிர் பொருள் வர்க்கம் | நீர்வாழ்வன பொருள் வர்க்கம் |
|---|---|
| அட்டை (674) | சிப்பிமுத்து (292) |
| மரவட்டை (678) | சாதிமுத்து (293) |
| நல்லபாம்பு (680) | மீன் (675) |
| சாரைப்பாம்பு (681) | பவழம் (285) |
| பச்சைப்பாம்பு (682) | |

**தாவரஉயிர்ப்பொருள் வர்க்கம்**

பெருங்குறிஞ்சான் (410)
சிறுகுறிஞ்சான் (411)
பெருந்துளசி (412)
கருந்துளசி (413)
நிலத்துளசி (414)

## III.அஃறிணை உயிரில் பொருட்படலம்

| இயற்கைப் பொருள் வர்க்கம் | செயற்கைப் பொருள் வர்க்கம் |
|---|---|
| பொன் (243) | குடற்சுண்ணம் (172) |
| தங்கம் (244) | ஈரல்சுன்னம் (183) |
| செம்பு (279) | பிண்டச்சுன்னம் ( 212) |
| இரும்பு (280) | |
| பித்தளை (281) | |

| இடப்பொருள் வர்க்கம் | காலப்பொருள் வர்க்கம் |
|---|---|
| பூமி (245, 247) | யுகம் (313) |
| தென்பூமி (246) | ஆண்டு (314) |
| நால்திசைபூமி (248) | |

**சினைப்பொருள் வர்க்கம்**

முடியண்டம் (101)
முடிமாமிசம் (103)
மூளை (106)

## IV.குணநாமப்படலம்

| உயிர்ப்பொருள் மனக்குணவர்க்கம் | உயிர்பொருள் வாக்குக் குணவர்க்கம் |
|---|---|
| அறிவு (862) | நல்வினை (315) |
| அறம் (858) | செபம் (915) |
| விதி (859) | பூசை (918) |
| மதி (860) | |
| புத்தி (861) | |

| உயிர்ப்பொருள் செயற்குணவர்க்கம் | உயிரில்பொருள் குணவர்க்கம் |
|---|---|
| மூலாதாரம் (850) | பஞ்சாட்சம் (913) |
| சுவாதிட்டனம் (851) | |
| மணிபூரகம் (852) | |
| அனாகதம் (853) | |

## பாடப்பட்டுள்ள முறை

இந்நூல் யாருக்காகப் பாடப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

1. சித்தர்
2. புலத்தியன்

ஆகியோருக்குக் கூறும் விதமாகப் பாடப்பட்டுள்ளதைக் கீழ்வரும் பாடல்வரிகள் மூலம் அறியலாம்,

*'காப்பாகும் பூரணமே சின்மயமே அய்யா*
*கருதவோம், பாரிலுள்ள சித்தர்க் கெல்லாம்*
*சேர்ப்பாகும், சோதியை தட்சணாயன் என்பெயர்*
*செப்புகிறோம், புலத்தியனே சொல்லக் கேளு'* (4)

## அளவுகள்

மருந்துகள் உண்ணும் அளவுகள் நாட்களில் கூறப்பட்டுள்ளன. 48 நாட்கள் உண்ணவேண்டும். அதாவது ஒரு மண்டலம் ஆகும்.

*'தானென்ற, மண்டலந்தானிப் படியுண்டால்*
*தப்பாது, விந்து, கல்லாகி விடுமைய்யா*
*ஏனென்ற, வீரண்டு மண்டலமிதனைக் கொண்டால்*
*இளகி விட்ட, முட்டெல்லாமெழுகது போலாகும்'* (935)

இவ்வாறு மண்டலங்களின்(48 நாட்கள்) அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. மருந்துகளின் பெயர்கள், செய்முறை விளக்கம் கூறியதோடு உண்ண வேண்டிய அளவுகள் கூறியிருப்பது சிறப்பான ஒன்றாகும்.

## தொகுப்புரை

- ☆ பஞ்ச காவிய நிகண்டானது ஒருபொருட் பலசொல் மற்றும் செய்முறை விளக்கம் கொண்டு காணப்படுகிறது.
- ☆ இந்நிண்டானது காண்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- ☆ இந்நிகண்டின் செய்திகளை நாமதீப நிகண்டின் வகைப் பாட்டைக் கொண்டு பிரித்துப் பார்க்க வாய்ப்புகள் உள்ளன.
- ☆ எதுகை அமைப்பும், விளித்துப் பாடும் நிலையும் இந்நிகண்டில் காணப்படுகிறது.
- ☆ சித்தர், புலத்தியர் ஆகியோருக்குக் கூறும் விதமாகப் பஞ்சகாவிய நிகண்டு அமைந்துள்ளது.

☆ உலோகங்கள், உப்புகள், பாடாணங்கள், வைப்புச் சரக்குகள், மருந்துகள், மந்திரச் சடங்குகள், புராணம் பற்றிய செய்திகள் ஆகியவை இந்நிகண்டில் இடம்பெற்றுள்ளன.

☆ இந்நிகண்டை மட்டும் வைத்துக் கொண்டு படிக்காமல் இதனோடு தொடர்புடைய மருத்துவ நிகண்டைக் கொண்டு பார்த்தால் மட்டுமே புரியும் விதமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சில முறைகள் வழக்கொழிந்து விட்ட நிலையையும் இந்நிகண்டின் மூலம் அறியலாம். எனினும், இந்நூல் சித்த மருத்துவ துறைக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை.

**துணைநூல்கள்**

1. பஞ்ச காவிய நிகண்டு – அகத்தியர் (பதிப்பாசிரியர். ச. அரங்கராசன்)
2. அகராதியியல் – பெ. மாதையன்.
3. தமிழ் அகராதிக்கலை – சுந்தர சண்முகனார்.

# கயாதர நிகண்டின் சொற்புல அமைப்பும் மரப்பெயரியல் வகைப்பாடும்

ப. தேன்மொழி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நிகண்டு எனும் வடசொல்லுக்குத் தொகுதி–கூட்டம் என்பது பொருளாகும். சொற்கள் தொகுதியாகக் கூட்டமாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டு இருப்பதால் நிகண்டு என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. நிகண்டு என்னும் சொல்லுக்கு உண்மை என்பது பொருள் எனவும் நிகழ்ந்தது எனும் சொல்தான் நிகண்டு என மருவி காணப்படுகின்றது என்பர். தமிழில் கி.பி. 8–ஆம் நூற்றாண்டு முதல் 20–ம் நூற்றாண்டு வரை நிகண்டுகள் தோற்றம் பெற்றுள்ளன. இக்காலக் கட்டத்தில் தோன்றிய நிகண்டுகளில் ஒன்றான கயாதரத்தின் சொற்புல அமைப்பையும் மரப்பெயரின் வகையையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கயாதர நிகண்டு**

அரும்பொருள் விளக்க நிகண்டின் பாயிரத்தில் "செஞ்சொற் கயாதரன் இவராற் சொற்ற பாவியல் நூல்" என்ற வரிகளின் மூலம் காயதரன் எனும் ஆசிரியர் பெயராலேயே இந்நிகண்டு வெளிவந்துள்ளதை அறிய முடிகின்றது. இந்நிகண்டிற்கு மற்றுமொரு சான்றாக

*"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டு சீர்*
*முந்து காங் கயனுரிச் சொல்*
*முறைபெறு கயாதரம் பகரு மகராதியிவை*
*முற்று மொன்றாய்த் திரட்டி"*

என்று ஆண்டிப்புலவர் இயற்றிய ஆசிரிய நிகண்டின் பதிப்பிலும் இந்நிகண்டின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

**கயாதரத்தின் காலம்**

*"கல்விக் கடலை கரை கண்ட ரத்னகவி*
*செல்வக் குமரன் திருமே - நல்ல*
*திருப்பணி மாலை யீந்தந் தேசமெல்லாம் வாழ்த்த*
*விருப்பமுடன் செய்தான் விரைந்து"*

என்ற திருப்பணி மாலைச் செய்யுளின் ஆதாரத்தைக் கொண்டு கயாதரம் சுமார் கி.பி. 1575-ல் கல்வியாளர்களால் அங்கீகரித்து எடுத்தாளப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

**கயாதரத்தின் அமைப்பு**

தொல்காப்பிய உரியியல் போன்று நூற்பா அமைப்பில் நிகண்டுகள் காணப்படுகின்றன. இந்நிகண்டிற்கு முன் தோன்றிய திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகியவை 'தொகுதி, வகை படலம்' என்ற அமைப்பு முறையைப் பெற்றுள்ளன. ஆனால் கயாதரம் 'இயல்' என்ற அமைப்பு முறையில் காணப்படுகின்றது.

**கயாதரத்தின் சிறப்பு**

☆ கயாதரம் முழுக்க முழுக்க அந்தாதி தொடையால் காணப்படுகின்றது.

☆ இந்நிகண்டு மகடூஉ முன்னிலையாகக் கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளது.

☆ சொற்களை நினைவில் வைத்துக் கொள்ள பொருள் இயைபினைக் கொள்ளாது சொல் இயைபினைச் சங்கிலித் தொடர் போன்று அமைத்துக் கொண்டுள்ளது.

**நிகண்டுகளின் சொற்புல அமைப்பு**

நிகண்டுகள் பெரும்பாலும் பல்வேறு சொற்களைப் பல்வேறு பொருட் புலங்களில் தொகுத்து வழங்கியுள்ளன. நிகண்டுகளில் இடம் பெறும் இப்பொருட் பாகுபாட்டினைச் சொற்பொருண்மை அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி
2. ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி
3. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி

என்பனவாகும்.

**கயாதர நிகண்டின் சொற்புல அமைப்பு**

கயாதர நிகண்டில் 556 நூற்பாக்களில் உள்ள 11330 சொற்கள் 11 இயல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை,

1. தெய்வப் பெயரியல்
2. இடப் பெயரியல்
3. மக்கட் பெயரியல்
4. விலங்கின் பெயரியல்
5. மரப் பெயரியல்
6. பல்பொருட் பெயரியல்
7. செயற்கை வடிவப் பெயரியல்
8. பண்புப் பெயரியல்
9. செயல் பற்றிய பெயரியல்
10. ஒலி பற்றிய பெயரியல்
11. ஒரு சொல் பல் பொருளியல்

இவற்றில் முதல் பத்து இயல்கள் ஒரு பொருள் பல பெயரியலாகவும், பதினொன்றாம் இயல் ஒரு சொல் பல பொருளியலாகவும் காணப்படுகின்றது. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி இந்நிகண்டில் இடம்பெறவில்லை.

மேலும் இந்நிகண்டில் அனுபந்தம் I,II,III,என்ற உள்ளடக்கத் தொகுப்புக் காணப்படுகின்றது.

அனுபந்தம் I-ல் செய்யுள் முதல் குறிப்பகராதியும்

அனுபந்தம் II-ல் முதல் பத்து தொகுதிகளின் பொருளடக்கமும்

அனுபந்தம் III-ல் பல பொருள் ஒரு சொல் அகராதியும் காணப்படுகின்றன.

**மரப்பெயரியல்**

"*காசிப கோத்திரம் வாழவந் தோன் தென் கலைத் தமிழ்தேர்*
*மாசில் பெருந்தகை மாறா வறிவன் மலரயனுங்*
*கேசவ னும்புகழ் தேவை நன்னாடன் கெயாதரத்துப்*
*பேசி யமைந்தன னைந்தா வது மரப் பேரியலே*",

இந்நூற்பாவின் மூலம் கேசவன் புகழும் தேவை நன்னாடனான கயாதரர் தம் நிகண்டில் மரப்பெயரியலை 5-வது இடத்தில் வைத்துத் தாவரங்களின் பெயர்களை 35 நூற்பாக்களின் வாயிலாக விவரித்துள்ளார்.

**தாவரங்களின் பெயர்கள்**

கயாதர நிகண்டின் 95 தாவரங்களின் பெயர்கள் காணப்படுகின்றது. அவை,

1. அகத்தி
2. அகில்
3. அத்தி
4. அல்லி
5. அழிஞ்சில்
6. அவரை
7. ஆமணக்கு
9, ஆல்
10. இஞ்சி
11. இண்டு
12. இரத்தி
13. இரப்பை
14. இருவாட்சி
15. இலந்தை
16. இரவு
17. உழிஞை
18. உடை
19. ஊமத்தை
20. எட்டி
21. எருக்கு
22. எலுளம்பிச்சை
23. எள்
24. ஏலம்
25. கடம்பு
26. கடு
27. கடுகு
28. கமுகு
29. கருங்காலி
30. கருணை
31. களா
32. கற்பகம்
33. காஞ்செறி
34. கிலுகிலுப்பை
35. கிழங்கு
36. குங்குமம்
37. குமிழம்
38. குரா
39. குருக்கத்தி
40. குருந்தம்
41. குளரி
42. குறிஞ்சி
43. கூதாளம்
44. கொன்றை
45. கோங்கு
46. கோட்டம்
47. சண்பகம்
48. சாய்ப்புல்
49. சீந்தில்
50. சுரபுன்னை
51. செருந்தி
52. சோம்பு
53. சோளம்
54. ஞாழல்
55. தகரம்
56. தர்ப்பை
57. தாமை
58. தாளி
59. தான்றி
60. திப்பிலி
61. துளவு
62. தேவதாரம்
63. தோன்றி
64. நந்தியவத்தம்
65. நுணா
66. நெல்லி
67. பகன்றை
68. பதர்
69 பருத்தி
70. பலா
71. பலாசு
72. பாகல்
73. பாதிரி
74. பாரிசாதம்
75. பிரம்பு
76. புளி
77. புன்கு
78. புன்னை
79. மதுகம்
80. மா.
81. மாந்தரம்
82. மிளகு
83. முருக்கு
84. முள்ளி
85. வள்ளை
86. வழுதுனை
88. வாகை
89. வாட்கோரை
90. வில்வம்
91. விளா
92. வைக்கோல்
93. வெட்சி
94. வேங்கை
95. வேம்பு

## தாவரங்களின் வகைகள்

- தாவரங்கள்
  - மரம்
    - சிறு மரம்
    - பெரு மரம்
    - நெடு மரம்
  - செடி
    - சிறுசெடி
    - புதர்செடி
    - நீர்வாழ்செடி
  - கொடி
    - படர் கொடி
    - வன் கொடி
    - ஏறு கொடி
    - நீர் கொடி
  - புல்

## மரங்களின் வகை

மரம்

| பெருமரம் | சிறுமரம் | நெடுமரம் |
|---|---|---|
| அகில்(5) | அகத்தி (2) | இலுப்பை (மதுகம்) (2) |
| ஆச்சா(2) | அசோகு (3) | கமுகு (3) |
| ஆல் (3) | அத்தி (1) | கருங்காலி (2) |
| சிமி (வன்னிமரம்) | அழிஞ்சில் (2) | கோங்கு (2) |
| சுரபுன்னை (3) | ஆமணக்கு (2) | சண்பகம் (1) |
| பலா (2) | உடை (1) | நெல்லி (2) |
| பாதிரி (1) | எலும்பிச்சை(2) | புளி(3) |
| விளா (2) | கடம்பு (1) | முருக்கு (2) |
| வேங்கை | காயா (2) | வில்வம் (1) |
| | குரா (1) | வேம்பு (2) |
| | குருந்தம் (2) | |
| | கொன்றை (4) | |
| | செருக்கு (2) | |
| | ஞாழல் (1) | |
| | நுணா (2) | |
| | பலாசு | |
| | முருக்கமரம்(1) | |
| | புன்கு (2) | |
| | புன்னை (1) | |
| | மா(3) | |
| | வாகை | |

**செடிகளின் வகை**

கயாதரத்தில் 25 செடிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

செடி

- புதர்ச்செடி
  - தாழை
- சிறுசெடி
  - இஞ்சி (2)
  - இண்டு (2)
  - இருப்பை (1)
  - இருவாட்சி (2)
  - உழிஞை (1)
  - ஊமத்தை (3)
  - எருக்கு (2)
  - ஏலம் (1)
  - எள் (2)
  - களா (2)
  - கடுகு (1)
  - கருணை (2)
  - கற்றாழை (1)
  - கிலுகிலுப்பு (2)
  - குறிஞ்சி (3)
  - குமிழ் (2)
  - கோட்டம் (1)
  - சோம்பு (2)
  - சோளம்
  - துளசி (2)
  - நந்தியாவத்தம் (2)
  - வழுதுணை (3)
- நீர்வாழ்செடி
  - குளரி (1)
  - முள்ளி (2)

**கொடிகளின் வகை**

இந்நிகண்டில் 18 கொடிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

கொடி

| படர்கொடி | வன்கொடி | ஏறுகொடி | நீர்க்கொடி |
|---|---|---|---|
| அடம்பு (1) | தாமரை 1 | பீர்க்கு (2) | அல்லி (2) |
| அவரை (1) | | மிளகு (1) | குவளை (1) |
| காஞ்சொறி (2) | | | |
| குருக்கத்தி (2) | | | |
| குவளை (1) | | | |
| கூதாளம் (2) | | | |
| சீந்தில் (1) | | | |
| தாளி (1) | | | |
| பகன்றை (2) | | | |
| பாகல் (2) | | | |
| மல்லிகை (1) | | | |
| முல்லை (2) | | | |

**புல்லினப் பெயர்கள்**

கயாதரத்தில் 13 புல்லினப் பெயர்களைக் காண முடிகின்றது. அவை,

கரும்பு (4)
சாய்ப்புல் (2)
தர்ப்பை (1)
தெங்கு (2)
நாணல் (1)
நெல் (3)
பனை (2)
புதர்
மூங்கில் (21)
வாட்கோரை (1)
வாழை (2)
வைக்கோல்

☆ மரப்பெயர்களில் சந்தன மரத்தைக் குறிப்பதற்கு மட்டும் அகில், சந்தணம், திலகம், சந்தம், சாந்தம் போன்ற இரண்டிற்கும் மேற்பட்ட ஒரு பொருட் பன்மொழிகள் காணப்படுகின்றது.

☆ புல்லிணத்தில் மூங்கிலுக்கு 21 ஒரு பொருட் பன்மொழிகளும் கரும்பிற்கு 4 ஒரு பொருட் பன்மொழிகளும் இடம்பெற்றுள்ளது.

☆ சிறுமரம், நெடுமரம், செடி, கொடிகளுக்கு இரண்டு (அ) மூன்று ஒரு பொருட் பன்மொழிகள் காணப்படுகின்றன.

☆ திவாகரம், பிங்கல நிகண்டுகளில் இடம் பெறாத தாமலம் என்ற மரப்பெயர் கயாதரத்தில் இடம்பெற்றுள்ளது.

☆ பொதுப்பெயரின் அடிப்படையில் காடு, பூ, பயிர் இவற்றின் ஒரு பொருட் பன்மொழிகளும் இடம்பெற்றுள்ளது.

திவாகரம், பிங்கலம் சூடாமணி இந்நிகண்டுகளுக்குப் பின் தோன்றியது கயாதர நிகண்டாகும். இந்நிகண்டின் ஆசிரியர் கயாதரர் சொற்களை எளிதில் மனதில் பதிய வைத்துக் கொள்ள பொருள் இயைபு முறையைக் கையாண்டுள்ளது சிறப்பானதாகும்.

இக்கட்டுரையில் கயாதர நிகண்டின் சொற்புல அமைப்பின் வகைகள் விளக்கப்பட்டுள்ளன. அச்சொற்புல அமைப்பில் மரப்பெயரியல் காணப்படும் தாவரங்கள் மரம், செடி, கொடி, புல் என வகைப்படுத்தப்பட்டு அவற்றில் காணப்படும் சொற்கள் சொற்பொருண்மைக் கூறுகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**


| | – ஆசிரியர் |
|---|---|
| 1. கயாதர நிகண்டு | -கயாதரர் |
| 2. சேந்தன் திவாகரம் 8-ம் நூ. | -திவாகரர் |
| 3. பிங்கல நிகண்டு 10-ஆம். நூ. | -பிங்கலர் |
| 4. தமிழ் அகராதிகலை 19-ஆம். நூ. | -சுந்தரசண்முகனார் |
| 5. மரஇனப்பெயர்த்தொகுதி-1 1987 | -பெ. மாதையன்<br>எச். சித்திரபுத்திரன் |

# சூடாமணி நிகண்டில் புலச் சொற்கள் (பதினொன்றாம் தொகுதி)

க. உமாராணி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழியில் காணப்படும் சொற்களுக்கு உரிய பொருள்களையும், அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து கொள்வதற்குத் தேவையான சூழல்கள் ஏற்பட்ட போது உருவானவைகளே நிகண்டு நூல்கள் ஆகும். காலந்தோறுமான மொழியின் வளர்ச்சியில் அதன் இயல்புகளுக்கேற்பப் பல புதிய சொற்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. பல சொற்கள் பயன்பாடு குறைந்து வழக்கிலிருந்து மறையத் தொடங்கும். சில சொற்கள் புதிய பொருட்களைப் பெற்று விளங்கும். இந்த சொற்களுக்கான பல பொருள்களைத் தொகுத்துக் கூறும்போது தான் நிகண்டுகள் தோற்றம் பெறுகின்றன. நிகண்டு நூல்கள் அகராதியியலின் முன்னோடியாய் விளங்குவன. தொல்காப்பியச் சொல்லதிகார உரியியல், பொருளதிகாரத்தில் அமைந்துள்ள உவமவியல், மரபியல் என்பவற்றுள் அமைந்துள்ள சில நூற்பாக்களின் விரிவாக்கமாய் நிகண்டு அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. சொல்லையும், பொருளையும், தொகுத்துக் கூறும் முறையில் காணப்படும் நிகண்டின் அமைப்பானது. ஆங்கிலத்தில் கூறப்பெறும் “Thesaurus” என்னும் அமைப்பை ஒட்டியது எனலாம். தமிழில் 9-ம் நூற்றாண்டிலேயே நிகண்டு நூல் தோன்றிவிட்டது. திவாகரம், பிங்கலத்தை, உரிச்சொல், கயாதரம், போன்ற நிகண்டுகளின் வரிசையில் மண்டல புருடரால் எழுதப்பட்ட சூடாமணி நிகண்டு தமிழ் கற்போரால் முடிமணியாகப் போற்றப் பெற்று வந்த ஒரு பெருநூலாகும். சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் காணப்படும் புலச்சொற்களை இக்கட்டுரையில் காணலாம்.

**நிகண்டு சொல்லாட்சி**

தமிழில் 'நிகண்டு' என்ற சொல்லாட்சி முதன்முதலில் இறையனாரகப் பொருள் உரையில் தான் கையாளப் பெற்றுள்ளது.[1] நூற்பெயர் இடுகுறியால் அமையும் என்பதற்குச் சான்று தருமிடத்து இச்சொல்லாட்சி அந்நூலில் இடம்பெற்றுள்ளது. அதை அடியொற்றியே நன்னூலுக்கு விருத்தியுரை எழுதியோரும் 'நிகண்டு' என்ற சொல்லைக் கையாண்டுள்ளனர்.[2]

திவாகரம், பிங்கலந்தை ஆகிய நிகண்டுகள் ஆறங்க வகைகளைக் குறிக்குமிடத்து இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளன.[3] நூற்பெயராக இச்சொல் முதன்முதலில் கி.பி.16-ம் நூற்றாண்டில் தான் வழங்கப் பெற்றுள்ளது.

"மன்னிய நிகண்டு சூடாமணி என ஒன்று சொல்வன்", எனப் பாயிரச் செய்யுளில் நிகண்டு எனும் சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது. அதன் பின்னர்த் தோன்றிய நிகண்டுகள் பலவற்றிலும் 'நிகண்டு' என்ற சொல் பரவலாக வழங்கப் பெற்றுள்ளது. சூடாமணி நிகண்டையடுத்து அகராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு, நாமதீப நிகண்டு, பொருட்டொகை நிகண்டு ஆகிய நூற்பெயர்களிலும் 'நிகண்டு' என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது.

ஆகவே சூடாமணி நிகண்டின் காலமான கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் 'நிகண்டு' என்ற சொல்லாட்சி தமிழில் பெருக வழங்கத் தலைபட்டது என்று கூறலாம்.

**நிகண்டுகள் தோன்றக் காரணம்**

தொல்காப்பியத்திற்குப் பின்பு தமிழ் இலக்கியப் பரப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இலக்கணத்தின் ஒரு பகுதியாக் மட்டும் இருந்து சொற்பொருள் கூறும் மரபு தனியொரு பிரிவாக வளரவேண்டிய சூழல் உருவானது. சொல்நிலை மட்டுமின்றிப் பொருள் நிலையிலும், பெருக்கங்கள் ஏற்பட்ட காரணத்தால்

சொற்களுக்குப் பொருள் கூறுவதற்கு எனத் தனியொரு நூல் தேவைப்பட்டது. இதன் காரணமாக கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் நிகண்டுகள் தோற்றம் பெறலாயின.

மேலும், அக்காலக் கட்டத்தில் சமயத்தைப் பரப்பும் நோக்கில் நூல்கள் மிகுதியாயின. பல்வேறு சமயங்கள் தத்தம் சிறப்பினை நிறுவப் போராடின. வடமொழியின் ஆதிக்கம் தழைத்தோங்கி இருந்தது. இதனால் தமிழ் மக்களின் பண்பாடு, மொழி இவற்றில் பெரும் மாற்றங்கள் எழத் தொடங்கின. தமிழ்மொழியின் சொற்றொகைப் பெருகியது. இந்தச் சூழலில் தான் நிகண்டுகளின் பயன்பாடு மக்களுக்கு மிகுதியாகத் தேவைப்பட்டது.

**சூடாமணி நிகண்டு**

சூடாமணி நிகண்டு சொற்பொருள்களை எளிமையாக அறிந்துகொள்ளுமாறு அமைந்துள்ளது. மண்டல புருடரால் இயற்றப்பட்ட இந்நிகண்டு பயில்வோரால் விரும்பிப் பயிலப் பெற்ற நிகண்டு நூலாகும். இந்நூலின் ‘பதினோராம் தொகுதி’ மட்டும் பல்வேறு பதிப்புகளைப் பெற்று விளங்குகின்றது.

இந்நூலை விளக்கவுரையுடன் பதிப்பாசிரியர் பலர் வெளியிட்டுள்ளனர் என்றாலும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பித்த பதிப்பே எல்லாவற்றிலும் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. இவருடைய சூடாமணி நிகண்டு இதுநாள் வரை 18-க்கும் மேற்பட்ட பதிப்புகளைப் பெற்ற பெருமையுடையதாகும்.

நிகண்டுகளுள் முதலில் எதுகைத் தொடைக்குத் தனிச் சிறப்பளித்து அதற்கெனத் தொகுதிகளுள் ஒன்றனை வகுத்தது சூடாமணியேயாகும்.

பொதுவாக நிகண்டுகளில் அமைந்துள்ள ஒருசொல் பல பொருள் தொகுதியே அகராதிநிலையில் சொற்பொருள் விளக்கும் பாங்குடையது. ஆகவே, சூடாமணி நிகண்டின் 11ஆம் தொகுதியாகிய ஒருசொல் பலபொருட்டொகுதியைப் ‘பதினோராவது நிகண்டு’ என்றே உரைவிளக்கத்தோடு தனிப் புத்தகமாக பதிப்பாசிரியர் சிலர் வெளியிட்டுள்ளனர்.

சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியானது காப்புச் செய்யுள் நீங்கலாக 209 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. இதில் 1575 சொற்களையும் பதினெட்டு மெய்களின் எதுகைகளாகப் பகுத்து, ககர எதுகை முதலாக னகர எதுகை வரையுமாக ஒருசொல் பல பொருள் கூறும் விருத்தப்பாக்கள் காணப்படுகின்றன. நிகண்டில் இடம்பெற்றுள்ள பெரும்பான்மைச் சொற்களும் பலபெயர் சொற்களாகவே காணப்படுகின்றன. தலைச்சொல் பகுதியை விடப் பொருட்பகுதியிலே அதிக சொற்கள் காணப்படுகின்றன. முன்னைய நிகண்டுகளான திவாகரம், பிங்கலத்தை போலப் பொருட்புல அடிப்படையில் பொருள்கள் அமைந்துள்ளன.

**புலச்சொற்கள்**

மீச்சொல், உட்பொருள் சொல் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்தவை புலச்சொற்கள். ஒருபொதுச் சொல்லில் அடங்கும் பொருள் தொடர்புடைய சொற்களை ஒரே புலத்தில் அடக்கும் பொழுது புலச்சொற்கள் தோற்றம் பெறுகின்றன. ஒரே புலத்தினுள் அடங்கும் சொற்கள் பொருள் விரிவு பெற்றிருப்பது மட்டுமல்லாமல் மற்றொரு புலத்துடன் தொடர்புடையதாகவும் காணப்படும்.

தொல்காப்பிய அகத்திணையியலில் கருப்பொருள்களின் வகைப்பாட்டை,

"*தெய்வம் உணாவே மாமரம் புள்பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப*"

– (தொல். அகம்)

என்ற நூற்பாவானது கூறுகிறது. தெய்வம், உணவு, மா (விலங்கு), மரம், புள் (பறவை), பறை, யாழ் என்ற கருப்பொருள் பாகுபாட்டின் அடிப்படையில் தான் நிகண்டுகளிலும் பொருட்புல பாகுபாடு தோற்றம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

### சூடாமணி நிகண்டில் புலச்சொற்கள்

சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் இடம்பெற்றுள்ள சொற்களைப் பல்வேறு புலங்களாகப் பிரித்துக் காணலாம். அவற்றில், விலங்குகள், தெய்வப்பெயர்கள், உறவுமுறைப் பெயர்கள், நவகோள்களின் பெயர்கள், தொழில் சார்ந்த சொற்கள், போன்ற பல புலச் சொற்கள் இடம்பெறுகின்றன.

### விலங்குப் பெயர்கள்

சூடாமணி நிகண்டின் ஒருசொல் பல பொருள் தொகுதியில் விலங்குப் பெயர்கள் அதிகளவில் காணப்படுகின்றன. 15 வகையான விலங்குப் பெயர்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு விலங்கிற்கும் அதனைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள் இந்நிகண்டில் இடம்பெற்றுள்ளன. அதனைப் பின்வரம் அட்டவணையின் வழி அறிந்து கொள்ளலாம்.

| ஆடு | எருது | எருமை | குதிரை | குரங்கு | சிங்கம் |
|---|---|---|---|---|---|
| அசம் | இடபம் | மயிடம் | அசுவம், அய்ம், அரி, இவுளி | அரி | அரி |
| அயம் | இறால் | மூரி (2) | ஊர்தி, கந்தருவம், கந்துகம், | கீசகம் | அறுகு |
| அருணம் | உக்கம் | | கிள்ளை, குண்டு, குந்தம், | மந்தி | சீயம் |
| சாகம் | ஏறு | ஒட்டகம் | கொக்கு, கோடகம், கோடரம், | மர்க்கடம் | கோளரி |
| செச்சை | காளை | | கோடை, கோணம், சடிலம், | வானரம் | வயமா (5) |
| துருவை | கூனி | தாசோகம் | சயிந்தவம், பரி, பாய்மா, | நாகம் | |
| மை | தூரியம் | | புரவி, மா, வாசி, நரை, | காருகம் | |
| மேழகம் | பசு | கழுதை | பட்டம், பாடலம், மண்டிலம், | யூகம் (9) | |
| வருடை | பாண்டில் | | வடவை, வயமா (28) | | |
| வெள்ளை (10) | மூரி | அத்திரி | | | |
| | விடை | கர்த்தபம் | | | |
| | வையம் | கரம் | | | |
| | நரை | கோவேறுகழுதை | | | |
| | நத்தி (14) | வேசரி (5) | | | |

| நரி | நாய் | பசு | பன்றி | புலி | மான் | யானை |
|---|---|---|---|---|---|---|
| ஓரி | அண்டிகம் | ஆ | அரி | உழுவை | அருணம் | அத்தி, அம்பல், இபம் |
| செந்து | எகின் | ஆன் | இருளி | குயவரி | இரலை | இரதி, உம்பல், ஊர்தி |
| (2) | எகினம் | உழுபெற்றம் | ஏறுழி | புண்டரீகம் | உழை | ஒருத்தல், கயம், |
| | குக்கன் | ஏர் | கணலி | புல் | எகினம் | கயந்தலை, கரி, கரிணி, |
| | கொக்கு | குடம் | கிட்டி | வியாக்கிரமம் | கலை | கரேணு, களபம், களவன், |
| | சுணங்கன் | கூலம் | கோமான் | வியானம் | கவரிமா | களிறு, கறையடி, கும்பி, |
| | ஞமலி | கோ | வராகம் (7) | வேங்கை(7) | கவரிமான் | பிடி, சிந்துரம், தும்பி, |
| | ஞாளி | கோமளம் | | | சாரங்கம் | தூங்கல், தோல், நூழால், |
| | துத்தம் (9) | பெற்றம் (9) | | | நவ்வி | பூட்கை, போதகம், மாதிரம், |
| | | | | | ஏணி (10) | முனி, மொய், உவாப்பிடி, |
| | | | | | | வயமா, வாரணம், கைம்மா |
| | | | | | | வேழம் (33) |

## தெய்வப் பெயர்கள்

தெய்வப் பெயர்களில் முருகன், சிவன், திருமால், இலக்குமி, பார்வதி, பிரமன், ஐயனார், இந்திரன், முனீஸ்வரன், சீராமன், சீதா போன்ற தெய்வப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அரி என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் 47 வகையான பொருள்கள் காணப்படுகின்றன. தெய்வப் பெயர்களிலும் ஒவ்வொரு தெய்வப் பெயருக்கும் பல்வேறு பெயர்கள் காணப்படுகின்றன.

- முருகன்
  - செவ்வேள்
  - சாமி
  - செட்டி

- சிவன்
  - அனந்தம்
  - அரன்
  - ஈசன்
  - ஆதி
  - இறை
  - சூலி

- திருமால்
  - அனந்தம்
  - சம்பு
  - மால்
  - சவுரி
  - விட்டுணு
  - அரி
  - காமுகன்
  - ஆதி
  - சம்பு
  - சக்கிரி

- இலக்குமி
  - ஆக்கம்
  - பூமகள்

- பார்வதி
  - அனந்தை
  - சக்தி
  - அருள்
  - ஈஸ்வரி
  - உமையாள்
  - ஐயை
  - துர்க்கை
  - பிடாரி
  - கொற்றி
  - அமரி
  - உமை
  - சுந்தரி
  - காளி
  - சூலி
  - சிவை
  - குமரி

- பிரமன்
  - ஆதி
  - அவதன்
  - அயன்
  - சம்பு

ஐயனார் — ஐயன், காரி

இந்திரன் — தேவேந்திரன், அரி, கரியவன்

முனீஸ்வரன் — முனி, முனிவன், கடவுள்

அருகன் — அனந்தம், சமணதேவன், செம்பல், சினேந்திரன்

என்றவாறு ஒரு தெய்வத்திற்குப் பல பெயர்கள் சூடாமணி நிகண்டில் காணப்படுகின்றன. இதில் பார்வதி என்ற தெய்வப் பெயருக்கு மட்டும் 16 பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதன் மூலம் அக்காலக் கட்டத்தில் பெரும்பாலோரால் பார்வதி எனும் தெய்வம் வழிபடு தெய்வமாக விளங்கியிருப்பதை அறியமுடிகிறது.

## உறவுமுறைப் பெயர்கள்

சமுதாயத்தில் உறவுகள் உன்னதமானவை. மனிதன் உறவுகளால் பிணைக்கப்பட்டவன். பிறப்பாலும், திருமண பந்தத்தாலும் உறவுமுறைகள் உண்டாகின்றன. ஒவ்வொரு உறவுமுறைக்கும் ஒரு பெயர் உண்டு. இந்த உறவுமுறைப் பெயர்களைச் சூடாமணி நிகண்டில் பின்வருமாறு காணலாம்.

அன்னை — முன்பிறந்தாள் (அக்காள்), தோழி (பாங்கி), தாய் (மாதர்)

ஐயன் — மூத்தோன் (அண்ணன்), அப்பன் (தகப்பன்)

கால் → பிள்ளை (புத்திரன்)

சுதை → மகள் (புத்திரி)

செம்பல் → மைந்தன் (புதல்வன்)

**தொழில் சார்ந்த சொற்கள்**

பல்வேறு தொழில்களைக் குறிக்கின்ற தொழில்சார்ந்த சொற்கள் இப்பதினோராம் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. 7 வகையான தொழில்களை உணர்த்தும் சொற்கள் காணப்படுகின்றன.

சித்திரன் (20) → ஓவன் (சித்திரக்காரன்)
சித்திரன் (20) → தச்சன் (மரவினையாளன்)

சகுனி (11) → நிமித்தம் பார்ப்போன் (சகுனம் பார்ப்போன்)

சக்கிரி (8) → குயவன் (குசவன்)

கூனியர் (273) →கொர்லைத்திறத்தோர் (வேடர்)

காருகர் (203) — தந்துவாயர் (நெய்வோர்)
— கொலையாளர் (காருகர்)
— வண்ணார் (காழியர்)

ஏனாதி (305) → மஞ்சிகன் (நாவிதன்)

காழியர் (253) → வண்ணார் ( ஏகாலியர்)

இவ்வாறு தொழில் சார் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**நவகோள்களின் பெயர்கள்**

சூரியன் —
- சான்றோன்
- அலரி
- அருக்கன்
- அருணன்
- ஆதித்தன்
- இரவி
- கனலி
- சம்பு
- சண்டன்
- வெய்யோன்
- பானு
- திவாகரன்
- சித்திரபானு
- சுடர்

இவ்வாறு சூரியனுக்கு 15 வகையான பெயர்கள் காணப்படுகின்றன.

சந்திரன்
- அம்புலி
- அலவன்

செவ்வாய்
- குருதி
- குசன்

புதன்
- அருணன்
- சௌமியன்

வியாழன்
- குரு
- பிரகற்பதி
- சுரகுரு
- தேவமந்திரி
- சீவன்

சனி
- கரியவன்

மேற்கூறியவாறு நவகோள்களின் பல்வேறு பெயர்கள் சூடாமணியில் காணப்படுகின்றன.

**தொகுப்புரை**

☆ நிகண்டுகளில் வரலாற்று வரிசையில் அமைந்த சூடாமணி நிகண்டின் ஒரு சொல் பலபொருள் தொகுதி அகராதி நிலையில் சொற்பொருள் விளக்கும் பாங்குடையதாகக் காணப்படுகிறது.

☆ நிகண்டுகள் தோன்றுவதற்குக் காரணமான சூழல்களும், நிகண்டுகளின் பயன்பாடும் குறிப்பிடப்பட்டது.

☆ சூடாமணி நிகண்டின் சொற்புலங்களில் விலங்குகள், தெய்வங்கள், உறவுமுறைப் பெயர்கள், தொழில் பெயர்கள், நவகோள்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

☆ விலங்குகளில் 15 வகையான விலங்குப் பெயர்கள் காணப்படுகின்றன. இதில் யானையைக் குறிக்க 33 வகையான பெயர்கள் காணப்படுகின்றன.

☆ நவகோள்களின் பெயர்களில் சூரியனுக்கு மட்டும் 14 வகையான பெயர்களும், அடுத்ததாக வியாழனுக்கு 5 வகையான பெயர்களும் காணப்படுகின்றன.

☆ தெய்வப் பெயர்களில் 10 வகையான தெய்வப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இதில் பார்வதி எனும் தெய்வத்திற்கு மட்டும் 16 வகையான பெயர்கள் அமைந்துள்ளன.

☆ புலச்சொற்களுக்குரிய பல்வேறு பெயர்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

☆ இக்கட்டுரையின் வழியாகச் சூடாமணி நிகண்டில் ஒருசொல் பலபொருள் விளக்கத் தொகுதியில் காணப்படும் பல்வேறுபட்ட புலச்சொற்களையும் அவற்றிற்கான பல பெயர்களையும் அறிந்து கொள்ளலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. இறையனாரகப் பொருள், ப.4.
2. வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ப.64.
3. திவாகரர், திவாகரம் ப.292, ஆ. பிங்கலமுனிவர், பிங்கலநிகண்டு ப.72.

**துணைநூற்பட்டியல்**

1, சூடாமணி நிகண்டு (பதினொன்றாம் தொகுதி) - மு. சண்முகம்பிள்ளை
ஒருசொல் பல பொருள் விளக்கம் - இ. சுந்தரமூர்த்தி (ப.ஆ.)
2. தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு - வ. ஜெயதேவன்
3. சதுரகராதி ஆராய்ச்சி - சூ. இன்னாசி

# பிங்கல நிகண்டில் உயிரினச் சொற்களின் வகைப்பாடு

த. ஆர்த்தி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஒரு பொதுச்சொல்லில் அடங்கும் ஒத்த தொடர்புடைய பல்வேறு சொற்களை ஒரு புலத்தில் அடக்கினால் அவை புலச்சொற்கள் எனப்படும். நிகண்டுகளில் சொற்களைப் பல்வேறு புலங்களாக வகைப்படுத்தியுள்ளனர். திவாகரம் சொற்களைத் தொகுதிகளாகப் பிரித்துள்ளது. பிங்கலத்தில் அவை வகைகளாக மாற்றம் பெற்றன. நாமதீபம் வர்க்கங்களாக வகைப்படுத்தியுள்ளது. நிகண்டுகளில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பெரும்பான்மை ஒத்திருப்பின், ஒரு சிலச்சொற்களே ஆசிரியரின் கால மாற்றத்திற்கேற்ப மாறியுள்ளன.

### நிகண்டு பெயர்க்காரணம்

வடமொழியில் உள்ள வேதத்தின் ஆறு அங்கங்களுள் நிருத்தம் என்பதும் ஒன்று. நிருத்தத்தின் ஒரு பகுதி நிகண்டு ஆகும். இப்பகுதியில் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டது. சொற்பொருள் கூறத்தொடங்கிய தமிழ் நூல்களும் நிகண்டு என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன.

### நிகண்டு அமைப்பு

நிகண்டுகள் அனைத்தும் பெரும்பாலும் அமைப்பு முறையில் ஒற்றுமையுடையதாய்க் காணப்படுகின்றன. பலசொல் ஒருபொருள், ஒருசொல் பலபொருள் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி என்ற அமைப்புமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

### பிங்கல நிகண்டு

பிங்கல நிகண்டு பிங்கலம் என்பவரால் இயற்றப்பட்டது. ஆசிரியரின் பெயர் இந்நிகண்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகும்.

**பிங்கல நிகண்டின் அமைப்பு**

பிங்கல நிகண்டு சொற்களைப் பத்து வகைகளாகப் பிரித்துள்ளது. அவை பின் வருவன.

| | |
|---|---|
| 1. வான் வகை | 6. அநுபோக வகை |
| 2. வானவர் வகை | 7. பண்பிற் செயலிற்பகுதி வகை |
| 3. ஐயர் வகை | 8. மாப்பெயர் வகை |
| 4. அவனி வகை | 9. மரப்பெயர் வகை |
| 5. ஆடவர் வகை | 10. ஒருசொல் பல்பொருள் வகை |


இவற்றுள் முதல் ஒன்பது வகைகள் ஒருபொருள் பல்பெயர்த் தொகுதியாகவும், பத்தாவது வகை ஒரு சொல் பல்பெயர்த் தொகுதியைச் சார்நதுள்ளன.

இந்நிகண்டின் எட்டாவதாக இடம்பெற்றுள்ள மாப்பெயர் வகையில் பறவை, விலங்கு, பாம்பு வகை, சலசர வகை போன்றவற்றில் இடம்பெற்ற உயிரினங்கள் பாகுப்படுத்தப்பட்டு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

**மாப்பெயர் வகை**

'மா' என்ற சொல் விலங்குகளைக் குறிக்கும் பொதுச் சொல் ஆகும். இம்மாப்பெயர் வகையில் விலங்கினை மட்டும் கூறாமல் புள்ளினங்களையும் நீர்வாழ்வன மற்றும் ஊர்வனவற்றையும் ஆசிரியர் கூறியுள்ளார்.

மேலும் புள்ளினங்களுக்கு ஆண், பெண், பிள்ளை என்று தனியாகத் தலைப்பிட்டுக் கூறாமல், விலங்குகளுக்கு மட்டுமே ஆண், பெண், பிள்ளை என்று தலைப்பிட்டுக் கூறியுள்ளார். அவற்றைப் பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.




**பறவைகள்**

பிங்கல நிகண்டில் முப்பத்திரெண்டு வகையான பறவைகள் பயின்று வருகின்றன. அவை மட்டுமல்லாமல் அவற்றின் இனங்களும் கூறப்பட்டுள்ளன. பறவையின் பெயர்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1. அசுணமா
2. அன்றில்
3. அன்னம்
4. ஆந்தை
5. ஈசல்
6. உள்ளான்
7. எண்காற்புள்ளி
8. கருடன்
9. கல்சிலை
10. கவுதாரி
11. கழுகு
12. காகம்
13. காடை
14. காரிப்பிள்ளை
15. கிளி
16. குயில்
17. கொக்கு
18. கொதுகு
19. கோட்டான்
20. கோழி
21. சக்கரவாகப்புள்
22. சிச்சில
23. தேனீ
24. நாகண வாய்ப்புள்
25. பருந்து
26. புறா
27. பொய்யாப்புள்
28. மயில்
29. மின்மினி
30. வண்டு
31. வாவல்
32. விட்டில்

மேற்கண்ட பறவைகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பறவைகள்

நீர்ப்பறவை

அன்னம்

சிச்சிலி

நிலப்பறவை

அசுணமா

அன்றில்

ஆந்தை

ஈசல்

உள்ளான்

எண்காற்புள்ளி

கருடன்

கல்சிலை

கவுதாரி

கழுகு

காடை

காரிப்பிள்ளை

கிளி

குயில்

கொதுகு

கோட்டான்

கோழி

சக்கரவாகப்புள்

தேனீ

நாகணவாய்ப்புள்

பருந்து

மின்மினி

வண்டு

வாவல்

விட்டில்

நீர்நிலப்பறவை

காகம்

கொக்கு

பொய்யாப்புள்

மேற்கூறப்பட்ட பறவைகளுள் மயிலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். மயிலின் தோகை, குரல், சிகை போன்றவற்றைத் தனித்தனி நூற்பாக்களில் கூறியுள்ளதால் மயிலின் சிறப்பை அறியமுடிகிறது.

☆ பறவைகளில் அதிகமாக வண்டினைக் குறிப்பதற்கு 25 சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

☆ பல்லியை மற்ற நிகண்டுகளில் விலங்கு அல்லது ஊர்வனவைகளில் சேர்த்துள்ளனர். ஆனால் பிங்கல நிகண்டில்

பல்லியைப் பறவையினத்தில் சேர்த்துள்ளார். பல்லியைக் குறிப்பதற்குக் 'கல்சிலை' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

☆ குருவியைக் குறிப்பதற்கான பொதுச்சொல் பயன்படுத்தப்படவில்லை. அவற்றின் இனமான தூக்கானாங் குருவி, கரிக்குருவி போன்றவற்றின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

**விலங்கினங்கள்**

பிங்கல நிகண்டில் முப்பது வகையான விலங்குகள் பயின்று வருகின்றன. அவை,

| | |
|---|---|
| 1. அணில் | 16. கீரி |
| 2. அழுங்கு | 17. கெவுளி |
| 3. ஆடு | 18. கோவேறுகழுதை |
| 4. இந்திரக்கோபம் | 19. சிங்கம் |
| 5. உடும்பு | 20. தேள் |
| 6. எருது | 21. நரி |
| 7. எருமை | 22. நாய் |
| 8. எறும்பு | 23. பசு |
| 9. ஒட்டகம் | 24. பன்றி |
| 10. ஓர்தி | 25. புலி |
| 11. கரடி | 26. பூனை |
| 12. கழுதை | 27. மான் |
| 13. கரையான் | 28. முயல் |
| 14. குதிரை | 29. மூஞ்சுறு |
| 15. குரங்கு | 30. யானை |

மேற்கூறப்பட்ட விலங்குகளை மூன்றுப்பிரிவுகளாகப் பிரித்து ஆராயலாம்.

விலங்கு

| காட்டு விலங்கு | நாட்டு விலங்கு | இருவாழ்விலங்கு |
|---|---|---|
| அழுங்கு | ஆடு | எறும்பு |
| அணில் | எருது | கழுதை |
| இந்திரக்கோபம் | எருமை | கறையான் |
| உடும்பு | பசு | குதிரை |
| ஒட்டகம் | மூஞ்சுறு | கெவுளி |
| ஓந்தி | | நாய் |
| கரடி | | பன்றி |
| குரங்கு | | பூனை |
| கீரி | | |
| கோவேறுகழுதை | | |
| சிங்கம் | | |
| தேள் | | |
| புலி | | |
| மான் | | |
| முயல் | | |
| யானை | | |

மேலும் காட்டுவிலங்குகள் மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன:

காட்டுவிலங்கு

| தாவரம் உண்பன | மாமிசம் உண்பன | இரண்டும் உண்பன |
|---|---|---|
| அணில் | உடும்பு | கீரி |
| ஒட்டகம் | ஓந்தி | நரி |
| குரங்கு | சிங்கம் | |
| கோவேறுகழுதை | புலி | |
| மான் | கரடி | |
| முயல் | | |
| யானை | | |

மேற்கூறப்பட்ட விலங்குகளை மட்டும் குறிப்பிடாமல் ஆண், பெண், பிள்ளைகளின் பெயர்களும் அவற்றின் உறுப்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. சான்றாக,

**விலங்கின் ஆண்பெயர்**

களிறு, போத்து, கலை, கடுவன், பகடு, சே, ஒருத்தல், தகர், ஏறு, உம்பல், ஏற்றை, மா, ஓரி, சேவல் போன்ற சொற்கள் கூறப்பட்டுள்ளன.

**பெண் மரபு**

பிணை, பாட்டி, பெட்டை, பிணா, ஆ, ஆன், பிடி, நாகு, மந்தி, மூடு, கடமை ஆகியச் சொற்கள் பயின்று வந்துள்ளன.

**பிள்ளை மரபு**

குருளை, குட்டி, பறழ், பிள்ளை, மறி, கன்று, குழவி, பார்ப்பு, மகவு போன்றச் சொற்களைக் கூறியுள்ளார்.

**வாலின் பெயர்**

தோகை, வாலதி, கூலம், வேசகம், இலாங்கூலம் போன்றச் சொற்கள் கூறப்பட்டுள்ளன.

☆ விலங்குப் பகுதியில் நாற்கால் உயிரினங்களை மட்டும் குறிப்பிடாமல் ஊர்வனவைகளான பல்லி, உடும்பு, ஓந்தி, அணில் போன்றவைகளையும் சேர்த்துள்ளார்.

☆ பூனைஎயைக் குறிப்பதற்குப் பூஞை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

☆ மற்ற நிகண்டுகளில் இந்திரக்கோபத்தைப் புள் வகையுள் சேர்த்துள்ளனர். ஆனால் பிங்கல ஆசிரியரோ விலங்குப் பகுதியில் சேர்த்துள்ளார்.

☆ எலியைக் குறிப்பதற்கான சொற்கள் பயன்படுத்தவில்லை. அவற்றின் இனமான மூஞ்சுறு, பெருச்சாளி, சீறெலி, அகழெலி போன்றவற்றிற்கான பெயர்கள் தரப்பட்டுள்ளன.

☆ஆட்டினைக் குறிப்பதற்கான பொதுச்சொல் பயன்படுத்தியது போன்று மாட்டினைக் குறிப்பதற்கான பொதுச் சொல் ஏதும் பயன்படுத்தப்படவில்லை.

☆மற்ற விலங்குகளை விட யானையினைக் குறிப்பதற்கு 45 சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யானையின் உறுப்புக்களான நுதல், துதிக்கை, கடைக்கண், கைந்நுணி, கொம்பு, முன்கால், பின்கால், முதுகு, வால், வால்நுனி, வாலின்கீழிடம், செவி, நடுச்செவி, வாய், பல்லடி, பிடரி, முகம் ஆகியச் சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். உறுப்புக்களை மட்டும் குறிப்பிடாமல் மதநீர், நோய், நுதல்பட்டத்தின் பெயர் ஆகியவையும் கூறப்பட்டுள்ளன.

**பாம்பின் வகை**

பொதுவாகப் பாம்பினைக் குறிப்பதற்கு இருபத்திமூன்று சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில் பாம்பினை மட்டும் குறிப்பிடாமல் அவற்றின் படப்பொறியினையும், நஞ்சினையும் கூறியுள்ளனர். அவைமட்டுமல்லாமல் புழு, சிலந்தி ஆகிய உயிரினங்களையும் இவ்வகையில் சேர்த்துள்ளார். மற்ற நிகண்டுகளில் 'சிலந்தியை' பறவை இனங்களில் சேர்த்துள்ளனர்.

**பாம்பின் பெயர்**

அரவு, கட்செவி, அங்கதம், வியானம், உரகம், பன்னகம், நாகம், சர்ப்பம், அரி, மாசுணம், புயங்கம், பாந்தள், பணி, அகி, தந்தசூகம், போகி, விடதரம், கும்பிநசம், காகோதரம், மரானம், சக்கிரி, வாகுவவகதம், கூடபதம் போன்ற சொற்கள் பயின்று வருகின்றன.

**சலசர வகை**

இவ்வகையில் மீன், முதலை, ஆமை, சங்கு, சிப்பி, தவளை, கிளிஞ்சல், ஞெண்டு, நத்தை, அட்டை போன்ற உயிரினச் சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 'அட்டை'யைத் தவிர மற்ற அனைத்து உயிரினங்களும் நீர்வாழ்வனவைகளைச் சேர்ந்தது ஆகும். மற்ற நிகண்டுகளில் ஊர்வனவைகளில் அட்டையைச் சேர்த்துள்ளார். சலசரவகையில் சங்கினைக் குறிப்பதற்கு அதிகமாகப் பதினொறுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, நந்து, சுத்தி, நாகு,

பணிலம், வண்டு, கோடு, வளை, சுரிமுகம், கம்பு, வெள்ளை, இடம்புரி போன்றச் சொற்கள் பயின்று வருகின்றன.

☆ பறவைகளில் மயிலின் சிறப்பைக் கூறும் பொழுது தோகையினைக் குறிப்பதற்கு 9 சொற்களும், குரலினைக் குறிப்பதற்கு 3 சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்ற புள்ளினங்களுக்குரிய இறகு, குரல் போன்றவற்றைக் குறிப்பதற்கானச் சொற்கள் பயன்படுத்தவில்லை.

☆ விலங்குகளிலேயே யானையைக் குறிப்பதற்கு 45 சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவை மட்டுமல்லாமல் அவற்றின் உறுப்புக்களைக் குறிப்பதனகு பல்வேறுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். யானையை அழகுப்படுத்துவதற்காக நுதலில் கட்டப்படும் பட்டத்திற்கு 'ஓடை' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

☆ பாம்பின் வகைகளில் பாம்பினைக் குறிப்பதற்கு 23 சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாம்பின் வகையில் சிலந்தியைக் குறிப்பிட்டது வேறுப்பட்ட ஒன்றாகும்

☆ சலசரவகையில் மீன், முதலை, ஆமை போன்ற நீர்வாழ் உயிரினங்களைக் குறிப்பிட்டது மட்டுமல்லாமல் ஊர்வனவையாகக் கருதப்படும் 'அட்டை' யைக் கூறியது மாறுப்பட்ட ஒன்றாகும்.

☆ தமிழ் மொழியின் சொல்வளத்தைச் செழுமையுறச் செய்கின்ற வகையில் நிகண்டுகள் அமைகின்றன. நிகண்டுகள் உயிரினங்களின் மரபுகளையும், மாற்றங்களையும் அறிந்து கொள்ள மிகவும் பயன்படுகின்றன. சொற்களுக்குப் பொருள், பொருளுக்குச் சொல் என்ற முறையில் பல்வேறு செய்திகளைக் கற்றுக் கொள்ள நிகண்டுகளை சிறந்த கருவியாகக் கொள்ளலாம்.

**பயன்பட்ட நூல்கள்**


1. பிங்கல நிகண்டு - பிங்கலர்
2. நாமதீப நிகண்டு - சிவசுப்பிரமணியக் கவிராயர்
3. சூடாமணி - மண்டலப்புருடர்
4. அபிதான சிந்தாமணி
5. மதுரைத் தமிழ் பேரகராதி
6. சென்னைப் பல்கலைக்கழக அகராதி

# நாமதீப நிகண்டில் நடையியல் கூறுகள் (ஒலிக்கோலம்)

இரா. கலா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

---

தமிழில் சொற்பொருள் விளக்கும்துறை முதன்முதலில் தொல்காப்பிய உரியியலில் காணப்படுகின்றது. தொல்காப்பிய உவமவியல் அணியிலக்கண வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்ததைப் போன்று சொற்பொருள் கூறும் துறைக்கு உரியியலே அடித்தளமாய் அமைந்தது எனலாம். தமிழகராதி வரலாற்றின் முன்வடிவமாகத் திகழும் நிகண்டுகள் தமிழ்மொழியின் சொல்வடிவத்தைப் பாதுகாக்கும் பெட்டகமாகத் திகழ்கின்றன. அத்தகைய நிகண்டகளில் ஒன்றான நாமதீப நிகண்டில் நடையியல் கூறுகளில் ஒன்றான ஒலிக்கோலத்தை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நிகண்டு**

வேதச் சொற்களின் பொருளை ஆராயும்துறை 'நிருத்தம்' எனப்படும். இந்த நிருத்தத்தின் ஒரு பகுதி நிகண்டு எனப்படும். இது நைகண்டுகம், நைகமம், தைவதம் என்ற மூன்று காண்டங்களையுடையது. பெயர்த் தொகுதிகளின் தொகுப்பே நிகண்டு என்பர். தமிழ் மொழியின் முதல் நிகண்டாகக் கருதப்படுவது கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரமாகும். அதனைத் தொடர்ந்து ஏறத்தாழ 50 நிகண்டுகள் தோற்றம் பெற்றன என்றும் அவற்றில் 27 நிகண்டுகளே பயன்பாட்டில் உள்ளன என்றும் கூறுவர்.

**நிகண்டின் அமைப்பு**

நிகண்டுகள் பெரும்பாலும் மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியன. அவை,

1. ஒருபொருட் பெயர்த் தொகுதி

2. ஒருசொல் பல்பொருட் பெயர்த்தொகுதி

3. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி

மேற்கூறிய மூன்று பிரிவுகளையும் பழமையான முதல் நிகண்டாகக் கருதப்படுகின்ற சேந்தன் திவாகரம் பெற்றுள்ளது. இத்திவாகரமே பிற்கால நிகண்டுகளின் வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்தது எனலாம்.

---

நிகண்டுகளில் கூறப்பட்டுள்ள பெயர்ப் பாகுபாடுகளைத் திவாகரம் - தொகுதி என்றும் பிங்கலம் - வகை என்றும் கயாதரம் - இயல் என்றும் நாமதீபம் - வர்க்கம் என்றும் கூறுகின்றன.

**நாமதீப நிகண்டு**

நாமதீப நிகண்டை கி.பி. 19-ம் நூற்றாண்டில் கல்லிடை நகர் சிவசுப்பிரமணி கவிராயர் தொகுத்தளித்தார். இது வெண்பா யாப்பில் நான்கு படலங்களைக் கொண்டமைந்துள்ளது. இந்நிகண்டு 16 பாயிரங்களையும் 808 பாக்களையும் 12000 சொற்களையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நிகண்டு ஒருபொருள் பல்பெயர்த் தொகுதியைக் கூறுகின்றது. பெரும்பாலான நிகண்டுகள் திவாகரத்துள் காணும் தொகுதி முறையைப் பின்பற்றிச் செல்ல அவற்றிற்கு முற்றிலும் மாறாகப் புதியதொரு பொருட்பாகுபாட்டைக் கொண்டமைந்ததால் 20-ஆம் நூற்றாண்டில் மிகவும் வரவேற்பினைப் பெற்ற நிகண்டாகத் திகழ்கின்றது.

**நாமதீப நிகண்டில் நடையியல் கூறுகள்**

1. ஒலிக்கோலம், 2. சொல்தேர்வு, 3. தொடர்க்கட்டு இம்மூன்றும் நடையியல் கூறுகளாகும். இம்மூன்று உத்திகளையும் ஆசிரியர் கையாளுவதன் மூலம் அவ்வாசிரியனை இனங்கண்டு கொள்ள முடியும் என்பர். ஒலிக்கோலத்தின் முக்கியப்பங்கு என்னவெனில் நடையியலில் ஒலியின் பங்கினை ஆய்வதாகும். இக்கட்டுரையில் ஒலிக்கோல உத்தி பற்றி மட்டும் ஆராயப்படுகிறது.

**ஒலிநிலை உத்திகள் தோன்றக் காரணம்**

“இலக்கியங்கள் வாய்மொழியாகவே வழங்கப்பட்ட பண்டைய நாள்களில் அவற்றை அப்படியே மனனம் செய்து பதிய வைத்துக் கொள்ள கடினமாக இருந்ததால் சில ஒலிகளையோ, தொடர்களையோ திரும்பத் திரும்பப் பயின்று வருமாறு படைத்தால் முழுப் பாடலையும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்” என்ற காரணத்தால் தோற்றம் பெற்றது என்பர்.

ஒலிநிலை உத்திகளாக மோனை, எதுகை, இயைபு, வண்ணம், இரட்டைக்கிளவி, ஒலிக்குறிப்புச் சொற்கள் போன்றவற்றைக் கூறலாம். அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

**மோனை**

புலவர்கள் பலரும் கையாளும் உத்திகளுள் ஒன்று மோனை, இது அடிதோறும் முதலெழுத்து ஒத்து வருவதாகும். தொல்காப்பியர் எதுகை, மோனையைப் பற்றி,

“*அடிதோறும் தலையெழுத்து ஒப்பது மோனை*”
“*அஃதொழித் தொன்றின் எதுகையாகும்*”

என்று கூறுகின்றார்.

எதுகையும் மோனையும் எட்டு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவை,

1. அடிமோனை
2. இணைமோனை
3. பொழிப்பு மோனை
4. ஒரூஉ மோனை
5. கூழைமோனை
6. மேல்கதுவாய் மோனை
7. கீழ்க்கதுவாய் மோனை
8. முற்று மோனை

இவற்றைப் போலவே எதுகையும் அடி எதுகை, இணை எதுகை என்ற பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**அடிமோனை**

*"நன்டுவிழுமம் கடவுள் நன்னர் நயம் சேருஒண்மை*
*நன்று உத்தமம் நறுமை யாணர்சிவம்"*

(மனக்குணவர்க்கம் -610)

முதலடியின் முதல் எழுத்தும் இரண்டாமடியின் முதல் எழுத்தும் ஒன்றுவது மோனை. மேற்கூறிய பாடல் நன்மையின் பெயர்களை விளக்குகின்றது.

**இணை மோனை**

*"தற்புகழ்ச்சி தர்ப்பம் நெடுமொழி வினைவிடையாய்ச்"*

(வாக்குக்குணவர்க்கம் -66)

தற்புகழ்ச்சி மற்றும் வினாவிடையாய்ப் பேசும் பெயர்களைக் குறிக்கின்றது. இதில் முதல்சீரின் முதல் எழுத்தும் இரண்டாம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றி வந்துள்ளது.

**பொழிப்பு மோனை**

*"சீரணம்சி தம்புசெடி சீத்தைகுண மின்மையாம்"*

(ம.கு.வ.640)

*"நச்சலப்ப வாவேட்கை நம்புரதி வெப்பநயப்பு"* (ம.கு.வ.632)

குணமின்மை மற்றும் ஆசையின் பெயர்களைக் கூறுகின்றது. இதில் முதல்சீரின் முதல் எழுத்தும் மூன்றாம் சீரின் முதல் எழுத்தும் வந்துள்ளதால் இவற்றைப் பொழிப்பு மோனைக்குரிய சான்றாகக் கொள்ளலாம்.

**ஒரூஉ மோனை**

*"மாண்கொழுமை சால்பமைதி வாய்ப்பான்றல் மாட்சிவளம்"*

(ம.கு.வ.-621)

வளத்தின் பெயர்பற்றிக் கூறுகின்றது.

**கூழை மோனை**

*"பாவகம் பாவம்பாவை பாவனைய கஞ்செடியாம்"*

(ம.கு.வ.-606)

பாவனையின் பெயர்களைப் பற்றிக் கூறுகின்றது. இதில் முதல் மூன்று சீர்களின் முதலெழுத்து ஒன்றி வந்துள்ளது.

**மேற்கதுவாய் மோனை**

"*திமிறல் பசைதல் திருகல் திருமல்*" (செயற்குணவர்க்கம்-750)

**கீழ்க்கதுவாய் மோனை**

"*வித்தகம் வியப்பிறும்பூ தாச்சரியம் விம்மிதம்*" (ம.கு.வ.643)

அதிசயத்தின் பெயர்களைப் பற்றிக் கூறுகின்றது.

மேற்கூறிய சான்றுகளின் வாயிலாக நாமதீப நிகண்டில் குணநாமப் படலத்தில் அதிக அளவு மோனைகள் பயின்று வந்துள்ளதை அறிய முடிகின்றது. இவ்வுத்தி பண்டைய கால புலவர்களால் அதிகம் கையாளப்பட்டு வந்ததைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

**எதுகை**

மோனையைப் போன்றே எதுகையும் சங்கப் புலவர்களால் சிறப்பாகக் கையாளப்பட்டது. இவ்வெதுகையானது அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி நிற்பதாகும். இவையும் பல உட்பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவற்றில் சிலவற்றைச் சான்றுகள் வழியாக அறியமுடிகின்றது.

**அடியெதுகை**

"*கண்ணல்சுட்டல் பேணல் கருதல்நுத லல்குறித்த*
*லெண்ணலாஞ் சிந்தைகருத் திங்கிதஞ் சுட்டு*" (ம.கு.வ.605)

**இணை எதுகை**

"*கம்பலை சி லும்பல் கலகம் பயிர்ப்புரற்றல்*
*பம்பு தமரம் படுதல் விம்மல்*" (வா.கு.வ.685)

**ஒரூஉ எதுகை**

"*தோரணையா டம்பரமி டம்பம் பிரகடமாம்*" (ம.கு.வ. 610)

**பொழிப்பு எதுகை**

"*நன்குவிழு மங்கடவுள் நன்னர்நயஞ்சேடொண்மை*" (ம.கு.வ.606)

**கூழை எதுகை**

"*பாவகம் பாவம்பாவை பாவனைய கஞ்செடியாம்*" (ம.கு.வ.606)

மோனையைப் போன்றே எதுகையையும் சிசுப்பிரமணிக் கவிராயர் அதிக அளவில் பயன்படுத்தியுள்ளார் என்பதை மேற்கூறிய பாடல்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

**இயைபு**

ஒலிநிலை உத்திகளில் இயைபும் ஒன்று. இலக்கியங்களில் அடி முதல் இயைபு பல நேரங்களில் காணப்படுகின்றது என்றும் சங்க இலக்கியத்தில் அப்படிப்பட்ட சில இயைபுகள் மரபாகவே ஆளப்படுகின்றன என்றும் ஜெ. நீதிவாணன் கூறுகின்றார். நாமதீப நிகண்டில் இவ்வியைபு பல இடங்களில் காணப்படுகின்றது.

"*சிதர்த்த லுகுத்தல் சிதந்தலே யூழ்த்தல்*
*துதிச்சிதறல் தூற்றலிவை தூவல் - நொதுத்தல்*
*நதுத்தல் அவித்தல் நவித்தலுமாம் வேதல்*
*கதுவாய் வடுப்படல் கா யம்*" (செ.கு.வ. 738)

**வண்ணம்**

ஒரே ஒலி அல்லது அதற்கினமான ஒலிகள் ஓர் அடியிலோ பாடல் முழுவதுமோ பயின்று வருவதனை வண்ணம் என்பர். தொல்காப்பியர் வண்ணம் பற்றிக் கூறும்பொழுது,

"*வண்ணந் தாமே நாலைந் தென்ப*" (தொல். 514)

என்றும்,

"*அவைதாம்*
*பாஅ வண்ணம் தாஅ வண்ணம்*
*வல்லிசை வண்ணமை மெல்லிசை வண்ணம்*
*இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்*
*நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்*
......... ............ ............ ..........

.......... ............. ........... ............
*ஆங்கென மொழிப அறிந்திசி னோரே"* (தொல். 515)

என்று இருபது வகையான வண்ணம் பற்றிக் கூறுகின்றார். அவற்றில் சிலவற்றை நாமதீப நிகண்டு வழியாகக் காணலாம்.

**வல்லிசை வண்ணம்**

*"பாரம் பரியம் பரம்பரை பாந்த முறை*
*யாகும் பதில்பரியா யம்பிரதி"* (ம.கு.வ. 641)

இப்பாடலில் இடையின, மெல்லின எழுத்துக்களை விட வல்லெழுத்துக்களே அதிகமாக வந்துள்ளன. எனவே இவற்றை வல்லிசை வண்ணத்துக்குரிய சான்றாகக் கொள்ளலாம்.

**மெல்லிசை வண்ணம்**

*"எண்ணங் கணக்கெழுத்தி லக்கணம்வி யாகரணந்*
*திண்ணியலு மாஞ் சோசி யங்கரண - மெண்கணிதம்"*
(வா.கு.வ.659)

இப்பாடலில் வல்லின, இடையின எழுத்துக்களை விட மெல்லெழுத்துக்களே அதிகமாகப் பயின்று வந்துள்ளன.

**நெடுஞ்சீர் வண்ணம்**

*"மால்விரகங் காமமத னோய் மோகந்தூங்கன்மந்த*
*மாலசியம் சோம்புவிடா யாயசம்"* (ம.கு.வ.633)

சீர்தோறும் நெட்டெழுத்துக்கள் பயின்று வந்துள்ளதால் இவற்றை நெடுஞ்சீர் வண்ணத்திற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**குறுஞ்சீர் வண்ணம்**

*"கவ்வைவபையுள் புன்கண்மம்மர் கையாறின் னாங்ககித*
*மெவ்வமிடுக்கண்பழங்க ணேதமின்னல் "* (ம.கு.வ.629)

இப்பாடலில் குற்றெழுத்துக்கள் அதிகமாய்ப் பயின்று வந்துள்ளதால் குறுஞ்சீர் வண்ணத்திற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்**

ஒலிக்குறிப்புச் சொற்களைப் பற்றிக் கூறவரும் நடையியல் ஆசிரியர் "ஒரு குறிப்பிட்ட ஒலியைப் புலப்படுத்தும் முறையில் அதே ஒலியைக் கொண்ட சொல்லாக அமைவது" என்கிறார். இவ்வொலிக் குறிப்புச் சொற்களைக் குணநாமப் படலத்தில் காணமுடிகின்றது.

சான்று :

"*சிலீர், திடீர், விரீர், பளீர், கணீர் ..........*" (வா.கு.வ.686)

**இரட்டைக்கிளவி**

இரண்டு சொற்கள் இணைந்தால்மட்டுமே பொருள் வரும். அவ்வாறின்றித் தனித்து வரின் பொருள் தராது. குணநாமப் படலத்தில் அத்தகையச் சொற்களைக் காணமுடிகின்றது.

"*படபடென்ற லன்றிப் பகபகென்ற லோடு*
*தடதடென்ற லேசளச ளென்றல் - மடமடலென்றல்*
*வன்றிடுத லென்றல் வழுவழென்றல் கொழு கொ*
*ழென்றல் முதலாம் வரைவோசை*" (வா.கு.வ. 687)

**முடிவுரை**

நாமதீப நிகண்டில் - குணநாமப் படலத்தில் ஒலிநிலை உத்திகள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. மேலும் ஒரு ஆசிரியனை இனங்காண்பதற்கும் அவ்வாசிரியனை மற்றோர் ஆசிரியனிடம் இருந்து வேறுபடுத்திக் காட்ட இவ்வுத்தி பயன்படுகின்றது. தற்கால இலக்கிய ஆசிரியர்களின் புதிய படைப்பிற்கும் அதன் சிறப்பிற்கும் இச்சொற்கள் சிறப்பான பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

**பார்வை நூல்கள்**

1. நாமதீப நிகண்டு - சிவசுப்பிரமணிக் கவிராயர்
2. நடையியல் - ஜெ. நீதிவாணன்
3. தொல்காப்பியப் பொருளதிகாரம் தொகுதி IIIவி- இளம்பூரணர் உரை

# பொதிகை நிகண்டில் தெய்வப் பெயர்கள்

கோ. ரேணுகா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

---

மொழி வளர்ச்சியில் சொற்களுக்குப் பல புதிய பொருள்கள் தோன்றுகின்றன. பழைய பொருள்கள் மறைகின்றன. எனவே, சொற்களுக்குப் பொருள்கூறும் பணி முக்கியமான பணியாக அமைந்துள்ளது.

தமிழ் மொழியில் சொற்களுக்குப் பொருள் கூறும் பணி தொல்காப்பியக் காலம் முதலே நடைபெற்று வந்துள்ளது. தொல்காப்பியம் நூற்பா நடையில் அமைந்த ஓர் இலக்கண நூலாகும். தொல்காப்பியத்தை அடியொற்றிச் சொற்களைத் தொகுத்துப் பல்வேறு வகைகளில் சொற்பொருள் கூறும் நிகண்டுகள் தோற்றம் பெறலாயின.

நிகண்டுகள் பெருகி வரும் சொற்கூட்டத்தினைப் பல்வேறு வகைகளில் பாகுபடுத்திப் பொருள் கூறியுள்ளன. தமிழ் நிகண்டுகளின் வளர்ச்சியில் பொதிகை நிகண்டின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் பொதிகை நிகண்டின் தெய்வப் பெயர்களை இக்கட்டுரையில் காணலாம்.

**நிகண்டு விளக்கம்**

நிகண்டு என்பது இச்சொற்கு இதுவே பொருளென்று சொற்கும் பொருட்கும் உள்ள ஆற்றலாகிய நியமம் அறிவிக்கும் கருவி நூல்.[1] இது இந்திய மொழிகளில் சொற்பொருள் விளக்கும் துறை நூல்களைக் குறிக்கும். பொதுச் சொல்லாக வழங்கப்படுகின்றது. எனினும் தமிழைப் பொறுத்த வரை இது யாப்பு வழிபட்டுச் சொற்பொருள் விளக்கும் துறை நூலைக் குறித்தற்கு ஆளப்பெறுகின்றது.

**பொதிகை நிகண்டு**

இந்நிகண்டின் ஆசிரியர் சாமிநாதக் கவிராயர் ஆவார். (சாமி கவிராசன் எனவும் அழைப்பர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த கல்லிடைக்குறிச்சி என்ற ஊரினர். காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இந்நிகண்டை அடுத்து 'சாமிநாதம்' என்ற பெயரில் ஓர் ஐந்திலக்கண நூலையும் இவர் செய்துள்ளார்.[2]

**பொதிகை நிகண்டின் அமைப்பு**

பொதிகை நிகண்டு முதல் பாகம், இரண்டாம் பாகம் என இருவேறு வகைகளில் காணப்படுகிறது.. ஒரு பகுதி விருத்த யாப்பினாலும் இன்னொரு பகுதி நூற்பா யாப்பினாலும் அமைந்துள்ளது. தற்சிறப்பு பாயிரம் ஒன்றை அடுத்து நூற்பகுதி அமைந்துள்ளது.

**தொகுதிப் பாகுபாடு**

பொதிகை நிகண்டு (10) பத்து தொகுதிகளை உடையது. 160 பக்கங்களை உள்ளடக்கியது. இவை 492 பாடல்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் இறுதிப் பாடல் கிடைக்கவில்லை.[3] இந்நிகண்டின் முதற்பகுதி சூடாமணி நிகண்டை ஒத்தது. இதன் கண தெய்வப் பெயர் முதல் ஒரு சொல் பல்பெயர்த்தொகுதி வரை அடங்கியுள்ளன. அவற்றுள் இறுதித் தொகை இது காறும் முழுமையாய்க் கிடைக்கவில்லை.

முதற்பகுதியில் உள்ள பத்துத் தொகுதிகளில் முதல் ஒன்பது தொகுதிகளுள்ளும் பாகுபாடு ஏதுமின்றி பாடல்கள் காணப்பெறுகின்றன. ஒவ்வொரு பாடலும் முடியுமிடத்து வலப்புறத்தில் எல்லாத் தொகுதிகளுக்குமான தொடர்பு எண்கள் கொடுக்கப் பெற்றுள்ளன. சுவடி வேறுபாடுகள் காணபெறும் இடங்களிலெல்லாம் உடுக்குறி போன்ற குறிகளிட்டு அடிக்குறிப்பில் அவற்றுக்கான வேற்று வடிவங்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

பத்தாவதாக உள்ள ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதி மட்டும் எதுகை முறையில் சொற்களை அமைத்து பொருள் கூறுகிறது. இவ்வியலில் ககர வெதுகை, ஞகர வெதுகை, முதலாக ழகர வெதுகையில் கிடைத்துள்ள பாடல்கள் வரை அச்சிடப் பெற்றுள்ளன.

**இரண்டாம் பகுதி**

இப்பகுதியில் ஒரு சொல் பல் பொருள் தொகுதிக்குரிய 2228 நூற்பாவின் தலைச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சொற்கள் அகர வருக்கம் முதல் வகர வருக்கம் வரை அமைந்துள்ளன.

நூற்பாக்களின் இடதுபுற ஓரத்தில் அப்பகுதி முழுவதற்குமான தொடர் எண்கள் குறிக்கப் பெற்றுள்ளன. உயிர்மெய் எழுத்துக்களுக்கான வருக்கங்களை, ககர வருக்கம் என்பது போல தலைப்பிட்டிருந்தாலும் அதன்கீழ் கா, கி, கீ, கு, கூ என்பன போல உள் தலைப்புகள் தரப்பெற்றுள்ளன. இப்பகுதியில் சுவடி வேறுபாடுகள் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளன.

உடுக்குறி போன்ற குறியீடுகட்குப் பதிலாக 1,2,3,4 என சிறய எண், குறியீடுகளைச் சுவடி வேறுபாடுகள் உள்ள இடத்தில் குறித்து, அவ்வவ் பக்கங்களின் கீழும் அடிக்குறிப்பில் அவற்றுக்குரிய வேற்று வடிவங்கள் தரப்பட்டுள்ளன.

பிற சுவடிகட்கும் பதிப்பிக்கப் பெற்ற சுவடிக்கும் நூற்பா வைப்பு முறையில் உள்ள மாற்றங்களும் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. இப்பதிப்பில், பொருண்மைச் சுட்டப்பெற்ற சொற்களின் அகர நிரல் பட்டியல் ஒன்று இருந்திருப்பின் பதிப்பின் பயன் மேலும் கூடியிருக்கும். இந்நிகண்டு ஒரு முறை மட்டுமே பதிப்பிக்கப் பெற்றது. அப்பதிப்பில் மூலம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

பத்து தொகுதிகள் மட்டும் முதல் பாகத்தில் அடங்கியுள்ளன. அவற்றுள் இறுதி தொகுதி இதுகாலும் முமையாகக் கிடைக்கவில்லை. அதன் முகப்பு ஏட்டில் ‘விரைவில் பிற தொகுதிகளும் வெளிவரும்’

என்ற குறிப்பு மட்டும் தரப் பெற்றுள்ளது. ஆனால் எஞ்சிய தொகுதிகள் குறித்து ஏதும் தெரியவில்லை. ஆசிரியர் வாழ்ந்த போதே முதல் தொகுதி பதிப்பிக்கப் பெற்றதெனத் தெரிவதால், அவர் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு என்பது தெளிவாகிறது.

**தெய்வப் பெயர்த்தொகுதி**

தெய்வம் என்னும் பெயர் கடவுளரின் பொது பெயராகக் கருதப்படுகிறது. மக்களைப் போலவே தெய்வம் சுட்டிய பெயரும் உயர்திணை என்னும் விளக்கத்தைத் தொல்காப்பியர் தந்துள்ளார்.

தமிழ் நிகண்டுகள் ஒரு பொருட்குப் பல்பெயர் உரைக்கும் பணியையே முதன்மைப் பணியாகத் தந்துள்ளன.

தெய்வங்களுள் யாருக்கு முதன்மை தருவது என்பது நூலாசிரியர் தம் சமயக் கொள்கையையும் சார்ந்துள்ளது எனலாம்.

சமண சமத்திற்குத் திவாகரத்திலும், சூடாமணியலும் (அருக தேவனுக்கு) முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

பொதிகை மற்றும் ஏனைய நிகண்டுகளில் சிவபெருமானுக்குரிய பெயர் முதலாகப் பிற தெய்வங்களின் பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன.

பிங்க நிகண்டில் கணபதி முதலிலும் சிவன் இரண்டாவதாகவும் இடம் பெற்றுள்ளன.

தெய்வப் பெயரடைவில் ஆண் தெய்வங்கள் முற்றிலும், பின்னர்ப் பெண் தெய்வங்களும் இடம் பெற்றுள்ளன.

**சிவன்**

பொதிகை நிகண்டில் காணப்பெறும் தெய்வங்களுள் சிவபெருமானக்கு நூற்றியொரு பெயர்கள் காணப்படுகின்றன. திவாகரத்தில் 64 பெயர்கள் சிவனுக்குத் தரப்பட்டுள்ளன. பிங்கல நிகண்டில் 97 பெயர்கள் உள்ளன.

நூற்றியொரு பெயர்களில் தனிச்சொல், கூட்டுச் சொல், வடச்சொல் போன்றவை இடம் பெற்றுள்ளன. திவாகரம், பிங்கலம் போன்றவற்றில் இல்லாத பெயர்கள் பொதிகை நிகண்டில் அதிகம் காணப்படுகின்றன.

பொதிகை நிகண்டில் இடம்பெற்றுள்ள சில சொற்கள் திவாகரத்திலும் சில பிங்கலத்தில் இடம் பெற்றுள்ளன. சில சொற்கள் மூன்றிலும் இடம் பெற்றுள்ளன. திவாகரத்திலும் பிங்கலத்திலும் பொதுவாக உள்ள சொற்கள் அட்டவணையில் உடுக்குறியீட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**பொதிகை நிகண்டில் காணப்பெறும் சிவன் பெயர்கள் 101**

| | | |
|---|---|---|
| 1. அங்கணன் | 37. சதாசிவன் | 70. பினாகி |
| 2. அண்ணல் | 38. சம்பு | 71. புயங்கன் |
| 3. அத்தன் | 39. சம்புருநாதன் | 72. புராரி |
| 4. அம்பன் | 40. சமதாற்பரியன் | 73. புலித்தோலான் |
| 6. அமர்கடவுள் | 41. சயம்பிறை | 74. புனிதன் |
| 7. அரன் | 42. சருவஞ்சன் | 75. பூதநாதன் |
| 8. அரவன் | 43. சித்தன் | 76. பெருமான் |
| 9. அரியான் | 44. சிம்புளாயினோன் | 77. பெம்மானி |
| 10. அடிலேந்தி | 45. சிரதரன் | 78. பேயோடாடி |
| 13. அனந்தன் | 46. சிற்பரன் | 79. போசனன் |
| 14. அனுபமன் | 47. சுதன் | 80.மகேசன் |
| 15. ஆதி | 48. சூலன் | 81. மங்கைபங்கன் |
| 16. ஈசன் | 49. சோதி | 82.மத்தாடி |
| 17. ஈசானன் | 50. ஞானி | 83.மத்தன் |
| 18. ஈசுரன் | 51. தத்துவாதீதன் | 84.மதகரியையுரித்தவன் |
| 19. உமாபதி | 52. தாணு | 85.மலைவில்லான் |
| 20.உருத்திரன் | 53. திகம்பரன் | 86.மறைமுதல் |
| 21. எண்குணன் | 54. நக்கன் | 87.மாதேவன் |
| 22.எண்டோளன் | 55. நந்தி | 88.மானேந்தி |
| 23.ஐம்முகன் | 56. நந்தி வண்ணன் | 89.முக்கண்ணன் |
| 24.கங்காளன் | 57. நித்தன் | 90.முகுந்தா |

25. கங்கை அணிவோன்
26. கண்ணுதலை
27. கபர்த்தி
28. கபாலி
29. கயிலையாளி
30. காமதகனன்
31. காலகாலன்
32. கிரியன்
33. கொன்றைசூடி
34. சங்கரன்
35. சஞ்சலன்
36. சடையோன்
58. நிமலன்
59. நீலகண்டன்
60. பகவன்
61. பங்கன்
62. பசுபதி
63. பரம்பன்
64. பரசுதரன்
65. பாண்டரங்கன்
66. பிச்சாடணன்
67. பிஞ்ஞகன்
68. பித்தன்
69. பிரான்
91. முதல்வன்
92. மூர்த்தி
93. மெய்யன்
94. யோகி
95. வயிரவன்
96. வரனகன்
97. வாமதேவன்
98. விடையோன்
99. விதுவணிவோன்
100. விமலன்
101 வெண்ணீற்றன்

**கூட்டுச் சொல்**

இரண்டு அல்லது அதற்கு மேலான சொற்கள் இணைந்து அமைப்பிலும், பொருளிலும் மாறுபட்டு, தனித்தன்மை பெற்றுக் காணப்படின் அது கூட்டுச் சொல் (compound word) ஆகும்.

1. உமாபதி (2)
2. சயம்பிறை (2)
3. சதாசிவன் (2)
4. மானேந்தி (2)
5. பேயோடாடி (2)
6. நீலகண்டன் (2)
7. மங்கைபங்கன் (2)
8. கொன்றை சூடி (2)
9. கங்கை அணிவோன் (2)
10. கயிலையாளி (2)
11. புலித்தோலான் (2)
12. அழலாடி (2)
13. நந்தி வண்ணன் (2)
14. கண்ணுதலை (2)
15. ஐம்முகன் (2)
16. பூதநாதன் (2)
17. மறை முதல் (2)
18. மதகரியை யுரித்தவன் (2)
19. அமர் கடவுள் (2)
20. சமதாற் பரியன் (2)
21. சம்புருநாதன் (2)
22. சிம்புளாயினோன் (2)
23. விதுவணிவோன் (2)
24. எண்குணன் (2)
25. எண்டோளன் (2)

**வடச்சொல்**

பொதிகை நிகண்டில் காணப்பெறும் 101 சிவன் பெயர்களில் பின்வரும் வடசொற்களும் இடம்பெற்றுள்ளன.

| | |
|---|---|
| 1. அத்தன் | 10. சம்புருநாதன் |
| 2. அமலன் | 11. சயம்பிறை |
| 3. அரவன் | 12. சிரதரன் |
| 4. அனந்தன் | 13. பசுபதி |
| 5. ஆதி | 14. பரமன் |
| 6. உமாபதி | 15. பித்தன் |
| 7. எண்குணன் | 16. பூதநாதன் |
| 8. கபர்த்தி | 17. மறைமுதல் |
| 9. சங்கரன் | 18. மூர்த்தி |

பொதிகை நிகண்டில் இடம்பெற்றுள்ள நூற்றியொரு பெயர்களில் பல்வேறு வகையான சொற்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் 58 தனிச் சொற்களாகும். 24 இருசொல் கூட்டாகவும், ஒன்று முச்சொல் கூட்டாகவும் 18 சொற்கள் வடசொற்களாகவும் காணப்படுகின்றன.

பொதிகை நிகண்டில் தெய்வப் பெயர்த் தொகுதியில் தெய்வங்களின் பெயர்கள், தெய்வம் மற்றும் ஆன்மீகம் தொடர்பான சொற்கள், காலம், நாழிகை தொடர்பான சொற்கள், கோள்கள் தொடர்பான சொற்கள் நட்சத்திரம் தொடர்பான சொற்கள் என 146 தலைச்சொற்கள் அடங்கியுள்ளன.

திவாகர நிகண்டில் மேற்கூறிய சொற்கள் இடம் பெற்றிருப்பினும் அவற்றிற்குரிய ஒரு பொருட் பன்மொழிகளைத் தருவதில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகு வேறுபாடுகளைப் பின்வரும் அட்டவணைகளில் காணலாம்.

## தெய்வங்களின் பெயர்கள்

| வ.எண் | தெய்வப் பெயர் தலைச்சொல் | பொதிகை நிகண்டு | திவாகர நிகண்டு |
|---|---|---|---|
| 1. | இந்திரன் | 38 | 21 |
| 2. | இந்திராணி | 5 | 4 |
| 3. | உமை | 98 | 8 |
| 4. | ஐயனார் | 23 | 4 |
| 5. | கங்கை | 20 | 6 |
| 6. | காடுகாள் | 8 | 7 |
| 7. | குபேரன் | 21 | -- |
| 8. | சரஸ்வதி | 14 | 16 |
| 9. | சிவன் | 101 | 64 |
| 10. | சேட்டை | 8 | 8 |
| 11. | திருமகள் | 17 | 12 |
| 12. | திருமால் | 80 | 38 |
| 13. | தெய்வப் பெண் | 5 | 2 |
| 14. | தேவர் பொதுப்பெயர் | 38 | 10 |
| 15. | பலதேவன் | 10 | - |
| 16. | பிரமன் | 30 | 27 |
| 17. | மதனன் | 32 | 14 |
| 18. | முப்பத்து முத்தேவர் | 33 | - |
| 19. | முருகன் | 50 | 26 |
| 20. | வயிரவன் | 19 | 2 |
| 21. | விநாயகன் | 12 | 6 |
| 22. | வீரபத்திரன் | 10 | - |

**தெய்வம் தொடர்பான சொற்கள்**

| வ.எண் | தெய்வம் தொடர்பான சொற்கள் | பொதிகை நிகண்டு | திவாகர நிகண்டு |
|---|---|---|---|
| 1. | அரக்கர் | 20 | - |
| 2. | அரக்கர் பொதுப் பெயர் | 5 | - |
| 3. | உழிக்காற்று | 1 | - |
| 4. | காட்டழல் | 2 | - |
| 5. | காலன் | 26 | 4 |
| 6. | காலன்கணக்காளர் | 2 | - |
| 7. | காற்று | 42 | 20 |
| 8. | கின்னரர் | 2 | 3 |
| 9. | கீழ்க்காற்று | 1 | 1 |
| 10. | சூழல்காற்று | 2 | 1 |
| 11. | சூரியகிரகணம் | 3 | - |
| 12. | சூரியமண்டலம் | 3 | - |
| 13. | தீக்கடவுள் | 1 | 1 |
| 14. | தீக்கடைக்கோல் | 2 | 1 |
| 15. | தீக்கொள்ளி | 3 | 2 |
| 16. | தீநடை | 4 | - |
| 17. | தூமம் | 9 | - |
| 18. | தென்றல் | 10 | 4 |
| 19. | நீர் | 50 | 19 |
| 20. | நெருப்பு | 41 | 21 |
| 21. | பனிக்காற்று | 2 | 2 |
| 22. | புகை உறை | 3 | - |
| 23. | பூதகணம் | 6 | 5 |
| 24. | பேய் | 31 | 12 |
| 25. | மேல்காற்று | 1 | 1 |
| 26. | வட்டநிலை | 1 | 1 |
| 27. | வடகாற்று | 2 | 2 |
| 28. | வடவாமுகாக்கினி | 4 | 4 |
| 29 | வருணன் | 8 | 1 |
| 30. | வித்தியாதரர் | 2 | 2 |
| 31. | வெயில் | 2 | - |

**தொகுப்புரை**

☆ நிகண்டுகளின் விளக்கமும், பொதிகை நிகண்டின் அமைப்பும் கூறப்பட்டுள்ளது.

☆ தெய்வப் பெயர் தொகுதியின் அமைப்பு விளக்கப்பட்டள்ளது.

☆ பொதிகை நிகண்டில் காணப்பெறும் 101 சிவன்பெயர்கள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

☆ தெய்வப் பெயர்களில் கூட்டுச் சொற்கள் கூறப்பட்டள்ளன.

☆ வட சொல்லில் தெய்வப்பெயர்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

☆ இக்கட்டுரையின் முடிவில் பொதிகை நிகண்டிலும், திவாகர நிகண்டிலும் காணப்பெறும் 31 தெய்வப் பெயர்கள் அட்டவணை மூலம் ஒப்பிடப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்பு**

1. வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ப.60.
2. மா. சற்குணம், தமிழ் நிகண்டுகள் ஆய்வு, ப. 117.
3. மேலது

# அகராதி நிகண்டு -2 அமைப்பும் உள்ளடக்கமும்

அ. தீபா
தஞ்சாவூர்

தமிழ் அகராதிகளின் வளர்ச்சிக்கு மூலமாய் அமைவன நிகண்டுகளாகும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டு இறுதியில் தோன்றிய திவாகர நிகண்டு முதலாக 20-ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு வகையான நிகண்டுகள் தமிழில் தோன்றி மலர்ந்து தமிழ் மொழியின் சொற்தொகுதி பெருகிட வழிவகை செய்தன. நிகண்டுகள் சொற்களைப் பல்வேறு சொற்றொகுதிகளாகப் பிரித்து வழங்கியுள்ளன. நிகண்டுகள் நூற்பா வடிவில் அமைந்துள்ளன. இவ்வடிவ அமைப்பு 20-ஆம் நூற்றாண்டு வரை சிறு சிறு வேறுபாடுகளுடன் பின்பற்றப்பட்டுள்ளது. நிகண்டுகள் நூற்பா வடிவில் பொருள் கூறியுள்ளமையால் நோக்கீடு எனும் தன்மையை அவற்றில் காண இயலாது. குறிப்பிட்ட ஒரு சொல்லையும் அதன் பொருளையும் எளிதாகத் தெரிந்து கொள்ள இயலாது. நோக்கீட்டுத் தன்மையை எளிதுபடுத்தும் நோக்கில் சிறு சிறு மாற்றங்கள் நிகண்டுகளில் அவ்வப்பொழுது செயல்படுத்தப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்க நிலையில் அமைந்தது 1594-ல் சிதம்பர இரேவண சித்தர் என்பரால் தொகுக்கப்பட்ட அகராதி நிகண்டாகும். இந்நிகண்டில் நூற்பாக்கள் இடம்பெற்றிருப்பினும் சொற்கள் முதல் எழுத்தளவில் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## அகராதி நிகண்டு -2 தோற்றம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தினால் டாக்கடர் இரா. நாகசாமி அவர்களால் தொகுத்து வழங்கப்பட்ட உரைநடையிலான அகராதி ஒன்று "அகராதி நிகண்டு"

எனும் பெயரில் 1983 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நிகண்டு ஆழ்வார் திருநகரியிலிருந்து பெறப்பட்ட 101 ஏடுகளில் இருந்து பதிப்பித்து எழுதப்பட்டுள்ளது. இந்நிகண்டை தொகுத்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முதல் எழுத்து மற்றும் இரண்டாம் எழுத்தளவில் சொற்கள் அகர வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. சதுரகராதி தோன்றிய பிறகு இந்நூல் தொகுக்கப்பெற்று இருக்க வேண்டும். அதனால் இந்நூல் 19-ம் நூற்றாண்டில் தொக்கப்பட்டிருக்கலாம். இந்நிகண்டு சிதம்பர இரேவண சித்திலிருந்து வேறுபட்டது. ஓரிரண்டு ஏடுகள் ஒடிந்தும் இராமபான பூச்சியினால் துளைக்கப்பட்டும் உள்ளன. சுவடி முழுவதும் உள்ளது. ஆயினும் ஆசிரியர் பலசொற்களை விசாரித்து எழுத வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். சுவடியில் சில சொற்களுக்குப் பொருள் எழுதப்படாமல் விடுபட்டுள்ளது. சில சொல்வர்க்கங்கள் இல்லை. இந்நிகண்டில் சுமார் 7500 மூலச் சொற்களும் 22500 சொற்களும் இடம்பெற்றுள்ளன.

**அகராதி உநிகண்டின் அமைப்பு**

அகராதி நிகண்டு இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது.

- முதலாவது குற்றெழுத்து அகராதி
- இரண்டாவது நெட்டெழுத்து அகராதி

குற்றெழுத்து அகராதியில் குற்றெழுத்துச் சொற்களும் நெட்டெழுத்து அகராதியில் நெட்டெழுத்துச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

| குற்றெழுத்து அகராதி | நெட்டெழுத்து அகராதி |
|---|---|
| 1. அகரம் | 1. ஆகாரம் |
| 2. இகரம் | 2. ஈகாரம் |
| 3. உகரம் | 3. ஊகாரம் |
| 4. எகரம் | 4. ஏகாரம் |
| 5. ஒகரம் | 5. ஐகாரம் |
| 6. ககரம் | 6. ஓகாரம் |
| 7. ககர விகாரம் | 7. ககர ஆகாரம் |
| 8. ககர உகரம் | 8. ககர ஈகாரம் |
| 9. ககர எகரம் | 9. ககர ஊகாரம் |

10. ககர ஒகரம்
11. சகரம்
12. சகர இகரம்
13. சகர உகரம்
14. சகர எகரம்
15. சகர ஒகரம்
16. ஞகரம்
17. தகரம்
18.தகர இகரம்
19. தகர உகரம்
20. தகர எகரம்
21. தகர ஒகரம்
22. பகரம்
23. பகரம் இகரம்
24. பகர உகரம்
25. பகர எகரம்
26. பகர ஒகரம்
27. மகரம்
28. மகர இகரம்
29. மகர உகரம்
30. மகர எகரம்
31. மகர ஒகரம்
32. யகரம்
33. வகரம்
34. வகர இகரம்
35. வகர எகரம்

10. ககர ஏகாரம்
11. ககர ஐகாரம்
12. ககர ஓகாரம்
13. சகர ஆகாரம்
14. சகர ஈகாரம்
15. சகர ஊகாரம்
16. சகர ஏகாரம்
17. சகர ஐகாரம்
18. சகர ஓகாரம்
19. ஞகர ஆகாரம்
20. தகர ஆகாரம்
21. தகர ஈகாரம்
22. தகர ஊகாரம்
23. தகர ஏகாரம்
24. தகர ஐகாரம்
25. தகர ஓகாரம்
26. நகர ஆகாரம்
27. நகர ஈகாரம்
28. நகர ஊகாரம்
29. நகர ஏகாரம்
30. நகர ஐகாரம்
31. நகர ஓகாரம்
32. பகர ஆகாரம்
33. பகர ஈகாரம்
34. பகர ஊகாரம்
35. பகர ஏகாரம்
36. பகர ஐகாரம்
37. பகர ஓகாரம்
38. மகர ஆகாரம்
39. மகர ஈகாரம்
40. மகர ஊகாரம்
41. மகர ஏகாரம்
42. மகர ஐகாரம்

என்பன இடம் பெற்றுள்ளன. இப்பகுப்பு இரேவண சித்தரின் அகராதி நிகண்டின் பகுப்பை ஒத்தக் காணப்படுகின்றது (அகராதி, ககராதி, சகராதி ...........).

மேற்கண்ட 77 சமதலைப்புகளில் சொற்கள் உரை நடைவடிவில் பொருள்களுடன் தரப்பட்டுள்ளன. இந்நிகண்டில் ஔகாரம், நகர குறில் வர்க்கம், ய,வ என்பனவற்றிற்குரிய நெடில் வர்க்கங்கள் இடம் பெறவில்லை.

பல வர்க்கங்களுக்கு மிக குறைவான சொற்களே பட்டியலிடப்பட்டுள்ளன. சான்றாக, சை, தை, து, தீ, தே, பீ பை, பெ, மீ, மூ, மே, மை என்பனவற்றிற்கு மிகக் குறைவான சொற்களே இடம்பெற்றுள்ளன.

**பதிப்பாசிரியர் சுட்டும் கருத்துக்கள்**

● இந்நிகண்டில் பலசொற்கள் பிறழ்ந்து காணப்படுகின்றன.

| சுவடியில் உள்ளது | | செஞ்சொல் | பொருள் |
|---|---|---|---|
| குப்பாவம் | ← | குப்பாயம் | சட்டை |
| கொலம் | ← | கோலம் | நீரேட்டம் |
| கொறன் | ← | கோற்றேன் | தேன்கூடு |
| சல்லி | ← | சில்லி | வடம், கீரை, தேருருள், கீழ்வீடு |
| சலிகம் | ← | சலீகம் | பூசல் |

● சில சொற்களின் முதல் எழுத்துக்கள் விடப்பட்டுள்ளன.

தீசி ← உதீசி - வடதிசை

துகம் ← மதுகம் - தரா

தும்பரம் ← உதும்பரம் - செம்பு

● சி எனும் எழுத்து தீ என மாறிவந்துள்ளது.

தேசி → தேதி

● குறில் நெடிலாக மாற்றம் பெற்றுள்ளது.

தொகம் → தோகம்

- நெடில் குறிலாக மாற்றம் பெற்றுள்ளது.

  மோத்தை → மொத்தை - வெள்ளாட்டேது

- பகர இகரம் மகர இகரமாக மாறியுள்ளதும்

  பின்னம் → மின்னம்

- சிவன் என்னும் சொல்லுக்கு விட்டுணு என்னும் பொருளும் புத்தன் என்னும் சொல்லுக்கு நெடுமால் என்ற பொருளும் தரப்பட்டுள்ளன.

- காலவழக்கையும் வட்டார வழக்கையும் அறிந்து கொள்ளச் சொற்களும் பொருள்களும் சுவடியில் உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டுள்ளன. தெளிவு வேண்டும் இடத்தில் அடைப்பு குறிகளும் நட்சத்திரக்குறிகளும் பயன்பட்டுள்ளன.

### முடிவுரை

நிகண்டு எனும் பெயரில் 19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்துள்ள அகராதி நிகண்டு நிகண்டுகளைப்போல் நூற்பா வடிவில் அல்லாமல் உரைநடை வடிவில் அமைந்துள்ளது. அகராதி என்ற பெயரும் நிகண்டு என்ற பெயரும் ஒருங்கே அமைந்து காணப்படுகிறது. இந்நூலின் வகைப்பாடு பிறநிகண்டுகளில் இல்லாதவாறு ஒரு புதிய முயற்சியாக உள்ளது.

### பார்வை நூல்

இரா. நாகசாமி (ப.ஆ.), அகராதி, நிகண்டு, 1983, மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், திருவான்மியூர், சென்னை.

# தமிழ் அகராதியியல் மும்மரபுகள்

எச். சித்திரபுத்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

மொழியைக் கற்றுக் கொள்வதற்குத் துணை நிற்பன நோக்கு நூல்கள். நோக்கு நூல்களில் நிகண்டுகளும் அகராதிகளும் முதலிடம் பெறுகின்றன. தமிழ் அகராதியியல் தோற்றத்திற்குரிய விதைகள் தொல்காப்பியத்தில் விதைக்கப்பட்டுள்ளன என்பது எவரும் அறிந்த ஒன்றே. தமிழ் அகராதியியல் வளர்ச்சிக்கு மரபிலக்கணங்கள் சொல்லுக்குப் பொருள் தரும் நிலையில் முன்கையெடுத்துள்ளன. தொல்காப்பியரின் உரியியல் பிற்கால இலக்கணங்களிலும் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பிய இடையியல், மரபியல் செய்திகளும் அகராதியியல் கூறுகளுடையன. தொல்காப்பிய உரியியலே நிகண்டுகளின் தோற்றுவாய் எனப் பலவாறு கருத்துக்கள் தெரிவிக்கப் பெறினும் தொல்காப்பியரின் உரியியலுக்கும் நிகண்டின் சொற்றொகுதிக்கும் பெரும் வேறுபாடு உண்டு. தொல்காப்பிய உரியியல் பெயர் மற்றும் வினைச் சொற்களிலிருந்து மாறுபட்ட செயல்பாடுடைய குறிப்பிட்ட ஒரு தொகையிலான சொற்களைப் பற்றியது; இலக்கிய வழக்கில் பயிலாத, வேறுபட்ட இலக்கணம் மற்றும் செயல்பாடுடைய சொற்களைப் பற்றியது. மரபிலக்கணங்களின் உரியியலுக்கும், நிகண்டுகளுக்கும் அகராதிகளுக்கும் இடையே ஒரு சில ஒற்றுமைகள் காணப்படினும் அவற்றிற்கிடையே வேறுபாடுகள் பல காணப்படுகின்றன.

தமிழில் காணப்படும் மும்மரபுகளான 1. இலக்கண மரபு 2. நிகண்டு மரபு 3. அகராதி மரபு என்பனவற்றிற்கு இடையே காணப்படும் வேற்றுமைகளைப் பின்வரும் அட்டவணையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

| வ. எண் | அகராதியியல் கூறுகள்/உத்திகள் | இலக்கண மரபு | நிகண்டு மரபு | அகராதி மரபு |
|---|---|---|---|---|
| 1. | காலம் | தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரை கி.மு. 774- 19-நூ வரை | 8ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை | 1732 முதல் (ஒரு மொழி) 1679 முதல் (இருமொழி) |
| 2. | அமைப்பு | சூத்திரம் | சூத்திரம் | உரைநடை |
| 3. | தலைச்சொல் | உரிச்சொல் - கடினச் சொல் | பொருட்புலங்கள் - சொற்பட்டியல் | வகை-1 = பிரிவுகள் வகை-2 =உரைநடை/பொது |
| 4. | சொல் அளவு | தொல் -120, நேமி-29, நன்-45, இவி-69, முத்து -52 | . . . . ± | சொல் எண்ணிக்கை அகராதியின் தன்மைக்கு ஏற்பச் சொல் எண்ணிக்கை± |
| 5. | பயன்பாட்டாளர் | இலக்கணம்/கற்போர் கற்றறிந்தவர் | ஆசிரியர் → மாணவர் | பொது நோக்காளர்- சிறப்பு நோக்காளர் |
| 6. | நோக்கும் தன்மை | மனனம் (?) | மனனம் | வகை-1 - பலபிரிவுகள் - பிரிவுகளில் அகர வரிசை வகை-2 - அகர வரிசை |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | பயன்பாடு | உரிச்சொல்லின் பயன்பாடு - வரையறை | 1. இலக்கியம் படைத்தல்<br>2. சொற்றொகுதி காத்தல்<br>3. ஒருபொருட் பன் மொழி அறிதல்<br>4. பலபொருட்களை அறிதல்<br>5. தொகைச் சொல் அறிதல் | காத்தல் (Store- House)<br>அளித்தல் (Clearing - House)<br>ஐயம் தீர்த்தல் (Court-House) |
| 8. | இலக்கணம் தெரிதல் | வாய்ப்பில்லை | வாய்ப்பில்லை | அகராதியின் தன்மைக்கு ஏற்ப வாய்ப்புண்டு |
| 9. | நோக்கீடு | கடினம் | பல தொகுதிகளையும் நோக்கி அறிதல் வேண்டும்.ஐயத்திற்குரிய சொல்பற்றிய முன்னறிவு - சார்ந்துள்ள புலம் | எளிமை |
| 10. | பொருள் பகுதி | ஒரு பொருள் பலசொல் பலபொருள் ஒரு சொல் ஒப்புருச் சொல்- அறிதல் | ஒருபொருள் பலசொல் பல பொருள் ஒரு சொல் தொகைச் சொற்கள் - பயன்பாடு | மொழி அமைப்பு, சொல் பொருள், சொல்லின் பயன்பாடு, வரையறை, பிற செய்திகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | தலைச்சொல் பகுதி | உரிச்சொற்கள் - தலைச்சொல் நூற்பாவில் அமைந்திருத்தல் | தலைச்சொல் நூற்பாவின் முதல் அல்லது இறுதிச் சொல்லாக அல்லது பிற வழிகளில் அமைக்கப்பட்டிருத்தல் | வினை/பெயர் அடிகள் பழைய அகராதிகளில் செய்கிறது வடிவம் |
| 12. | ஒப்புருச்சொல் | முயற்சியினால் கண்டறியலாம் | கவனத்தில் கொள்ளப் படவில்லை | அகராதியின் தன்மைக்கு ஏற்பத் தனிச் சொல்லாகத் தரப்பெறும் |
| 13. | முன்னுரைப் பகுதி | உரிச்சொல் பற்றிய விளக்கம் (உரிச்சொற் கிளவி)......... | கடவுள் வாழ்த்து / காப்புச் செய்யுள் பொருட்புலங்கள் | அகராதியின் தன்மைக்கு ஏற்ப முழுநிலையிலான / சிறிய முன்னுரைப் பகுதி |
| 14. | சாதிய / வாட்டார வழக்குகள் | இல்லை | ஆய்ந்தறிதல் வேண்டும் | தலைச்சொல்லாக இடம்பெறும் |
| 15. | குறிப்பான்கள் விளக்கக்குறிப்புகள் | இல்லை | இல்லை | அகராதியின் தன்மைக்கு ஏற்பப் பயன்படுத்தப் பெறும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | பிறமொழிச் சொற்களின்பயன்பாடு | இல்லை - (கண்டறிதல் வேண்டும்) | வடமொழிச் சொற்கள் அதிகமாகப் பயன் படுத்தப்பெறுதல் | தலைச்சொல்லாக / பொருளாகப் பயன் படுத்தப்பெறுதல் |
| 17. | சொல்லாக்க வாய்ப்பு | இல்லை | மிக அதிகம் | வழக்கில் உள்ளன மட்டும் பயன்படுத்தப் பெறுதல் |
| 18. | தற்காலப் பயன்பாடு | இலக்கணத்தின் ஒரு பகுதியாக மட்டும் தெரிந்து கொள்ளுதல் | பொதுவாகப் பயன் படுத்தப் பெறுவதில்லை | பயன்பாடு அதிகம் |
| 19. | தொடர் பணி | இல்லை | இல்லை | பல்வேறு வகையான அகராதிகள் படைக்கப் பெறுதல் |
| 20. | மொழிகற்கும் வாய்ப்பு | இல்லை | இல்லை | உண்டு |

மேற்கண்டவாறு மூன்று மரபுகளுக்கும் இடையே பலவேறுபாடுகள் காணப்படுகின்றன. தற்கால மொழிக் கல்வியில் இலக்கண மரபும் நிகண்டு மரபும் முற்றிலும் வழக்கிழக்கின்ற சூழல் நிலவுகின்றது. அகராதி மரபு பல்வகைகளில் பல்கிப் பெருகி மின்னணு அகராதிகளாக (Electronic Dictionaries) உருப்பெற்று வருகின்றது.

**துணை நூற்கள்**

சித்திரபுத்திரன், எச்., 2002, தமிழ் அகராதியியல், அனன்யா, தஞ்சாவூர்.

சித்திரபுத்திரன், எச்., 2004, சொல்லும் பொருளும், அகரம், தஞ்சாவூர்.

# நீரரர் நிகண்டின் உள்ளடக்கமும் அமைப்பும்

இரா. வீரா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பொதுவாக ஒரு சொல் ஒரு பொருளை மட்டுமே குறிக்கும் இலட்சிய நிலை எந்தவொரு மொழியிலும் இல்லை என்பது மொழியியலறிஞர்களின் கருத்து. ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பல சொற்கள் இருப்பதைக் காணலாம். தொடக்கத்தில் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்ற நிலைதான் இருந்திருக்கவேண்டும். காலப்போக்கில் நுணுக்கமான பொருளை உணர்த்தும் நிலை உருவானதால் பல சொற்கள் தேவைப்பட்டிருக்கலாம்.

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அது காலப் போக்கில் பெறுகின்ற மாறுதல்களின் வளர்ச்சியாகும். சொல்லின் வளர்ச்சியே அன்றிச் சொற்களின் பொருள்களில் ஏற்படும் வளர்ச்சியுங்கூடச் சொல் வளர்ச்சியாகின்றது. எனவே சொல் வளர்ச்சி உயர்நிலை வளர்ச்சி, இடைநிலை வளர்ச்சி என்ற இரு வகைகளில் அடங்கும். உயர்நிலை வளர்ச்சி ஓர் அளவு நிலை வளர்ச்சியாகும். இது ஒரு மொழியில் சொற்கள் பெருகிவரும் நிலையைச் சுட்டும். இடைநிலை வளர்ச்சி ஒரு சொல்லின் தரத்தில் ஏற்படும் வளர்ச்சியாகும் என்று எச்.சித்திரபுத்திரன் கூறுகிறார்.

நீரரர் நிகண்டில் இடம் பெற்றுள்ள சொல் மற்றும் பொருள்களின் எண்ணிக்கை குறித்த செய்திகள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.

**ஆசிரியர் வரலாறு:**

நீரரர் நிகண்டின் ஆசிரியர் ஈழத்துப் பூராடனார். உரையாசிரியர் திருமதி பி.ய.செல்வராசகோபால்,

பதிப்பாசிரியர் செ.இதயஜோதி பென்சமின் 1941-இல் வெளிவந்தது.

1938 ஈழகேசரி ஆண்டு மடலில் பிரம்மதிருதி சதாசிவ ஐயரவர்கள் மட்டக்களப்பு வயற்செய்கை பற்றியோர் கட்டுரை வரைந்திருந்தார். இவற்றுள் மட்டக்களப்புச் சொல் நூல் புத்தக வடிவத்தில் வெளிவந்துவிட்டது. இந்நிகண்டு செய்யுள் வடிவிலானது.

**நூல் வரலாறு**

"இலங்கை
இலங்கிரு கிழக்கில் இசைநெறி மட்டும்
களப்பினில் நீரரர் கவினுற இசைக்கும்
உளப்பண் புறவே உறைதமிழ்க் கடலை
அங்கை கொண்டள் ளாசை யில்நான்
செங்கை நுரையே சேர்த்தது போலச்
செய்நூல் நீரரர் நிகண்டெனப் பேர்கொள்"

இந்நிகண்டு,

1. உயர்திணைப் பெயர் மஞ்சரி
2. அஃறிணைப் பெயர் மஞ்சரி
3. தொழிற்பெயர் மஞ்சரி
4. இடப்பெயர் மஞ்சரி
5. கலாச்சாரச் சொல் மஞ்சரி

என்னும் ஐந்து மஞ்சரிகளை உடையது.

**நீரரர் நிகண்டின் உள்ளடக்கம்:**

நிகண்டுகள் என்பன சூத்திர நடையில் அமைந்த அகராதிகளாகும். தமிழ் அகராதி வரலாற்றில் நிகண்டுகள் நீண்ட காலக்கட்டத்தை அடைத்துக் கொண்டுள்ளன. கி.பி.8-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு வகையான நிகண்டுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

நிகண்டுகளின் முக்கியப் பணி இலக்கியங்களை விளக்கிக் கொள்வதற்கும் புதிதாக இலக்கியங்களைப் படைப்பதற்கும் துணை நிற்பதாகும். நிகண்டுகளின் சொற்கள், பொதுவாகப் பொருட்புலம் மற்றும் கருத்து வகைப்பாட்டின் அடிப்படையில் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

நிகண்டுகளில் ஒரு சொல் ஒன்றிற்கு மேற்பட்ட தொகுதிகளில் இடம் பெற்றிருக்கும். நிகண்டு சூத்திர நடையில் இருப்பதால் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு தேவையான இடத்துப் பயன்படுத்தும் முறையில் உள்ளது. ஒரு சொல் பல்பொருள், ஒரு பொருட் பன்மொழி, தொகைப்பற்றியச் செய்திகள் நிகண்டுகளில் சிறப்பாக இடம் பெற்றிருந்தன.

சொற்களின் இலக்கணப் பண்புகளை அறிந்து கொள்ள நிகண்டுகளில் வழிவகை செய்யப்படவில்லை. தமிழில் ஓரளவு புலமை பெற்றவரே நிகண்டுகளை விரைவாகவும், பயனுள்ள வகையிலும் கற்றுக்கொள்ள இயலும். நிகண்டுகளில் சொற்களின் எண்ணிக்கை அதிகமானபோது கற்றவர்களுக்குக்கூட நிகண்டுகளைக்கையாளுவதில் சிரமம் ஏற்பட்டது.

உயர்திணைப் பெயர் மஞ்சரி

| வ.எண். | வகைகள் | தலைச்சொல் | பொருள் |
|---|---|---|---|
| 1. | மக்கட் பெயர்த் தொகுதி உறவுப் பெயர்கள் | 39 | 27 |
| 2. | சாதிப் பெயர்கள் | 10 | - |
| 3. | முக்குவக் குடிகள் | 10 | 3 |
| 4. | வயர் செய்கையாளர் பெயர் | 5 | 4 |
| 5. | பண்பிகந்தாரைச் சுட்டும் பெயர்கள் | 7 | 6 |
| 6. | மந்திர வித்தையாளர் பெயர் | 4 | 4 |
| 7. | பேய்க்கணம் | 13 | - |
| | | 88 | 34 |

**உறவுப் பெயர்கள் தரப்பட்டுள்ள நூற்பா சான்றிக்காக:**

*அன்னையர் பிதாவின் றிடுவாண் டெத்தப் பாப்பெயரினார்*
*மின்னலிடை யராயினில் மிளிர்பெயர் பெண்பெத் தம்மாவா*
*மன்னவ ரடிவரு மருத்தவ ராம்பே ரன்பேத்தி*
*தென்னவர் பொதுப்பெயர்த்தொகையபெத் தப்புபெத் தம்மாவே*
(மக்கட் பெயர்த் தொகுதி உறவு பெயர்நூ.1)

**அஃறிணைப் பெயர் மஞ்சரி**

| வ.எண். | வகைகள் | தலைச்சொல் | பொருள் |
|---|---|---|---|
| 1. | மீன் வகைகள் | 67 | - |
| 2. | தாவரம் | 62 | - |
| 3. | கொடி | 15 | - |
| 4. | நெல்வகை | 14 | - |
| 5. | அரிசியின் வகை | 4 | - |
| 6. | அரிசியின் உட்பொருள்கள் | 6 | - |
| | | 168 | - |

**தொழிற் பெயர் மஞ்சரி**

| வ.எண். | வகைகள் | தலைச்சொல் | பொருள் |
|---|---|---|---|
| 1. | மீன் பிடித் தொழிற் சொற்கள் | 32 | 25 |
| 2. | நெசவுத் தொழிற் சொற்கள் | 11 | 2 |
| 3. | வேளாண்மைத் தொழிற் சொற்கள் | 30 | 25 |
| 4. | வேளாண்மை வெட்டுத் தொழிற் சொற்கள் | 88 | 76 |
| | | 161 | 128 |

**இடப்பெயர் மஞ்சரி**

| வ.எண். | வகைகள் | தலைச்சொல் | பொருள் |
|---|---|---|---|
| 1. | வெற்றிலைத் தோட்டப் பெயர்கள் | 9 | 9 |
| 2. | வயல் நிலம் | 9 | 9 |
| 3. | வயலிடப் பெயர்கள் | 22 | 22 |
| 4. | நெல் விளையிடப் பெயர் | 11 | 6 |
| 5. | வயலின் இடங்கள் | 5 | 7 |
| | | 56 | 51 |

**கலாச்சாரச் சொல் மஞ்சரி**

| வ.எண். | வகைகள் | தலைச்சொல் | பொருள் |
|---|---|---|---|
| 1. | ஆபரணப் பெயர்களும் முடி அமைப்பும் | 10 | 28 |
| 2. | அரிசியாலாம் உணவு வகைப்பேர் | 12 | 12 |
| 3. | கூத்து வகைப் பெயர் | 39 | 27 |
| 4. | ஆடல் வகை | 18 | 2 |
| 5. | மந்திர வித்தைப் பெயர்கள் | 25 | 7 |
| 6. | கிணறு பற்றிய தொழில் நுட்பச்சொற்கள் | 5 | 3 |
| | | 109 | 79 |

**முடிவுரை :**

நீரரர் நிகண்டின் உள்ளடக்க அமைப்பு, சொல் மற்றும் பொருள்களின் எண்ணிக்கை குறித்த செய்திகள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. நீரரர் நிகண்டின் ஆசிரியர் ஈழத்துப் பூராடனார் மட்டக்களப்பு வயற்செய்கை பற்றி கூறப்பட்டுள்ளது. பொருள் எண்ணிக்கைப் பாகுபாட்டில் தலைச்சொற்களின் பொருள் எண்ணிக்கைப் பற்றிய செய்திகள் சுட்டப்பெற்றுள்ளன.

**துணை நூற் பட்டியல்**


சித்திரபுத்திரன், எச்.,2004 **அகராதிக் கலைக் கையேடு** அகராதியியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

சித்திரபுத்திரன், எச்.2004 **சொல்லும் பொருளும்** அன்னம் அகரம் தஞ்சாவூர்.

ஜெயதேவன், வ.1985 **தமிழ் அகராதி வளர்ச்சி வரலாறு** ஐந்திணைப் பதிப்பகம் சென்னை.